
கோகுலம்

GOKULAM

ஜனவரி' 86 ரூ 2.





ஜோன் அஃப் ஆர்க்

தோற்றம்: 6-1-1412 மறைவு: 30-5-1431



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.



புகைப்படம்: எம். நடராஜன்

1986 ஜனவரி இதழ்
மலர் 3 இதழ் 12
தனிப்பிரதி ரூ. 2.
ஆண்டுச் சந்தா ரூ. 24/-
கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் எங்களின் புத்தாண்டு வாழ்த்து; பொங்கல் வாழ்த்து.

1985—ஆம் ஆண்டில் பெரும்பாலான கல்வி நிலையங்கள் ஒழுங்காக நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

இலங்கைத் தமிழர்களில் பலர் உயிரிழந்தனர்; பலர் நாடு இழந்தனர்; வீடு இழந்தனர்; அகதிகளாக நம் நாட்டில் வந்து தங்கியிருக்கின்றனர்; இன்னும் தீராத தொல்லைகளுக்கு ஆளாகி வருகின்றனர். அவர்களுக்கு அநுதாபம் தெரிவிக்கும் வகையில் ஏராளமான மாணவர்கள் சில நாட்கள் பள்ளி செல்லாதிருந்தனர்.

பிறகு பலத்த மழை; புயல். பள்ளிக்கூடங்களுக்குச் சில நாட்கள் விடுமுறை விடப்பட்டது.

அதன்பிறகு, ஆசிரியர் போராட்டம் நடந்தது. பல நாட்கள் பள்ளிக் கூடங்கள் இயங்கவில்லை.

படிப்பிலே ஆர்வமுள்ள நீங்கள், 'நாம் தொடர்ந்து கல்வி கற்க முடியவில்லையே! இந்த ஆண்டில் இப்படிப் பல தடைகள் ஏற்பட்டுவிட்டனவே!' என்று கவலைப்பட்டிருப்பீர்கள்.

வரும் ஆண்டிலாவது, எவ்விதத் தடையும் இல்லாமல் நீங்கள் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுவீர்கள் என நம்புகிறோம்.

புதுமைப் போட்டி—4க்கு நிறைய விமர்சனங்கள் வந்திருக்கின்றன. பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அடுத்த இதழில், முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்றவர்களின் புகைப்படங்களும், அவர்களின் முகவரிகளுடன் பெயர்களும், வெளிவரும். பரிசு பெற்ற விமர்சனங்களையும் நீங்கள் படித்து மகிழலாம்.

—அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



டாக்டர் த. கணேசன்



வி. துரைசாமி

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



சு. சிவகுமார்



ஆர். சிவகாமி

பிருந்தாவனக் கவிஞர்கள்



எஸ். ரம்யா



ஆர். கணேசன்



ஏ. ராமு



பா. மணிவண்ணன்

அட்டையில்: போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீபால் அவர்களின் புதல்வி செல்வி ஹேமா.

வண்ணப்படம்: யோகா.



"நான் சிரித்தால் அவன் சிரிப்பான்;
நான் முறைத்தால்...?"

புகைப்படம்: எம். நடராஜன்

மின்மினிக் கதைகள்

இதுதான் நியாயமா?

ஒரு வக்கீலுடைய பண்ணையில் பல எருமைகளும், காளைகளும் இருந்தன.

ஒருநாள் ஒரு குடியானவன், வக்கீலிடம் வந்து, ''வக்கீலய்யா, ஒரு விபத்து நடந்துவிட்டது! மேயப் போன உங்களுடைய எருமைகளில் ஒன்றை என்னுடைய காளை குத்திக் கொன்றுவிட்டது'' என்றான்.

''என்ன! உன் காளை என்னுடைய எருமையைக் கொன்றுவிட்டதா?"

''ஆமாம் ஐயா, அதற்கு நஷ்ட ஈடாக நான் என்ன தரவேண்டும்? நீங்கள் சொல்வதைத் தந்துவிடுகிறேன்.''

''நீ மிகவும் யோக்கியன். விபத்து நடந்ததை உடனே என்னிடம் வந்து சொன்னதோடு, எனக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் தருவதாகச் சொல்கிறாயே! நீ பணமாக எதுவும் தரவேண்டாம். இறந்து போன என் எருமைக்குப் பதிலாக, உன் காளையைக் கொடுத்துவிடு. அதுதானே நியாயம்?''

''ஆமாம். ஒருவருடைய காளை மற்றொருவருடைய எருமையைக் கொன்றுவிட்டால், எருமைக்குப் பதிலாகக் காளையைக் கொடுப்பதுதான் நியாயம்!''

''சரியாகச் சொன்னாய். நான் எப்போதுமே நியாயத்தைத்தான் சொல்வேன். நியாயத்தைத் தவிர வேறு எதுவும் சொல்லமாட்டேன்.''

இப்படி வக்கீல் சொன்னதும், ''அடடே, நான் ஒரு சிறு தவறு செய்துவிட்டேன். என்னுடைய எருமையைத்தான் உங்களுடைய காளை குத்திக் கொன்றுவிட்டது. அவசரத்தில் மாற்றிச் சொல்லிவிட்டேன்'' என்றான் குடியானவன்.

இதைக் கேட்டதும் வக்கீலின் முகம் மாறிவிட்டது. கோபத்துடன் குடியானவனைப் பார்த்து, ''உன்னுடைய எருமையை என்னுடைய காளை கொன்றுவிட்டதா! அப்படியானால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஏன் உன் எருமை என் காளையின் அருகிலே வந்தது?'' என்று கேட்டார்.

''வக்கீலய்யா, நியாயத்தைத் தவிர வேறு எதுவுமே பேசமாட்டேன் என்று சற்று முன்பு சொன்னீர்களே, இப்போது உங்களுக்கு ஒரு நியாயமும், மற்றவர்களுக்கு ஒரு நியாயமும் பேசுகிறீர்களே! இதுதான் உங்கள் நியாயமா?''

வக்கீலுக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. பேசாமல் தலை குனிந்தார்.



மூன்று ஜாடிகள்

ஓர் உலோபி இறப்பதற்குச் சற்று முன்பாகத் தன்னுடைய மூன்று மகன்களையும் அருகிலே அழைத்தார். "உங்கள் மூவருக்கும் தனித்தனியாக மூன்று ஜாடிகளில் தங்கம் வைத்திருக்கிறேன்" என்றார்.

"எங்கே அப்பா? எங்கே அப்பா?" என்று மகன்கள் மூவரும் கேட்டனர்.

"நம் வீட்டுத் தோட்டத்தில் மாமரத்திற்கும் கொய்யா மரத்திற்கும் இடையிலே....." கூறி முடிப்பதற்குள் அவர் இறந்துவிட்டார்.

உடனே மூவரும் தோட்டத்திற்கு ஓடினார்கள். ஜாடிகளைத் தோண்டி எடுப்பதற்கு முன்பு, முதல் மகன் மற்றவர்களைப் பார்த்து, "நான்தான் மூத்தவன். ஆகையால், ஜாடிகளில் பெரிய ஜாடி எனக்குத்தான்" என்றான்.

"இல்லை பெரிய ஜாடி எனக்குத்தான். நான்தான் அப்பாவுக்குச் செல்லப் பிள்ளை" என்றான் கடைசி மகன்.



"உங்களுக்குள் ஏன் சண்டை? நான்தானே மூவருக்கும் நடுவிலே இருப்பவன்? நான் எடுத்துக் கொள்கிறேன் பெரிய ஜாடியை" என்றான், இரண்டாவது மகன்.

இப்படியே தகராறு செய்து கொண்டிருந்த அவர்களின் வாய்ச் சண்டை,கைச் சண்டையாக மாறியது. பிறகு, ஆளுக்கு ஒரு தடியை எடுத்துக் கொண்டு அடித்துக் கொண்டார்கள். மூவருக்கும் நல்ல காயம்!

அப்போது ஒரு பெரியவர் வந்து, அவர்களுடைய சண்டையை விலக்கி, "தோண்டிப் பார்க்காமலேயே சண்டை போடுகிறீர்களே! முதலில் தோண்டி மூன்று ஜாடிகளையும் வெளியில் எடுங்கள்" என்றார்.

அவ்வாறே எடுத்தார்கள். மூன்று ஜாடிகளும் ஒரே மாதிரி இருந்தன. திறந்து பார்த்தனர். மூன்றிலும் நிறையத் தங்கக் காசுகள் இருந்தன.

"ஐயோ! அவசரப்பட்டுச் சண்டை போட்டுக் கொண்டோமே!" என்று மூவரும் வருந்தினர்.

கப்பலும் படுக்கையும்

ஒரு கப்பல் கடலிலே சென்று கொண்டிருந்தது. அப்போது, பெரிய புயல் வீசியதால், கப்பல், இப்படியும் அப்படியுமாகப் பயங்கரமாக ஆடியது. கப்பல் மூழ்கிவிடுமோ என்ற பயமும் ஏற்பட்டது! எல்லாரையும்விட, அப்போது தான் முதல் முதலாகக் கப்பல் பயணம் செய்யும் ஒருவர் மிகவும் பயந்துவிட்டார்.



சிறிது நேரத்தில் புயல் ஓய்ந்தது. அபாயம் நீங்கியதும், அந்தப் பயணி கப்பலை ஓட்டும் மாலுமியைப் பார்த்தார். அவர் எவ்விதக் கவலையுமில்லாமல் சிரித்த முகத்துடன் இருந்தார். மாலுமியைப் பார்த்து அந்தப் பயணி, ''உங்கள் அப்பா இருக்கிறாரா?'' என்று கேட்டார்.

''இல்லை. இறந்துவிட்டார்.''

''எங்கே இறந்தார்?''

''என் தாத்தாவைப் போல அவரும் ஒரு மாலுமியாக இருந்து, என் தாத்தாவைப் போல் கப்பலில் இறந்துவிட்டார்.''

''அப்படியானால் உங்களுக்குக் கப்பலில் செல்ல பயமாயிருக்க வேண்டுமே!''

''எனக்கு பயம் இல்லை. ஆமாம், உங்கள் அப்பா இருக்கிறாரா?''

''இல்லை. இறந்துவிட்டார்.''

''எங்கே இறந்தார்?''

''என் தாத்தாவைப் போல அவரும் படுக்கையில்தான் இறந்தார்.''

''அப்படியானால் படுக்கையில் படுக்க உங்களுக்குப் பயமாக இல்லையா?''

''இல்லவே இல்லை.

''ஒருவர் கப்பலில் இருந்தாலும் சரி, படுக்கையில் இருந்தாலும் சரி, ஆண்டவன் கொடுத்த ஆயுள் முடியும்போது எங்கிருந்தாலும் சாவிலிருந்து தப்ப முடியாது'' என்றார் மாலுமி.

பலிக்காத தந்திரம்

கடற்கரையில் கிடந்த ஒரு சிப்பியை ஒரு காக்கை கண்டது. உடனே, அதை அலகால் எடுத்து, அதை இரண்டாகப் பிளந்து உள்ளேயிருக்கும் பூச்சியைத் தின்ன முயன்றது. ஓடுகள் கனமாக இருந்ததால், அதைப் பிளக்க முடியவில்லை. அருகில் இருந்த பாறைக்கு எடுத்துச் சென்று, சிப்பியைப் பாறை மீது மோதி மோதிப் பார்த்தது. அப்போதும் ஓடுகள் உடையவில்லை.

அப்போது அங்கு வந்த இன்னொரு காக்கை, ''நீ இப்படி மோதினால் இது உடையாது. இதை எடுத்துக் கொண்டு உயரே பறந்து செல். அங்கிருந்து இந்தப் பாறையின் மீது போடு. உடனே இது உடைந்துவிடும்'' என்று மனத்தில் ஏதோ நினைத்துக் கொண்டே யோசனை கூறியது.

அவ்வாறே முதல் காக்கை சிப்பியுடன் உயரப் பறந்து சென்றது. அதிக உயரம் சென்றதும், அங்கிருந்து சிப்பியைப் பாறை மீது போட்டது.

பாறையில் விழுந்த சிப்பி இரண்டாகப் பிளந்தது. உயரப் பறந்து சென்ற காக்கை கீழே இறங்கி வருவதற்குள், கீழேயிருந்த காக்கை சிப்பியின்



உள்ளேயிருந்த பூச்சியைத் தூக்கிக் கொண்டு வெகு வேகமாகப் பறந்து சென்றது. சென்ற வேகத்தில், அங்கிருந்த ஒரு மரத்தில் 'மடார்' என்று மோதிக் கீழே விழுந்தது. அப்போது அதன் வாயிலிருந்த பூச்சியும் தரையில் விழுந்தது.

மேலிருந்து இறங்கி வந்த காகம், உடனே அங்கே பறந்து சென்று 'லபக்'கென்று அந்தப் பூச்சியைத் தூக்கிக் கொண்டது.

ஏமாற்ற நினைத்த காகம், ஏமாந்து போனது. அத்துடன் பலத்த அடியும் பட்டது!

— கருத்து: ஈசாப்

இதயப் பானை

வித்துவான். வி. துரைசாமி



பசுஉடம்பின் ரத்தமெல்லாம்
பாலாய் நிறையுது — அந்தப்
பாலும் பசுவின் மடியிலன்றி
வேறெங்கு மில்லை.



காய்ந்த விறகில் நெருப்பிருக்கும்
கண்ணில் படாது! — செம்பில்
கறந்த பாலில் நெய்யிருக்கும்
காண முடியாது.



பசுவின் மடியில் கறந்தாலன்றி
பால்கிடைக் காது — அதுபோல்
பசுந்தயிரைக் கடைந்தாலன்றி
நெய்யும் வராது.



அடுப்பில் விறகைச் செருகி மூட்ட
அங்கே தீ வரும்! — உலகில்
ஆழ்கடல்நீர் உப்பானாலும்
சமைக்க உதவுமோ?



கடற்கரையில் பாத்தி கட்டி
நீரைப் பாய்ச்சியே — நன்கு
காயவைத்து உப்பெடுப்பார்
உப்பளங் களில்

இவைகளைப்போல் உவமையெல்லாம்
எதற்குத் தெரியுமா? — கடவுள்
இல்லா இடம் ஒன்றுமில்லை
என்பதற்குத்தான்!

எங்கும் எதிலும் நிறைந்திருக்கும்
ஈசனை நீயே — இங்கே
எதிரில் காண வேண்டுமெனில்
இதயப் பானையில்

பக்தி யென்ற மத்தைநட்டுக்
கடைய வேண்டுமே — அங்குப்
பரம்பொருளை நினைத்த வடிவில்
பார்க்க முடியுமே!



என் குழந்தைப் பருவம்

பொள்ளாச்சி என். மகாலிங்கம்

தமிழகத்தின் தலைசிறந்த வள்ளல்களில் ஒருவராகத் திகழும் இவர், தமிழகத்தில் மட்டுமன்றி, நம பாரத நாட்டிலும், வெளிநாடுகளிலும்கூடப் பல சிறந்த செயல்களைத் தமது பொருட் செலவில் செய்து வருபவர். பொருள் உதவி செய்வதோடு இவர் நிற்பதில்லை. தாமே நேரடியாக ஈடுபட்டு, எடுத்த செயல்கள் யாவும் சிறக்கச் செய்பவர்.

இவர் ஒரு பெரிய தொழில் அதிபர். தம் தந்தையாரின் வழியைப் பின்பற்றி, ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ், சக்தி சுகர்ஸ், ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ் போன்ற பல பெரிய நிறுவனங்களைத் தொடங்கி, மிகத் திறமையாக நடத்தி வருபவர்.

இவர் தமிழ்நாட்டுத் திட்டக் குழு உறுப்பினராக இருந்து, பல அரிய திட்டங்களை வகுத்தவர். பல பெரிய நிறுவனங்களின் இயக்குநராயிருந்து உதவியவர்.

கல்வி வளர்ச்சியில் குறிப்பாகத் தொழிற் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்துபவர். பொள்ளாச்சியில் நாச்சிமுத்து பாலிடெக்னிக்கை நிறுவியவர். பல கல்வி நிலையங்களில் ஆட்சிக் குழுத் தலைவராய்த் திகழ்பவர்.

பொதுத் தொண்டு செய்வதிலே மிகவும் ஆர்வம் உடையவர். பாரதி சங்கத்தின் தலைவராயிருந்து பாரதி விழாவையும், இறைபணி மன்றத் தலைவராயிருந்து வள்ளலார்—காந்தி விழாவையும் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வருபவர்.

இன்றைய குழந்தைகளைப் பார்க்கும்போது, என் நினைவுகள் நான் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளில் சென்று, என் நெஞ்சில் நிழலாடுகின்றன.

பொள்ளாச்சி அருகில் பொலியும் சோமந்துரை சித்தூர் அழகிய கிராமம். என் தாயார் பிறந்த அந்த ஊரில் தான் நானும் பிறந்தேன். என் தந்தையார் நாச்சிமுத்து கவுண்டர். அவர்களுடைய பெற்றோர் பழனி கவுண்டர்_செல்லம்மாள்-அவர்களும் பொள்ளாச்சி வாசிகள்.

எங்கள் குடும்பத் தொழில் விவசாயம். என் பாட்டனார் கடுமையான உழைப்பாளர். கதர் கோட்டும் வேட்டியும் அணிந்திருப்பார். காலை எழுந்ததும், காலைக் கடன்களை முடித்துச்





சாமி கும்பிடுவார். பிறகு ஆடு, மாடுகளுக்குக் கவனமாக வைத்தியம் செய்வார். பழைமையான வழி வந்தவராதலால் மனிதர்கள் சிலருக்கு மந்திரிப்பதும் உண்டு. பலருக்கு வைத்தியம் செய்வார். கைராசி உள்ளவராதலால் அடிக்கடி அன்பர்கள் வந்து கொண்டிருப்பார்கள்.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை நாட்களில் சாவல் கட்டுக்குப் போவதற்காகச் சாவல்களைக் கண்ணும் கருத்துமாக வளர்ப்பார். மூன்று பட்டை உள்ள கத்தியைத் தீட்டி, அதைச் சாவல் காலில் கட்டிச் சாவல் சண்டைக்கு அனுப்பி வைப்பார். அந்தச் சண்டை பற்றி, வெற்றி தோல்வி பற்றியும் விவாதங்கள் பெருமளவில் வீட்டில் நடக்கும்; வெளியிலும் கொஞ்சம் நடக்கும். மனத்திரையில் பூசியதுபோல் தெரியும் அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அந்தச் சின்ன வயதில் பார்த்துக் கொண்டே இருப்பேன். புரிந்தும், புரியாமலும் இருந்தாலும் அந்த நாட்களில் அவையெல்லாம் எனக்குப் புத்துணர்ச்சியைத் தந்தன.

என் பாட்டனருக்குப் பத்திரிகை வாசிப்பதில் தனி இன்பம். அந்தக் காலத்தில் பிரபலமாயிருந்த "சுதேசமித்திரன்" பத்திரிகையைப் பலமாக வாசிப்பார். "கிராமத்தில் சேவல் சண்டை; தேசத்தில் காங்கிரஸ் சண்டை" என்று சொல்லுவார். ஆயினும் காங்கிரஸ் கட்சியில் தீவிரமானவர். நான் அவருடன் சென்று என் சட்டையை எரித்துவிட்டு, அப்போது முதல் கதர்ச்சட்டை அணியத் தொடங்கினேன்.

நாங்கள் குடியிருந்தது பொள்ளாச்சியில் உள்ள இமாம்கான் வீதி. பக்கத்து வீட்டில் கியாஸ் லைட் சாயபு ஒருவர் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். இந்த வீதி வழியாக வால்பாறைக்குப் பார வண்டிகள் சாரி சாரியாகப் போகும். எந்த வீட்டுக்குப் போனாலும் மாடுகளுக்குக் கொள்ளு வேக வைக்கவும், வால்பாறைக்குச் சென்று வந்தவர்களைக் கவனிக்கவும் வேலைகள் நடந்து கொண்டிருக்கும்.

வீதியில் விளையாடும் குழந்தைகளுக்கு எல்லாம் இலவசமாகக் கொள்ளும், கருப்பட்டியும் கொடுப்பார்கள். சாப்பிட்ட சந்தோஷத்தில் பலமாக விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

வீட்டிற்கு இன்னொரு பக்கத்தில் பொள்ளாச்சி சந்தையில் சர்க்கரை வியாபாரம் செய்யும் செட்டியார் வீடு இருந்தது. சர்க்கரைக்காரச் செட்டியார் என்று அவரை அழைப்பது வழக்கம். அவருடைய வீட்டுக்குச் சென்றால் வெல்லம் எல்லோருக்கும் தாராளமாகக் கிடைக்கும்.

இமாம்கான் வீதியில் அன்றாடம் கூலி வேலை செய்யும் ஏழை எளியவர்களுக்கான சின்னக் கடைகள் உண்டு. ஆப்பம் விற்கும் பெண்களும், இட்லி சுட்டு விற்கும் பெண்களும் சுறுசுறுப்பாக இருந்து வணிகம் செய்வார்கள். வறுத்த கடலையும் ரொட்டிகளும் நிரம்பக் கிடைக்கும். காலணாவுக்குக் கால் படி வறுத்த கடலை கொடுப்பார்கள்.

என் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் லண்டன் மிஷன் பள்ளி ஒன்று இருந்தது. கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஆதரவில் இருந்த பள்ளி. அந்தப் பள்ளியில்

சேர்க்கப்பட்டேன். மூன்றும் வகுப்பு வாசித்து வந்தேன். வீட்டுக்கு நேர் மேற்கே பெரிய கிணறு இருந்தது. எனக்குப் பயம். ஆதலால் அந்த வழியில் செல்லாமல் வேளாளர் வீதி, பிள்ளையார் கோயில் சந்து வழியாகச் சுற்றி வளைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் செல்வேன். பிள்ளையாருக்குத் தண்ணீர் விட்டு, அறுகம்புல் போட்டு வணங்கி வருவதும் உண்டு. விநாயகர் துதி, முருகன் பேரில் ''ஏறுமயிலேறி விளையாடு முகம்'' போன்ற பாடல்களைக் கூறிச் சாமி கும்பிடுவது என் பழக்கமாயிருந்தது.

பள்ளியில் சுவிசேஷ வகுப்பும் நடந்து வந்தது. அந்த வகுப்புக்கும் குறித்த நேரத்தில் போய்ச் சேரவேண்டும். நேரமானுல் அந்தக் கால வாத்தியார் அடிப்பதாக மிரட்டுவார். சுவிசேஷ பாடத்திற்கும் பரீட்சை, மார்க் இருப்பதால் அந்த வகுப்புக்கும் கவனமாகச் சென்று வந்தேன்.

சந்தியா வாத்தியார் என்ற ஆசிரியர் டியூஷன் சொல்லிக் கொடுப்பார். கேட்கும் கேள்விகளுக்குச் சரியாக பதில் சொல்லாவிட்டால் நன்முகத் தொடையில் கிள்ளிவிடுவார்.

பள்ளிக்கூடத்தில் அப்போது வாய்ப்பாடு, மனக்கணக்கு முறை உண்டு. பதினுறு எண் வரை வாய்ப்பாடு மனப்பாடம் செய்து சொல்ல வேண்டும். மனப்பாடம் நன்கு செய்து நான் நல்ல மதிப்பு எண்கள் வாங்கியிருக்கிறேன். எங்கள் சொந்தக்காரரில் திரு இராமசாமி கவுண்டர் அவர்கள்தான் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர். நான் மூன்றும், நான்காம் வகுப்புகள், எட்டு, ஒன்பது வகுப்புகள் படிக்கும் காலத்தில் அவருடைய மேற்பார்வை உண்டு.

பள்ளிக்கூடத்திற்குச் சரியாக வராத பையன்களுக்குக் காலில் சங்கிலியைக் கட்டி, மரக்கட்டையைத் தோளில் தூக்கும்படி செய்வார்கள். கடுமையான தண்டனையை நினைக்கும் போது மனம் கலங்குகிறது. ஆயினும் பள்ளியில் இப்போது போலபரீட்சை, கெடுபிடிகள் அதிகம் கிடையாது.


ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் நான் படித்துக் கொண்டிருந்தபோது, 1930—31 காங்கிரஸ் இயக்க காலத்தில் கலவரம்வந்தது. பொதுமக்களைப் போலீசார் துரத்தியதைப் பார்த்திருக்கிறேன்.

பள்ளி விடுமுறை நாட்களில் நான் தாயாருடன் சோமந்துரை சித்தூர் போவதுண்டு. அங்கு என் பாட்டி வீடு இருந்தது. அங்கிருந்த எங்கள் மாமா வேதநாயக கவுண்டர் சங்கர் பாளையத்திற்குமணியகாரராகப்பதவி பெற்றுச் சென்றுவிட்டார்கள்.

கிராமம் சென்றுவிட்டால் நகரத்திலிருந்து நம் பேரன் வந்திருக்கிறுன் என்று சொல்லி அரிசிச் சோறு சமைப்பார்கள். அக்காலத்தில் சாதாரணமாக விவசாயிகள் வீட்டில் அரிசி சமைப்பது சில நாட்களாகத்தானிருக்கும்.

வழக்கமாக வியாழக்கிழமை பள்ளி விடுமுறை. சந்தை கூடும் நாளும் அதுவே. பொள்ளாச்சி சந்தை என்பது பிரபலம். சிலநாட்கள் என்னோடொத்த குழந்தைத் தோழர்களுடன் அங்கு போவேன். பலநாட்களில் என் தந்தையார் பஸ் நடத்தும் ஆபீசுக்கும் போவதுண்டு. ஆபீசுக்கு சிறிது தூரத்





தில் ஒரு மாம்பழக்கடை இருந்தது. நல்லு பாட்சா பயில்வான் மாம்பழக் கடை என்று அழைப்பார்கள். பழம் சாப்பிட்டால்பயில்வான்போல்இருக் கலாம் என்பதற்கு அவர் எடுத்துக் காட்டாக இருந்தார்.

அவர் தன்னுடைய கடைக்கு என்னைக் கட்டிக்கொண்டு போவார். ஒரு பெரிய மாம்பழமாகக் கொடுப்பார். இவ்வளவு பெரிசா என்று அப்படியும் இப்படியுமாகப் பார்த்து அதிசயப்படுவேன். சாயபு அந்தமாம்பழத்தோலைத் தொடர்ச்சியாக கத்தியால் சீவி, கழுத்தில் மாலைபோல் போட்டுக் கொண்டு வேடிக்கை செய்வார். பலரும் பார்த்துச் சிரிப்பார்கள். பார்க்க அழகாயிருக்கும் என்று நானும் நினைத்து அதே மாதிரி செய்யப் பழகிக் கொண்டேன்.

நான் நாலாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது கௌதம புத்தரின் கதைப் பகுதியைப் படித்தேன். பிம்பிசார மன்னன் யாகத்தில் ஆட்டுக்குட்டியைப் பலியிடாமல் காப்பாற்றி, அதைத் தோளில் தூக்கி அணைத்த காட்சி என் கண்முன் நின்றது.

புத்தகத்தில்உள்ள கருணையேஉருவமான கௌதம புத்தர் படத்தைப் பார்த்து, அம்மகானைப் பற்றிப் படித்து நான் மாமிசம் உண்பதை விட்டுவிட்டேன். எங்கள் சாதியில் மாமிசம் சாப்பிடுபவர்கள் அதிகம். எனவே நான் மட்டும் எங்கள் வீதியில் மற்றவர்களுக்கு அபூர்வமாகத் தென்பட்டேன்.

என் தந்தையாரின் பங்காளி வீடுகள் பக்கத்திலிருந்தன. அவர்களில் திரு பழனியப்ப கவுண்டர், திரு ராமசாமி கவுண்டர் சகோதரர்கள். அவர்களுடைய தாயாரின் சொந்த ஊர் கோட்டாம்பட்டி. பெண்மணிகளின் பெயர்களைச் சொல்லாமல் அவர்களின் ஊர்ப் பெயர்களைக் குறித்தே, அழைப்பது எங்கள் பக்கத்தில் வழக்கமாகும். கோட்டாம்பட்டிக்காரி, வடுகபாளையத்து அம்மாள், சின்னபாளையத்து அக்கா என்றுதான் வழக்கமாகப் பேசுவார்கள்.

பொள்ளாச்சியில் மாரியம்மன் கோயில் திருவிழா மிகவும் சிறப்பானது, எங்கள் இல்லத்திலிருந்து வாத்தியங்கள் முழங்க அம்மன் கோயிலுக்குச் சென்று நோன்பு கட்டுவார்கள். எங்கள் பாட்டனருடன் பலமுறை சென்று நான் சாட்டை போடுவது, கரகம் ஆடுவது, தேர் இழுப்பது என்று பிரார்த்தித்திருக்கிறேன். இவை வழிவழியாகக் கோயிலில் நிகழும் சம்பிரதாயங்கள்.

இப்போது இருப்பது போல் அப்போது எல்லாம் பள்ளிக்கூடத்திற்கு விளையாட்டு மைதானம் தனியாக இல்லை. ஏதோ கொஞ்சம் இடம் இருக்கும். தெருவிலும், காலி இடங்களிலும் தான் விளையாட வேண்டும். பம்பரம் சுழற்றி விடுவது, கோலிக் குண்டு ஆடுவது, பாண்டி ஆடுவது இன்னும் சில சாதாரண சிறுவர் விளையாட்டுக்கள் உண்டு. 'சோ' என்று பெய்யும் மழைக் காலத்தில் மழையில் நனைந்து கொண்டே விளையாடுவோம். சாக்கடைகளை அடைத்து அயிரை மீன் பிடிக்கும் விளையாட்டும் உண்டு. பிள்ளைகளுக்கு இந்த விளையாட்டில் அதிகவிருப்பம். பலநாட்களில்பெருச்சாளிகளைப் பிடிக்க வீதியில் எல்லோரும் சேர்ந்து முயற்சி செய்ததும் உண்டு.

மழைக்காலத்தில் வீட்டுக் கூரைகளில் எல்லாம் பாசம் பிடித்துவிடும். வீடுகளில் அட்டாவியிலிருந்து விறகு எடுத்துச் சமைப்பார்கள். மழை வரும் காலத்திற்கு முன்பாகவே வீட்டில் உள்ளோர் விறகு சேகரித்து அட்டாவியில் தயாராக வைத்திருப்பார்கள்.

அப்போதிருந்த வீடுகள் யாவும் செங்கல் வைத்து மண் பூசிச் சுவர்

எழுப்பிய முறையில் இருக்கும். மேற்கூரை நாட்டு ஓடுகளால் வேயப்பட்டிருக்கும். ஆங்காங்கே வைக்கோல் போர்த்த வண்ணக் குடிசைகளும் உண்டு. குளிருக்கு அடக்கமாயிருக்கும். தரை சுண்ணாம்பு ஜல்லியால் தூய்மையாக அமைத்து அழகாக இருக்கும்.

சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஐயர் பூசை செய்வார். அவர்தான் மாரியம்மன் கோயில் நோன்புக்கும் வருவார். அவரை வாத்தியங்களுடன் சிறப்பாக அழைத்து வருவார்கள். தற்போது அந்த சுப்பிரமணியர் கோயில் சிறிதாகத் தோன்றினாலும், என் பிள்ளைப் பிராயத்தில் அதுவே எனக்குப் பெரிய கோயிலாகத் தோன்றியது.

அம்மை நோய் வந்து கஷ்டப்பட்டால், மாரியம்மனுக்குச் சூலங்கள் பிரார்த்தனை புரிவார்கள். அதற்குச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வண்டிகட்டிக்கொண்டுபோவார்கள். காலை சென்றால் திரும்புவதற்குள் மாலை நேரம் வந்துவிடும். கோயில் காட்சியில்நேரம்போவதேதெரியாது. காலையில் கட்டுச் சாதம் கட்டிக் கொண்டு, புறப்பட்டுச் சாமி கும்பிட்டு மாலையில் திரும்பி வந்திருக்கிறோம்.

தை நோன்பு என்றாலோ கேட்கவே வேண்டாம்; மிக நன்றாக இருக்கும். மாடுகளை அலங்கரித்து, அலங்கார வண்டிகளில்பூட்டி, "ஜல ஜல" என்று சலங்கை சப்திக்க ஊரெல்லாம் பவனி வருவோம். பொங்கல் பானைகளுடன் தோட்டம் போவதுண்டு. வெள்ளரி, பச்சை மாங்காய், இளநீர் இவைகள்



காட்டில் தாராளமாகக் கிடைக்கும். களிப்புடன் உண்டு விளையாடிக் களிப்போம்.

இவ்வாறாக என்னுடைய பிள்ளைப் பருவத்தில், ஆரம்பப்பள்ளியில் வாசித்த காலத்தில், நிகழ்ந்த நினைவுகள் இன்னும் எனக்குப் பசுமையாக இருக்கின்றன.

அந்த நினைவுகளுடன் இன்றைய குழந்தைகளைப் பார்க்கும்போது வீணாக மூன்று வயதிலிருந்தே புத்தகப் பையைச் சுமக்கிறார்களே என்ற பரிதாப உணர்வு ஏற்படுகிறது.

அந்தக் காலத்தில் விளையாட்டு அதிகமாகவும் படிப்பு அளவாகவும் இருந்தது. இப்போது குழந்தைகள் விளையாடவே நேரமில்லாதபடி வெறும் படிப்பு மாத்திரமே நடைபெறுகிறதே என்ற அனுதாபம் எனக்குள் எழுகிறது.

குழந்தைகளுக்குப் படிப்பைச் சொல்ல வந்த மகாகவி பாரதியார் ஆரம்பத்தில் "ஓடி விளையாடு பாப்பா" என்று சொன்ன நுட்பத்தை அரசாங்கமும், மக்களும் அறிந்தால் நல்லது.

அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்



பாரத முன்னாள் நிதி அமைச்சர்

சி. சுப்பிரமணியம்

பிருந்தாவனக் கதையரங்கம்

பூரணியின் பாராட்டு



ஆர். சிவகாமி (3084)

பூரணியையும், அவள் அக்கா மலர்விழியையும் தையல்காரப் பெண் வரவேற்றாள்.

மலர்விழி பையிலிருந்து இரண்டு ரவிக்கைத் துணிகளை எடுத்தாள். "இதிலே கை அரை இஞ்ச் இறக்கம் வையுங்க," என்றபடி அளவு ரவிக்கையையும் கொடுத்தாள்.

தங்கை பூரணி அலுத்துப் போய்ச் சுற்றுமுற்றும் பார்க்கலானாள்.

பழைய ஓட்டு வீடு, எப்பொழுது உடையுமோ எனும்படி ஒரு நாற்காலி, தையல் மிஷினோ ஹைதர் காலத்துப் பழசு. அறையில் எந்தவித அலங்காரச் சாமானையும் காணவில்லை. மிகவும் ஏழை போலும். இவளிடம் போய் அக்கா தைக்கக் கொடுக்கிறாளே!

யோசித்தபடியே பூரணி தன் கையிலிருந்த காகிதப் பையிலிருந்து துணியைக்கொஞ்சம்வெளியேஇழுத்தாள்.

குளுமையான பச்சை நிறத்தில் வெண் சரிகை நெளி நெளியாய், சிவப்பு எம்பிராய்டரிப் பூக்களுடன் வழவழவென்ற சில்க் துணி.

தையல்காரப் பெண் அதைக் கவனித்து விட்டாள்.

"ஏனம்மா! உனக்கு என்ன தைக்கணும்?" வினவினாள்.

"என்னோடைய பச்சைப்பட்டுப்பாவாடைக்குப் பொருத்தமான ஜாக்கெட் துணி இது. ஆனால், நான் இந்த உயர்ந்த துணியை இவ்வளவு மோசமான இடத்திலே கொடுக்க மாட்டேன். 'சுகர்ணா'விலதான் .தைப்பேன்!" என்றாள் பூரணி.

"அங்கெல்லாம் 6 ரூபாய் கேட்பாங்க! நான் 4 ரூபாய்க்குத் தைச்சுத் தாரேன்!"

"ம்ஹூம்! இது ஒஸ்தி துணி! உங்ககிட்டே கொடுத்தால் கெடுத்துடுவீங்க!" என்று மறுத்தாள் பூரணி.

தையல்காரப் பெண்மணியின் முகம் சுருங்கியது.

இருவரும் வெளியே வந்தார்கள்.

"இப்படியா பட்டுனு சொல்றது பூரணி? படிக்கிற பிள்ளை! அறிவில்லை?" என்று கடிந்தாள் மலர்விழி.

"போக்கா! நான் முன்னாலே 'சுகர்ணா'வுக்குப் போகலாம்னு சொன்னேன்? நீதான், என்னுடையதோடு கொடுத்திடலாம்னு சொன்னே! அவளுக்கு இந்தத் துணியைத் தைக்க ரொம்பவும் ஆசை. கொஞ்சம் வெட்டி எடுத்துக்கலாம்னு பாத்திருப்பா!"

"சீச்சீ. அப்படியெல்லாம் செய்ய மாட்டாள். ரொம்ப நல்லவள்"

இருவரும் 'சுகர்ணா'வுக்குள் நுழைந்தனர்.

'பளபள'வென்றிருந்த மிஷினின் முன் அமர்ந்திருந்த பெண்மணி அவர்களை வரவேற்றாள்.

மடக்கு நாற்காலிகளை வரித்து

அமரச் செய்தாள்.

கொடிகளில் புதுவிதமான உடைகள் ஆடின. கும்மென்ற சுகந்த மணம் எங்கும் பரவியிருந்தது. மாலை நேரத்திலேயே விளக்குகள் எரிந்தன. மின் விசிறி மெல்லச் சுழன்றது.

பூரணியை அளவு எடுத்துக் குறித்துக்கொண்டவள், "ஏதேனும் இதிலே விசேஷமாத் தைக்கணுமா?" சிரித்தபடி கேட்டாள்.

"ஆமாம்! இங்கே ஃபிரில் வைக்கணும். பட்டன் அலங்காரமாய் இருக்கணும். இரண்டு கைகளிலும் பூ முழுசாய் வரணும்," என்றாள் பூரணி.

அதையும் குறித்தவள், "இப்போ சார்ஜ் 7 ரூபாய்" என்றாள்.

பூரணியும் மலர்விழியும் வெளியேறினர்.

சற்றுநேரத்தில் 'சுகர்ணு' தையல் நிலையப் பெண்மணி, பூரணி கொடுத்த துணியையும், குறித்த தாளையும் எடுத்துக்கொண்டு, மலர்விழி தன் ரவிக்கைத்துணிகளைக் கொடுத்தாளே அதே தையல்காரப் பெண்ணின் வீட்டுக்குச் சென்றாள்.

"இந்த ஜாக்கெட்டை கவனமாத் தைக்கணும். இதோ அளவுகள். 4½ ரூபா தந்துடறேன். இது ஏதோ புது பாஷனும்! எனக்கு சரியாத் தைக்க வராது. நாளைக்கே தந்துடணும்," என்றாள்.

தையல்காரப் பெண்ணின் முகம் மலர்ந்தது.

"அடடே! அதே துணிதான்" என்று நினைத்துக் கொண்டவள், "சரிங்க" என்றாள்.

அடுத்த வாரத்தில் 'ஜில்'லென்று பாவாடையும்சட்டையுமாய் ஜோராய் இருந்த பூரணி, "பாத்தியா அக்கா! சுகர்ணுவிலே எப்படித் தைச்சுத் தந்திருக்காங்கன்னு. நீ சொன்னபடி அவகிட்டே கொடுத்திருந்தா, கெடுத்துக் குட்டிச் சுவர் ஆக்கியிருப்பா" என்றாள்.

கச்சிதமாய்த் தைக்கப்பட்டிருந்த சட்டையைக் கண்ட மலர்விழி, "ஆமாம்! பெரிய கடைன்னா பெரிய கடைதான்!" என்று பாராட்டினாள் உண்மையை அறியாமல்!

\+ \+ \+

அம்மாவுக்கு உதவி



சு. சிவகுமார் (6104)

பாலன் தன் கையில் ஒரு கூடையுடன் மார்க்கெட்டிற்குக் காய்கறிகளை வாங்குவதற்காகச் சென்றுகொண்டிருந்தான். அவன் வருத்தமாய்க் காணப்பட்டான். அவனுடைய நண்பன் மணி வழியில் எதிர்ப்பட இருவரும் பேசிக் கொண்டு நடந்தனர்.

"பாலா! நீ ஏன் வருத்தமாய் இருக்கிறாய்?" என மணி கேட்டான்.

அதற்கு பாலன், "என் தாயார் ஒவ்வொரு சிறு வேலையையும் நானே செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறாள். இன்று காலை, படுக்கையை விட்டு எழுந்து என்னுடைய முகத்தைக் கழுவு முன்னரே இன்று சாப்பாட்டிற்கு வேண்டிய காய்களை வாங்கி வரும்படி சொல்லிவிட்டாள். அதனால்தான் வருத்தமாய் இருக்கிறேன்," எனக் கூறினான்.

மணி, "அது சரி, நீ எப்பொழுது எழுந்திருந்தாய்?" எனக் கேட்டான்.

"வழக்கம் போல ஏழு மணிக்கு" என பாலன் கூறினான்.

"உன்னுடைய அம்மா எப்பொழுது எழுந்திருந்தார்கள்?"

"உண்மையாக எனக்குத் தெரியாது. காலையில் வெகு சீக்கிரமாக எழுந்து எல்லோரையும் தொந்தரவு

செய்து விடுகிறாள்.''

''காலையில் உனக்கு எப்படிக் காப்பி கிடைக்கிறது?''

''ஏன்? நான் காலையில் எழுந்திருக்கும் போதே என் அம்மா தயாராகக் காப்பியைச் சூடாக வைத்திருப்பார்களே.''

''உன்னுடைய தம்பி தங்கையை யார் கவனித்துக் கொள்கிறார்கள்?''

''என்னுடைய அம்மாதான்! வேறு யார் அவர்களைக் கவனிப்பார்கள்?''

''உன்னுடைய அம்மா, உன் தம்பி, தங்கையைக் கவனித்துக் கொள்வார்கள். அப்படியானால், சமையலை யார் செய்வார்கள்?''

''அதையும் என் அம்மாதான் செய்கிறார்கள். ஆனால், அவள் மெதுவாகச் செய்வதால் சில நாட்களில் நான் பள்ளிக்கு லேட்டாக வருகிறேன்.''


''உண்மைதான். நீ காய்களை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு 8.30 மணிக்குச் சென்றால், உன் அம்மா எப்படி 9.00 மணிக்குள் உங்களுக்கு உணவு தயாரித்துக் கொடுக்க முடியும்?''

இதைக் கேட்ட பாலன் பதில் கூற முடியாமல் மௌனம் சாதித்தான். பாலனுடைய மௌனத்தைக் கண்டு, மணி பின்வருமாறு கூறினான்: ''பாலா! நீ எப்பொழுதும் உன்னைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறாய். உன் அம்மா, வீட்டு வேலைகளை எல்லாம் செய்கிறார்கள் என்பதை நீ மறந்து விடுகிறாய். உன்னால் முடிந்தவைகளைக் கூட நீ அம்மாவுக்கு உதவியாகச் செய்வது இல்லை. அப்படி இருந்தும் நீ சொல்வது போல் உன்னைப் பற்றி உன் அம்மா குறை கூறுவதே இல்லையே, இதை எண்ணிப் பார்த்தாயா?''

பாலன் அவனுடைய பேச்சைக் கேட்டு, தன் தவறை ஒப்புக் கொண்டான். அன்றிலிருந்து அவன் அம்மா சொல்லும் வேலைகளைச் சந்தோஷமாகச் செய்வதாக மணியிடம் உறுதி கூறினான். அவ்வாறே செய்தும் வந்தான்.

+ + +

புதைத்த பணம்



வே. திலகவதி (1118)

குமாரசாமி அந்த ஊர்களில் உள்ள பணக்காரர்களில் ஒருவன். படு கஞ்சன். சோறு உண்ட கையால் காக்கையைக் கூட விரட்ட மாட்டான். ஏனென்றால், சாப்பிட்ட கையால் காக்கையை விரட்டினால், கையில் ஒட்டியுள்ள சோற்றுப் பருக்கைகள் கீழே விழக் காக்கை அப்படி விழுந்த பருக்கைகளைச் சாப்பிட்டு விடும். இதனால், அவன் சாமர்த்தியமாக விரட்டாமல் விட்டு விடுவான்.

மற்றவர்களுக்கு உதவாமல் பணத்தை அதுவும் நோட்டுகளாக இரும்புப் பெட்டியில் போட்டுப் பூட்டி விடுவான். தன் மனைவி நகை கேட்டும் வாங்கிக் கொடுத்தது இல்லை. நகை இருந்தால் திருடன் வந்து திருடி விடுவான் என சாமர்த்தியமாகப் பேசித் தன் மனைவிக்கு நகை வாங்கித் தராமல் மழுப்பி விடுவான். தன்னிடம் வந்து உதவி கேட்பவர்களுக்குச் சாமர்த்தியமாகப் பதில் சொல்லி உதவாமல் அனுப்பி விடுவான். அவ்வளவு கஞ்சப் பேர்வழி.

ஒருமுறை அவன் மனைவிக்கு மிகவும் நெருங்கிய உறவினர் இருவர் அவன் வீட்டுக்கு வந்தனர்.. அவர்களுக்குப் பணம் தேவைப்படுவதாகவும், ஒரு மாதத்தில் திருப்பி வட்டியுடன் தந்து விடுவதாகவும் சொன்

னதை மனைவி மூலமாகக் கேட்டு அறிந்தான். எனவே, அவர்களை விரட்டி அனுப்ப சாமர்த்தியமாக ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினன். இரவு அனைவரும் தூங்கும் நேரம் பார்த்து அவன் விழித்திருந்தான். இரும்புப் பெட்டியில் உள்ள மொத்தப் பணத்தையும் எடுத்துப் போய்த் தோட்டத்தில் குழி தோண்டி அதில் புதைத்து விட்டான்.


மறுநாள் காலையில் எழுந்து பணம் பறி போய்விட்டது போல், "ஐயோ! என் பணத்தை யாரோ திருடி விட்டார்களே!" என்று புலம்பினன். இதைக் கேட்ட அந்த இரு உறவினர்கள் எங்கே தங்கள் மேல் அந்தப் பழி வந்துவிடுமோ என்று அஞ்சி, வந்த சுவடு தெரியாமல் ஊருக்குக் கிளம்பிப் போய்விட்டதாக மனைவி மூலம் அறிந்தான். 'அப்பாடா! ஒரு வழியாகத் துரத்தி விட்டோம்' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.


மீண்டும், அந்தக் குழி தோண்டிப் புதைத்த பணத்தை எடுக்கத் தோட்டத்துக்குச் சென்ருன். அங்கே ஏற்கெனவே குழியைத் தோண்டிப் பணத்தை யாரோ களவாடிச் சென்றிருந்தனர்! அங்கே ஒரு சீட்டு இருந்தது. அதில்,

"படுமோசமான பக்காக்கஞ்சனே! உன்னிடம் கடன் கேட்டு வந்த நாங்கள், உன் பணத்தை மோசடி செய்து விட்டோம் என்று வருந்தாதே! கஞ்சனை நீ இதுகுறித்து மனம் தளர்ந்து கவலைப்படுவதா? வேண்டாம். நீ புதைத்து வைத்த குழிக்கு மேற்குப் பக்கமாகப் பத்தடி தள்ளி வேருெரு குழி தோண்டி அதற்குள் உன் பணத்தைப் பத்திரமாக வைத்து மூடியிருக்கிருேம். இனிமேலாவது பணத்தை ஒளிக்காமலும் குழிதோண்டிப் புதைக்காமலும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவாய்."

இதைப் படித்த குமாரசாமி கஞ்சத்தனத்தையும், சாமர்த்தியத்தையும் மூட்டை கட்டி அந்தக் குழியில் போட்டுப் புதைத்து விட்டான்.

ஓவியராகலாம்







ஜோன் அஃப் ஆர்க்

பிரெஞ்சு நாட்டில் 'டாம்ரெமி' என்ற கிராமத்தில் ஒரு குடியானவன் மகளாகப் பிறந்த ஜோன் எழுதப் படிக்கத் தெரியாதவள்; ஆடு மாடுகளை மேய்ப்பதும், தையல் வேலை செய்வதுமே இவளது வேலைகள்.

இவளுக்குப் பதின்மூன்று வயதான போது, ஆங்கிலேயர் பிரெஞ்சு நாட்டின் மீது படை எடுத்து பல இடங்களைத் தாக்கினர்;

இதைக் கேள்விப்பட்ட இவள், அடிக்கடி இதை நினைத்துக் கவலைப் பட்டாள். ஒருநாள், இவள் தனியாக இருக்கும்போது, 'ஜோன்!' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒருவரையும் காணோம்! 'கவலைப்படாதே! உன்னால் பிரெஞ்சு நாடு நன்மை அடையும்' என்றது அக்குரல். அது எவருடைய குரலும் அல்ல; அசரீரிதான்!

அன்று முதல் இவளின் போக்கே மாறிவிட்டது. ஒருநாள் இவள் பிரெஞ்சு நாட்டு அரசரிடம் சென்று, ''நான் ஆங்கிலேயருடன் போர் புரியப் போகிறேன். வெற்றி நிச்சயம்'' என்றாள். அரசரும், அங்கிருந்த மற்றவர்களும் சிரித்தனர். ஆனாலும், இவள் மன்றாடிக் கேட்டுக் கொண்டதால், அரசர் இவளுடன் ஒரு சிறு படையை அனுப்பினார். பல வெற்றிகளை இவள் பெற்றாள்.

கடைசியாக, இவள் ஓரிடத்தில் தோல்வியடைந்தாள். சொந்த நாட்டினரே இவளுக்குத் துரோகம் செய்துவிட்டனர்!

தோல்வியுற்ற இவளைப் பிடித்து ஆங்கிலேயரிடம் கொடுத்துவிட்டனர். ஆங்கிலேயர் இவளைச் சந்தை கூடும் இடத்திலே, ஒரு கம்பத்தில் கட்டி வைத்து இவளைச் சுற்றி நெருப்பு வைத்தனர். உயிர் பிரியும்போது இவள் 'யேசு நாதரே' என்பதைத் தவிர வேறு எதுவுமே கூறவில்லை. அப்போது இவளுடைய வயது 19.



பெஞ்சமின் ஃபிராங்க்ளின்


ஃபிராங்க்ளின் ஒரு விஞ்ஞானி. அரசியல் தலைவர், எழுத்தாளர், தத்துவ மேதை, மக்கள் நன்மைக்காகப் பாடுபட்ட ஓர் உத்தமர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாகக் காரணமாக இருந்த மிக முக்கிய மானவர்களில் ஒருவர்.

அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் நகரில் பதினைந்தாவது பிள்ளையாகப் பிறந்த இவர், பத்து வயது வரைதான் பள்ளிக்குச் சென்றார். அதன் பிறகு, அண்ணன் நடத்திய அச்சகத்தில் சேர்ந்தார். அங்கு வரும் புத்தகங்களையெல்லாம் ஆர்வத்துடன் படித்து, அறிவை வளர்த்துக் கொண்டார்.

பிறகு, இவரே சொந்தமாக ஓர் அச்சகத்தைத் தொடங்கினார். ஒரு பத்திரிகையையும் வெளியிட்டார். அதன் மூலம் புகழ் பெற்றார்.

இவர்தான் அமெரிக்காவில் முதல் முதலாக நடமாடும் நூலகத்தை ஏற்படுத்தியவர்; தீ அணைப்புத் துறையை அமைத்தவர்; தீ இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை நிறுவியவர்; அமெரிக்காவின் முதல் மருத்துவ மனையாகிய பென்சில்வேனியா மருத்துவ மனையைத் தொடங்கியவர்; இன்று உலகப் புகழ் பெற்ற பென்சில்வேனியா பல்கலைக் கழகம் அமைய அடித்தளம் போட்டவர்.

மின்னல் ஏற்படுவது மின் சக்தியால்தான் என்பதைக் கண்டறிந்தவர். கட்டடங்களில் இடி விழாமல் தடுக்கும் இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர்; ஃபிராங்க்ளின் ஸ்டவ் என்ற புதுமையான அடுப்பை அறிமுகப்படுத்தியவர்; அடிமை வியாபாரத்தை ஒழிக்க அரும்பாடுபட்டவர்; காற்றோட்டமில்லாத அறைகள் நோய் வளரக் காரணம் எனக் கண்டுபிடித்தவர்; இரட்டைக் கண்ணாடியுள்ள மூக்குக் கண்ணாடியை முதல் முதலாக அமைத்துத் தந்தவரும் இவரே!



சின்னக் கண்ணன் தெரிந்து கொண்டான்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அந்தச் சிறிய ஊரிலும் உபந்யாஸம் கேட்கப் பெருங்கூட்டம். முன்னதாகவே சென்றால்தான் உட்கார இடம் கிடைக்கும். மிகவும் சுவாரஸ்யமாகப் பத்து நாட்களாக உபந்யாஸம் நடந்து வருகிறது. தனது அருமை சின்னக் கண்ணனையும் தவறாமல் அழைத்துக் கொண்டு அவர் முன் வரிசையில் வந்து அமர்ந்து கொள்வார். அடக்கம் — எளிமை பற்றியது அன்றைய உபந்யாஸம்.

அவர் கூறியதாவது:

ஸ்ரீராமானுஜர் திருமலை நம்பி என்ற பெரியவரிடம் பாடம் கற்று வந்தார். தம் ஆசானிடம் இவர் பேரன்பு பூண்டு முறையாகப் பாடங்கேட்டுத் தெளிவு பெற்றார். அவருக்கு நாள்தோறும் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்.

இராமானுஜர் துறவு பூண்டார். இந்த நிலையில் திருமலை நம்பி இராமானுஜரைத் தம் குருவாகவே ஏற்றுக் கொண்டார். ஒருமுறை இராமானுஜர் திருமலை சென்று திரு வேங்கடவனை வழிபட வந்து கொண்டிருந்தார். திருமலை நம்பி அவரை வரவேற்க மலையில் இருந்து கீழே வந்து காத்து நின்றார். அவரை அங்கு கண்டவுடன் இராமானுஜர், "தாங்கள் இவ்வளவு தூரம் வந்து காத்து நிற்க வேண்டுமா? யாரையாவது சாதாரணமான சிறியவர் ஒருவரை அனுப்பி "இருந்தாலும் போதுமே!" என்று கூறினார்.

"நானும் திருமலை முழுவதும் தேடினேன். என்னிலும் சாதாரணமான மனிதரைக் காண முடியவில்லை. எனவே நான் வந்தேன்" என்றார் திருமலை நம்பி. என்னே அவரது பணிவு! அடக்கம்!

அடக்கம் வேறு, அடங்குதல் வேறு. அடக்கம் என்பது தனக்குத்தானே தன்னிலும் உயர்வு நோக்கி அடங்குதல். பிறரால் அடக்கப்படுதல் என்பது சட்டம், அதிகாரம், படை இவற்றினால் எளியவனைத் தம் வயப்படுத்துதல். முன்னது நிலைத்து நிற்கும். பின்னது நிலைக்காது.

மேலும் ஓர் நிகழ்ச்சி:

ஞானசம்பந்தப்பெருமான் அன்னை பராசக்தி அளித்த ஞானப்பாலை அருந்தி, சிறுவயதிலேயே அற்புதங்கள் பல செய்துவந்தார். இச்செய்திகளை அறிந்த அப்பர் பெருமான் அவரை நேரில் காண சீர்காழிக்கு வந்து கொண்டிருந்தார்.

ஞானசம்பந்தரும், அப்பரைக் காண விழைந்தார். எதிரே வந்து கொண்டிருந்த ஞானசம்பந்தரை, அப்பர் பெருமான் திருவடிகளில் விழுந்து வணங்கினார். ஞான சம்பந்தர் தானும் வணங்கி, "முதியவராகிய தாங்கள் என்னை வணங்கலாமா?"

எனக் கேட்டார்.

அப்பர், "தாங்கள் அன்னை பார்வதி அளித்த ஞானப்பாலைப் பருகியவர்கள். எலும்பைப் பெண்ணாக்கிய பெருமைபெற்றவர். ஊமையைப்பேச வைத்தவர். இத்தனை அற்புதங்கள் புரிந்த தங்களை நான் வணங்குவதில் என்ன தவறு?" என்றார்.

எத்தனை பெரியவர் அப்பர்? அவர் இவ்வளவு அடக்கத்துடன் நடந்து கொண்டார் என்றால், நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று நினைத்துப் பாருங்கள் என்று கூறிமுடித்தார்.

சின்னக் கண்ணன் மிகவும் கருத்துடன் கதையைக் கேட்டு அடக்கத்தைப் பற்றித் தெரிந்து கொண்டான்.

குறள்:

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.



13 — 25
4 — 5 — 1 — 18
7 — 15 — 11 — 21 — 12 — 1 — 13
3 — 8 — 9 — 12 — 4 — 18 — 5 — 14 — 19
3 — 12 — 21 — 2
13 — 5 — 13 — 2 — 5 — 18 — 19

2 — 5 — 19 — 20
23 — 9 — 19 — 8 — 5 — 19
6 — 15 — 18
1
8 — 1 — 16 — 16 — 25
14 — 5 — 23
25 — 5 — 1 — 18
— 13 — 5 — 5 — 14 — 1 —
18 — 1 — 13 — 1 — 3 — 8 — 1 — 14 — 4 — 18 — 1 — 14.

மேலே கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்தினைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு எண்ணிற்கும், ஆங்கில அகர வரிசைப்படி அதற்குரிய எழுத்தைப் பொருத்தி, பின் சேர்த்து வாசியுங்கள்.



"டேய்.... ரெயில் இஞ்ஜினை கண்டு பிடித்தது யார்?"

"எங்கப்பா சார்?"

"உங்கப்பாவா?"

"விபத்திலே இடிபாடுகளுக்குள்ளே கிடந்தப்போ எங்கப்பாதான் கண்டு பிடிச்சு சொன்னார்."

— ஆர். பி. ராஜ்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* எலிகளில் சுண்டெலி, வீட்டெலி, மோட்டெலி, வெள்ளெலி என்று இருப்பதுபோல் பூனையிலும் பல வகைகள் உண்டா?

— ச. மேரி ஆசீர்வாதம்
திருப்பத்தூர் (வ.ஆ.)



நம் நாட்டில் எல்லாப் பூனைகளும் ஒரே மாதிரியாகத்தான் தெரிகின்றன. நிறத்திலே சில மாறுதல்கள் இருக்கும். ஆனால், வெளிநாடுகளில் வெவ்வேறு வகைகள் இருக்கின்றன. பாரசீக தேசப் பூனை நீல நிறத்திலே, நீண்ட வாலுடன் இருக்கும். சையாம் காட்டுப் பூனை வெள்ளையும் சிவப்பும் கலந்த நிறத்தில் குட்டையான வாலுடன் இருக்கும். மான் என்ற தீவைச் சேர்ந்த மான்க்ஸ் பூனைக்கு வாலே கிடையாது!

* குறள் முன்னால் எழுதப்பட்டதா? சிலப்பதிகாரம் முன்னால் எழுதப்பட்டதா?

—வி. அமுதவல்லி, பேராவூரணி.

முதலில் எழுதப்பட்டது குறள்தான். சிலப்பதிகாரத்தில் குறள் கையாளப்பட்டிருக்கிறது.

* காஷ்மீர் சென்றிருக்கிறீர்களா? அங்குள்ள காட்சிகளைக் கண்டிருப்பீர்களே!

— ஆர். தனசேகர், மணப்பாறை.

சென்றால்தானே காணலாம். இதுவரை சென்றதில்லை. அங்குள்ள பனி ஆறுகள், நீர் வீழ்ச்சிகள், பூங்காக்கள், ஏரிகள், படகு வீடுகள், அமர்நாத், வைஷ்ணவி தேவி குகைக் கோவில்கள் எல்லாவற்றையும் பார்க்க வேண்டுமென்றுதான் ஆசை. போகும்போது, அழகு மிகுந்த வேலைப்பாடுகள் உள்ள காஷ்மீர்க் கம்பளத்தையும் மறக்காமல் வாங்கிவர வேண்டும்.

* இமய மலையின் உயர்ந்த சிகரம் எவரஸ்ட். எவரஸ்ட் என்றால் என்ன?

— பி. கோகுல கிருஷ்ணன்,
குள்ளவீரன்பட்டி.

இமய மலையில் மட்டுமல்ல; உலகிலேயே உயர்ந்தசிகரம்எவரஸ்ட்தான்! இமயமலையில் உள்ள பல சிகரங்களின் உயரங்களைக் காண்பதற்காக சர் ஜார்ஜ் எவரஸ்ட் என்பவர் தலைமையில் ஒரு குழு சென்றது. அவர்கள் 1849—ஆம் ஆண்டில் கண்டுபிடித்த சிகரம் தான் இது. இதற்கு, அக்குழுவின் தலைவர் பெயரையே வைத்துவிட்டார்கள்.

* அந்தாதி என்கிறார்களே, அதைப் பற்றிக் கூறுவீர்களா?

— வே. அண்ணாமலை, தேவகோட்டை.

ஒருவர் ஒரு செய்யுள் நூல் எழுதுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதில் உள்ள முதல் பாட்டின் கடையில் உள்ள எழுத்து, சொல், அசை, சீர், அடி இவைகளில் ஏதாவது ஒன்றை அதற்கு அடுத்த பாட்டின் ஆரம்பத்திலும் வைத்து எழுதியிருந்தால் அதற்கு அந்தாதி என்று பெயர். முதல் பாட்டின் அந்தம் (முடிவு), அடுத்த பாட்டின் ஆதி (முதல்) இரண்டையும் இணைத்துப் பாடுவதால் 'அந்தாதி' என்கிறார்கள்.

* மகாத்மா காந்தி, எடிசன், மார்கோனி ஆகியோருக்கு நோபல் பரிசு கொடுக்காதது குற்றம்தானே?

— பி. செந்தில்குமார், பேரூர்.

அவர்களுக்கு நோபல் பரிசைவிட மிக மிகப் பெரிய பரிசு கொடுப்பதுதான் பொருத்தமாயிருக்கும் என்று பரிசுக் குழுவினர் நினைத்துவிட்டார்கள் போலும்!

* புதுமைப் பித்தன் என்பவர் இப்போது எங்கு இருக்கிறார்? அவருடைய சொந்தப் பெயர் என்ன? அவர் என்ன என்ன புத்தகங்களை எழுதியிருக்கிறார்?

— ஏ.ஆர். மீனா, கீழச்சிவல்பட்டி.




புதுமைப் பித்தன் 1948 ஆம் ஆண்டிலே காலமாகிவிட்டார். அவருடைய இயற்பெயர்

விருத்தாசலம். 'புதுமைப் பித்தன் கதைகள்', 'காஞ்சனை', 'முதலும் முடிவும்' — இப்படிப் பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

• சமீபத்தில் நீங்கள் ரசித்த 'ஜோக்' ஒன்றைச் சொல்லுங்கள்.

— சி. வேதராமன், திண்டிவனம்.

அமெரிக்காவில் ஓர் ஓட்டலில் 24—வது மாடியில் இரு நண்பர்கள் ஓர் அறையை



வாடகைக்கு எடுத்திருந்தார்கள். ஒருநாள் அவர்கள் வெளியிலே சென்று திரும்பும் போது, லிப்ட் வேலை செய்யவில்லை. படிகளில் ஏறி நடந்தே செல்ல வேண்டியிருந்தது. ''டேய் நீ ஒரு சோகக் கதை சொல்லு. நான் ஒரு சோகக் கதை சொல்கிறேன். இப்படி நாம் இருவரும் கதை சொல்லிக்கொண்டே மேலே போய்ச் சேருவோம்'' என்றான் ஒரு நண்பன். அவன் யோசனைப்படியே மாறி மாறி அவர்கள் சோகக்கதை சொல்லிக்கொண்டே சென்றனர். 'அப்பாடா, ஒருவழியாக 24—வது மாடிக்கு வந்துவிட்டோம்' என்று மகிழ்ந்தார்கள். அறையை நெருங்கியதும், 'நான் இப்போது ஒரு பெரிய சோகக் கதை சொல்லப் போகிறேன்' என்றான் ஒருவன். 'என்ன கதைடா?' என்று கேட்டான் மற்றவன். 'மறந்து போய், அறைச் சாவியைக் கீழேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன்' என்ற பதில் கிடைத்தது!

• 'காண்டாக்ட் லென்ஸ்' என்கிறார்களே, அப்படியென்றால் என்ன?

— மு. தேவதாஸ், முசிறி.

கண்பார்வையில் அதிகக் குறைபாடு உடையவர்களுக்கு, சாதாரணமாக அணியக் கூடிய மூக்குக் கண்ணாடி நல்ல பயன் தராது. ஆகவே, அவர்கள் கண்ணின் கருவிழியோடு ஒட்டிக் கொள்ளக் கூடிய பிளாஸ்டிக் கண்ணாடியை அணிந்து கொள்கிறார்கள். அதை ஒட்டுக் கண்ணாடி (காண்டாக்ட் லென்ஸ்) என்கிறார்கள். இதை அணிந்து கொண்டால், மற்றவர்களுக்கு இப்படி ஒரு கண்ணாடி அணிந்திருப்பது தெரியாது. இந்தக் கண்ணாடியை ஒரு நாளில் 10 மணி நேரத்துக்கு மேல் அணியக் கூடாதாம்!

• நகத்தைப் பல்லால் கடிக்கும் பழக்கம் உடலுக்குக் கெடுதலா?

— எஸ். ரேவதி, செங்கோட்டை.

கெடுதல்தான். நகத்தைக் கடிக்கும் போது, அதன் இடுக்கிலே தங்கியுள்ள அழுக்கு, வாய் வழியாக வயிற்றுக்குள்ளே செல்லுமே, அது நல்லதா? நகம் வெட்டி ஒன்றை வாங்கி வைத்துக் கொண்டு, 15 நாட்களுக்கு ஒருமுறை அதிகப்படியான நகத்தை வெட்டிக் கொள்ளலாமே. வெட்டும் போது நகத்தின் பக்கத்திலுள்ள சதை ஜாக்கிரதை!

• விசாகப்பட்டினத்தில் இருக்கும் என் நண்பன் லீவில் இங்கு வந்திருந்தான். தெலுங்கர்களில் சிலர், பீடியில் நெருப்பைப் பற்ற வைத்து நெருப்பு இருக்கும் பகுதியை வாய்க்குள் வைத்துக் கொண்டு புகை குடிக்கிறார்களாம். இப்படியும் நடக்குமா?

— ஆர்.எஸ். கோபு, திருச்சி—3.

நடக்கிறதே! இந்த மாதிரி நெருப்புப் பகுதியை வாய்க்குள் வைத்துப் புகை பிடிப்பதை 'சோட்டா' என்று ஆந்திரர்கள் சொல்லுகின்றார்கள். சாதாரணமாகப் புகை பிடிப்பவர்களுக்கே புற்று நோய் வரும் என்றால், இப்படிப் புகை பிடிப்பவர்களுக்குப் புற்று நோய் மிக அதிகமாகவும் விரைவாகவும் வரும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள்.

• கோழி முட்டையை நம்மில் பலர் சாப்பிடுகிறோம். வேறு எந்தப் பறவை முட்டை சாப்பிட உதவுகிறது?

— என். மஞ்சுளா, திருநெல்வேலி.

கோழி முட்டையைப் போலவே பலர் வாத்து முட்டையையும் உணவாகச் சாப்பிடுகிறார்கள். புறா முட்டை, மயில் முட்டை, ஊர்க்குருவி முட்டை இவற்றையும் கூடச் சிலர் சாப்பிடுகிறார்கள். உணவாக அல்ல; மருந்தாக!

• டாக்டர் ஜாகீர் ஹுசேன் நம் நாட்டின் எத்தனையாவது குடியரசுத் தலைவர்?

— எம். சேகரன், வேந்தன்பட்டி.



மூன்றாவது குடியரசுத் தலைவர்.


• நம் தேசக் கொடியில் உள்ள மூன்று வர்ணங்கள் எதைக் குறிப்பிடுகின்றன?

— பி. ரவிச்சந்திரன், உளுந்தூர்ப்பேட்டை.

தியாகத்தையும் தைரியத்தையும் குறிப்பது காவி நிறம். உண்மையையும் சாந்தியையும் குறிப்பது வெள்ளை நிறம். நம்பிக்கையையும் நற்பண்புகளையும் குறிப்பது பச்சை நிறம். இப்படித்தான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கொடியை அமைக்கும்போது நினைத்தார்கள். நாடு விடுதலை பெற்ற பிறகு, நடுவிலே இருந்த இராட்டைக்குப் பதிலாக, அசோகச் சக்கரத்தை வைத்து தேசியக் கொடி உருவாக்கப்பட்டது.

* டாடி,மம்மி என்று கூறும்படி சில குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறார்களே, 'அம்மா அப்பா' என்பதில் உள்ள அருமையும் பாசமும் அதில் வருமா?

— எஸ். நளினி, மதுரை—2.



வராதுதான். தங்களுடைய அண்ணனோ, அக்காளோ கூப்பிடுவதைக் கேட்டுவிட்டுச் சில மழலை மாறாத குழந்தைகள், 'தாதி' என்றும் 'அம்மி' என்றும் அழைப்பதைக் கேட்கிறோம். இவையெல்லாம்கூடத் தேவலை. ஒரு சிறுவன் தன் அப்பாவை Toddy என்றே அழைக்கிறான். பாவம், toddy என்றால் 'கள்' என்பது அவனுக்குத் தெரியாது.

* தவறைத் திருத்தும்போது அடித்துச் சொல்ல வேண்டுமா? அன்பாகச் சொல்ல வேண்டுமா?

— எஸ்.பி. ஸ்ரீதர், கும்பகோணம்.

'அடியாத மாடு படியாது' என்று கூறிக் கூறிச் சிலர் அடித்துத் திருத்தப் பார்க்கிறார்கள். நாளடைவில் அக்குழந்தை அடிக்குப் பயப்படுவதில்லை. அடியைத் தாங்கும் சக்தியையும் பெற்றுவிடுகிறது. அடித்துத் திருத்துவதைவிட, தவறை நயமாக எடுத்துக் கூறி, அதனால் ஏற்படும் தீமைகளையும் விளக்கினால், திருந்த வழி உண்டு.

* நான் டில்லி சென்றிருந்தபோது என் மாமா மகன் ஜோவார் என்பதிலிருந்துதான் 'பாப்கார்ன்' செய்கிறார்கள் என்றான். 'இல்லை. சோளத்திலிருந்துதான் செய்கிறார்கள்' என்றேன் நான். எது சரி?

— சி. குகநாதன், பாண்டி.

இரண்டுமே சரிதான்! வடநாட்டில் ஜோவார் என்பதும் தமிழில் சோளம் என்பதும் ஒன்றுதான். கர்நாடகத்தில் இதற்குப் பெயர் 'ஜோள', ஆந்திரத்தில் 'ஜொன்ன', அமெரிக்காவில் 'மைலோ' ஆங்கிலத்தில் 'கிரேட் மில்லெட்'.

* மிருதங்கத்தை எந்த மரத்தில் செய்கிறார்கள்?

— சி. வேணு, திருவேற்காடு.

பலா மரத்தில் செய்கிறார்கள். வேப்ப மரத்திலும் செய்வார்கள். ஆனால் முன் காலத்தில் மிருதங்கத்தை மண்ணினால்தான் செய்தார்களாம். 'மிருதங்கம்' என்றாலே 'மண்ணினாலே செய்யப்பட்ட கருவி' என்றுதான் அர்த்தமாம்!

கோகுலம் கௌரவ ஆசிரியருக்கு விருது



சமீபத்தில் டில்லியில் நடந்த குழந்தைகள் கல்வி பற்றிய மாநாட்டில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 2000 ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள். அம்மாநாட்டில், பாராளுமன்றத் தலைவர் திரு பல்ராம் ஜாக்கர், 'கோகுலம்' கௌரவ ஆசிரியர், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்கு, அவர் தமிழில் சிறந்த முறையில் குழந்தை இலக்கியம் படைத்து வருவதைப் பாராட்டி கேடயம் வழங்கிக் கௌரவித்தார். மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சந்துலால் சந்திரகார் சால்வை அணிவித்தார்.

வி.ர.வசந்தன்



கிறிஸ்துமஸ் பரிசு

அந்தத் தெருவிலிருந்த வீடுகளெல்லாம் வண்ண விளக்குகளாலும், காகித நட்சத்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கிறிஸ்துமஸ் வாரத்தின் மகிழ்ச்சி சிறுவர்களிடம் பரிபூரணமாகப் பரவி இருந்தது. வேடிக்கை விளையாட்டுகளிலும் வெளியூரில் இருக்கும் நண்பர்களுக்கு வாழ்த்து அட்டைகள் அனுப்புவதிலும் மும்முரமாக அவர்கள் மூழ்கி இருந்தனர்.

நாளை கிறிஸ்துமஸ் பண்டிகை. குழந்தைகள், நாளை அணியப் போகும் புது ஆடைகளையும், வீட்டில் தயாரித்திருந்த பட்சணங்களையும் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கூட்டமாகத் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவனை மார்க், ''டேய், இந்த வருடம் நம்ம செல்வினின் வீட்டில் கிறிஸ்துமஸ் கிடையாது தெரியுமா?'' என்றான்.

''ஆமாம், பாவம்டா செல்வின், அவனுக்கு உடம்புக்கு இப்ப எப்படியிருக்காம்?'' என்றான் ஜேம்ஸ்.

''டாக்டர் உடனே ஆபரேஷன் செய்தாகணும், இல்லேன்னா காலையே எடுக்கும்படியான நிலை வரலாம்னு சொல்லிட்டாராம். ஆபரேஷன் செய்றதுன்னா ஆயிரம் ரூபாய்க்கு மேலேயே வேணுமாண்டா. பணம் இல்லேன்னு அவனோட அப்பாவும், அம்மாவும் அழுதுக்கிட்டிருக்காங்க'' என்றான் மார்க்.

'த்சூ' என்று சுற்றி நின்ற சிறுவர்கள் எல்லோரும் பரிதாபப்பட்டனர்.

''எப்படிடா அவனுக்கு இப்படி ஆச்சாம்?'' என்று கேட்டான் ஜேம்ஸ்.

''கிறிஸ்துமஸ் வருதில்லியா, வீட்டுக்கு நானே வெள்ளையடிக்கறேன்னு ஏணி வச்சு சுவர் மேலே ஏறியிருக்கான். ஏணி வழுக்கிக் கீழே விழுந்து, கால் எலும்பு முறிஞ்சிட்டுதாம். ஏதோ ஒரு வைத்தியர் கிட்டே போனாங்களாம். அவர் பச்சிலை வைச்சுக் கட்டினாராம். அது செப்டிக் ஆயிருச்சாம்'' என்றான் மார்க்.

''டேய் அதோ பாருங்கடா, மிஸ்டர் ஸாண்டாக்ளாஸ் வர்றார்'' என்று திடீரென்று சத்தமிட்டான் எட்வர்ட்.

எல்லோரும் ஆவலுடன் திரும்பிப் பார்த்தனர்.

தெரு முனையில் வெளுத்த தலைமுடியும் தாடியும், கூன் விழுந்த முதுகும் ஆக ஒரு மனிதர் தள்ளாடியபடி நடந்து வந்தார்.

அவர்தான் 'மிஸ்டர் ஸாண்டாக்ளாஸ்' என்று செல்லமாக அழைக்கப்படும் ஆரோக்கியம் தாத்தா. அவர் அணிந்திருந்த பழைய கறுப்புக்

கோட்டு, கிழிந்து பல இடங்களில் தைக்கப்பட்டிருந்தது. தோளில் ஒரு பெரிய துணிப்பை. தலையில் தொப்பி.

ஆரோக்கியம் தாத்தா ஆலயத்தில் மணியடிக்கும் ஊழியர். அதில் கிடைக்கும் வருமானத்தில்தான் அவர் வாழ்க்கை நடக்கிறது. அவருக்கு உற வென்று சொல்லிக் கொள்ள யாரும் கிடையாது. அவருக்குஒருமகள் உண்டு என்றும், திருமணமாகி எங்கோ இருப்பதாகவும் சொல்லுவார். தாத்தாவுக்குக் குழந்தைகள் என்றால் ரொம்பவும்பிரியம். தனது சொற்பவருவாயில் பணம் மிச்சம் பிடித்து, கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் இனிப்புகள் வாங்கிக்கொண்டு வந்து, குழந்தைகளுக்குக் கொடுப்பது அவரது வழக்கம். இதனால்தான் அவருக்கு 'மிஸ்டர் ஸாண்டாக்ளாஸ்' என்ற செல்லப் பெயர் கிடைத்தது!

தன்னை ஓடி வந்து சூழ்ந்துகொண்ட குழந்தைகளை அன்புடன் நோக்கினார்



ஆரோக்கியம் தாத்தா. தோளில் இருந்த துணிப் பையிலிருந்து மிட்டாய்ப் பொட்டலங்களையும் இனிப்புகளையும் எடுத்து அவர்களுக்கு அன்புடன் கொடுத்தார். அந்தக் குழந்தைகள் ஆசையுடன் சாப்பிடுவதைக் கனிவுடன் பார்த்து, தானும் ஒரு குழந்தையாகவே அவர்களோடு குதூகலித்தார் அவர்.

''தாத்தா, தாத்தா, இந்தக் கறுப்புக் கோட்டு உங்களுக்கு ரொம்ப ஜோரா இருக்கே'' என்றான் ஒரு சிறுவன்.

''அதுவா, அந்தக் காலத்துலே ஒரு வெள்ளைக்காரத் துரை நம்ம கோவிலுக்கு ஒழுங்கா வருவாரு. எங்கிட்டே ரொம்பப் பிரியமா இருந்தாரு. பிறகு அவரு இந்த நாட்டை விட்டுட்டுப் போறப்ப இந்தக் கோட்டை எனக்குப் பரிசாக் கொடுத்தாரு'' என்றார் ஆரோக்கியம் தாத்தா.

''தாத்தா, உங்க தலையிலே இருக்குதே தொப்பி.... அது?'' என்று கேட்டான் இன்னொரு சிறுவன்.

''அதுகூட ஒரு ஐயா எனக்குப் பரிசாகக் கொடுத்ததுதான். இதோ என் தோளிலே கிடக்கே பை, இதுகூட எனக்கு ஒருத்தர் சிங்கப்பூரிலேயிருந்து ஆசையா அனுப்பினது'' என்றார் தாத்தா.

''எல்லாமே பரிசாக் கிடைச்சதுதான். ஒண்ணும் உங்க சொந்தமில்லே'' என்று சிரித்தான் ஜான் என்ற சிறுவன்.

சற்று நேரம் அமைதியாக இருந்த தாத்தா, ''ஆமாம் தம்பி, இந்த உடலோடும் உயிரோடும் நாம் இந்த உலகத்தில் பிறந்ததே கடவுள் நமக்குத் தந்த பரிசுதானே? பிறகு நம் சொந்தம்னு சொல்லிக் கொள்ள இங்கே என்ன இருக்கு? நமக்குப் பரிசா கடவுள் தந்த ஜீவன் இருக்கிறவரை, பிறருக்கு உதவுவதையும், பிறருடைய துன்பத்தைக் களைவதையும் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

''ஒரு இடையனிடம் நூறு ஆடுகள் இருந்தாலும், அடிபட்டு விழுந்து கிடக்கிற ஒரு ஆட்டின் பொருட்டுத்தானே அவன் மனம் வேதனைப்படும்? அதைப் போலத்தான் நானும் வேதனைப்படுகிறேன்'' என்றார் ஆரோக்கியம் தாத்தா.

''என்ன தாத்தா சொல்றீங்க?'' என்று ஒரே குரலில் கேட்டனர் சுற்றி நின்ற குழந்தைகள்.

தாத்தா தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''ஆபரேஷனுக்குப் பணமில்லாமல் ஒரு காலையே இழந்து விடும் அபாயத்தில் அங்கே செல்வின் படுத்திருக்கும்போது, நாம எல்லோரும் கிறிஸ்துமஸுக்காகச் சந்தோஷப்படறோமே, அதைத்தான் சொன்னேன்'' என்றார்.

சற்றுநேரம் அங்கு ஒரே அமைதி நிலவியது. குழந்தைகளின் முகத்தில் வருத்தமும் வெட்கமும் கலந்த உணர்ச்சிகள் தோன்றின. திடீரென்று மார்க், ''ஆமாம், ஆயிரக்கணக்கான பணத்தை நம்ம ஒவ்வொருத்தருடைய வீட்டிலும் செலவு செய்து கிறிஸ்துமஸ் கொண்டாடுறோமே, செல்வினுடைய நிலையை, நம் பெற்றோர்களிடம் சொல்வோம். அவனது ஆபரேஷனுக்குத் தேவையான பணத்தை நாமே திரட்டிவிடலாம்'' என்று சத்தமிட்டான்.

ஆரோக்கியம் தாத்தாவின் தலைமையில் எப்படியும் செல்வினுக்காகப் பணம் திரட்டி விடுவது என்ற வேகத்தில் குழந்தைகள் கிளம்பினர். தாத்தாவின் நல்லெண்ணமும், குழந்தைகளின் ஆர்வமும் சேர்ந்து அந்தப் பணம் வெகு எளிதில் கிடைக்கும்படி செய்துவிட்டன!

திடீரென்று பெரும் ஆரவாரத்தோடு குழந்தைகளும், ஆரோக்கியம் தாத்தாவும் தங்கள் வீட்டின் முன் வந்து நிற்பதைப் பார்த்த செல்வினின் அப்பாவும் அம்மாவும் வியந்து போயினர்.

தங்கள் கிறிஸ்துமஸ் பரிசாக அவர்கள் செல்வினின் கால் அறுவை சிகிச்சைக்குத் தேவையான பணத்தை அவனிடம் கொடுத்தபோது, படுக்கையிலிருந்த செல்வின் நன்றி நிறைந்த கண்களோடு அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அந்தப் புன்னகையில் ஏற்பட்ட மன நிறைவே அந்தக் குழந்தைகளுக்கு இந்த வருடம் கிறிஸ்துமஸ் பரிசாயிற்று!


குழந்தைகள் பொம்மை தயாரிக்க ஒரு கழகம்!

உங்களைப் போன்ற குழந்தைகளின் வாழ்க்கையில் பொம்மைகள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன; அவை உங்களை மகிழச் செய்வது மட்டுமே இதற்குக் காரணமல்ல; சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்ளவும், அவசியமான அனுபவத்தையும் அறிவாற்றலையும் பெறவும் அவை உங்களுக்கு உதவுகின்றன.

சோவியத் யூனியனில் குழந்தைகளுக்கான பொம்மைகள் தயாரிப்பதில் ஒரு முழுத் தொழிலே (900க்கு மேற்பட்ட தொழில் நிலையங்கள்) ஈடுபட்டுள்ளது; விஞ்ஞானத்தின் ஒரு தனிக் கிளைகூட இப்பணியில் ஈடுபட்டுள்ளது. மொத்தம் சுமார் 17,000 வகையான பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன; இவற்றுடன் ஆண்டுதோறும் 1,500 புதிய வகைகள் சேர்க்கப்படுகின்றன. தேசியப் பொம்மைகள் ஆராய்ச்சிக் கழகம் இந்தப் பணியை மேற்பார்வையிட்டு வருகிறது. இந்தக் கழகம் மாஸ்கோவுக்கு அருகே ஜகோர்ஸ்க் எனும் நகரில் அமைந்துள்ளது. பாரம்பரியக் கிராமியக் கைவினைக் கலைகளுக்கு இது ஒரு பழைய கேந்திரமாகும். இந்த ஆண்டு கழகம் தனது பொன் விழாவைக் கொண்டாடிற்று.

கழகத்தின் ஆய்வுக் கூடங்களில் சுமார் 400 நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர். சாதாரண கிலுகிலுப்பை முதல், தொலைக்கட்டுப்பாட்டு முறையில் இயங்கும் சந்திர வண்டிகள் வரை பல்வேறு வகையான புதிய பொம்மைகளின் மாதிரிகள் யாவும் இவர்களின் பரிசிலனைக்கு வருகின்றன. இவற்றை இக் கழகம் அங்கீகரித்த பிறகு, யூனியன் மற்றும் குடியரசுக் கல்வி அமைச்சகங்களின் கலை, தொழில் நுட்பக் கவுன்சில்கள் விவாதித்து இவற்றை ஏற்றுக் கொள்கின்றன அல்லது நிராகரிக்கின்றன.

— நன்றி: சோவியத் நாடு.



ஒட்டகத்திற்கு 2 தடவை சான்ஸா?

* (வி)சித்திரச் செய்திகள் வியப்பூட்டுகின்றன. படத்துடன் தொகுத்தளிக்கும் 'ஆழி'க்குப் பாராட்டுகள்.

— தேரழுந்தூர் மு. ஜானகிராமன்,
மயிலாடுதுறை.

* கோகுலத்தில் இதுவரை வெளி வந்த 16 பக்க வண்ணப் படக்கதைகளையெல்லாம் சேர்த்து பைண்டு செய்து வைத்திருக்கிறேன். இதுபோல் நண்பர்கள் எல்லாரும் செய்யலாமே!

— பி. செந்தில்குமார் (5654), கப்பச்சி.

* ஒரு நல்ல சிறுகதை படித்த உணர்வைத் தூண்டியது 'பசுவும் எருமையும்' கவிதை.

— பி. கலியமூர்த்தி, தென்பாதி.

* பிருந்தாவனக் கவியரங்கில் சகோதரி மீனாட்சி எழுதிய 'கொண்டாட்டம்' பாடல் மிக அருமை. கடைசியில், 'கோகுலம் வந்து விட்டால் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்' என்ற வரிகளையும் சேர்த்திருக்கலாம்.

— எஸ். ஜெயஸ்ரீ (1254), கைலாசபுரம்.

* 'டாக்டர் பக்க'த்தில் சொறி, சிரங்கு பற்றிய செய்திகள் அருமையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

— ஹெச். பரூக் (2467), லால்குடி.

* பஞ்சாபில் வசிப்பவர்களும் சமையலுக்கு கடுகு எண்ணெயை உபயோகிக்கின்றனர். தவிர, குளிர் காலங்களில் உடல் உஷ்ணம் பெற கடுகு எண்ணெயை உடலில் பூசிக்கொள்ளுகின்றனர்.

— எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி—14.

* முன்னாள் முதல்வர் எம். பக்தவச்சலம் அவர்களின் 'என் குழந்தைப் பருவம்' பல அரிய செய்திகளைக் கூறுகின்றன.

— இரா. வேல்மணி, சின்ன சேலம்.

* பீமன் அனுமன் வண்ணப் படக்கதை மிகவும் அருமை. 16 பக்கம் போனதே தெரியவில்லை. அவ்வளவு விறுவிறுப்பு.

— கா. சேட் முகம்மது (3048),
விருத்தாசலம்—1.

* ஒரு படத்தில் திருநீறணிந்த குருக்கள் ஒரு பையனுக்கு சடாரி வைப்பதாக வரையப்பட்டுள்ளது. சடாரி வைஷ்ணவ ஆலயங்களில் மட்டுமே உண்டு. திருமண் அணிந்த பட்டர்கள்தான் அதை பக்தர்களுக்கு வைப்பார்கள்.

— கே. கோவிந்தராஜன்,
திருக்கண்ணபுரம்.

* தங்கமணி அவர்களின் 'அக்கினி பூதம்' எடுத்த எடுப்பிலேயே எங்கள் இதயத்தைக் கவர்ந்துவிட்டது. இளம் உள்ளங்களில் தன்னம்பிக்கையையும், துணிச்சலையும் ஊட்டுகின்ற இவரது கதையின் அடுத்த பகுதி எப்போது வரும் என்ற ஆவலைத் தூண்டுகிறது!

— ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

* சேக்கிழார் 80 ஆண்டுக்கு முன்பு இருந்ததாக வெளியாகியுள்ளது. 800 ஆண்டுகள் என்பதுதான் தவறாக அச்சாகியுள்ளது என நினைக்கிறேன்.

— பி. ராஜேஷ் (7773), சங்ககிரி மேற்கு.

(ஆம், அச்சுப் பிழைதான் — ஆசிரியர்.)

* பிருந்தாவனக் கவி, கதையரங்கங்களைப் படிக்கையில், வருங்காலத்தில் அவர்கள் புகழ் மிக்கவர்களாக வருவார்கள் என்பதில் துளிக்கூட சந்தேகமில்லை!

— சு. இராஜன், திருவிடைமருதூர்.

* கோகுலம் வந்ததும் திருஷ்டி சுற்றி விட்டுத்தான் புத்தகத்தைப் படிக்கவே ஆரம்பிக்கிறேன். அட்டைப் படம் அவ்வளவு அருமை!

— சக்குபாய் ஜெயராமன்,
திட்டக்குடி.

* நான் பாரதி புதுமலரைச் சேர்த்து வருகிறேன். தொடர்ந்து வெளியிடுங்கள்.

— டி. மாதவன் (7764), மரக்காணம்.

* ஒட்டகத்திற்கு மட்டும், தன் கதையைக் கூற இரண்டு தடவை சான்ஸ் கொடுத்திருக்கிறீர்களே! மற்ற மிருகங்கள் பாயப் போகின்றன. ஜாக்கிரதை சார்!

— கே. கார்த்திகேய பாண்டியன் (538),
கே. ரமேஷ் (11273), உசிலம்பட்டி.

(வேறு ஒரு மிருகத்தின் கதையை எதிர்பார்த்த உங்களுக்கு ஏமாற்றமளித்ததற்காக வருந்துகிறோம் — கௌரவ ஆசிரியர்.)

* தம்பி சீனிவாசனின் 'நடை ராமன்' பாட்டு மிகவும் நன்றாயுள்ளது. புது மாதிரியாகவும் இருந்தது.

— சி. செல்வகுமாரி, உளுந்தூர்ப்பேட்டை.

சார், தபால்!



வைரவிழாக் காணும் கல்விக் கழகம்

தமிழ்நாட்டில் ஆசிரியர் போராட்டம், ஆசிரியர்கள் சிறையிலடைப்பு என்று கேள்விப்பட்டுத் துக்கமடையும் வேளையில், தலைநகர் தில்லியில் தமிழ்க் கல்விக் கழகம் வைர விழா கொண்டாடும் ஆனந்தமான செய்தி கிட்டியிருக்கிறது. அது மட்டுமல்ல; தில்லி தமிழ்க் கல்விக் கழகம் ஐந்து தலை சிறந்த ஆசிரியர்களுக்கு 'வைர விழா' விருது வழங்கிக் கௌரவிக்கிறது என்றால் அளவற்ற மகிழ்ச்சி தானே!

1923ல் ஓர் ஆசிரியர் — மாணவராகத் தொடக்கப்பட்ட தில்லி தமிழ்க் கல்விக் கழகம் வைர விழாக் காலத்தில் ஏழு பள்ளிகளாக விரிந்து ஏழாயிரம் மாணவர்களும், முந்நூறு ஆசிரியர்களும் கொண்ட ஆல விருட்சமாகக் கல்விக்குத் தொண்டாற்றி வருகிறது!


டாக்டர் ஜி. எஸ். வேங்கடராமன்

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி 1976 ஆம் ஆண்டில் பொன் விழா வைபவத்தில் பங்கேற்றிருக்கிறார். இந்தப் பள்ளியின் ஆசிரியரிடம் பாரதப் பிரதமர் தமிழ் பயின்றது குறிப்பிடத்தக்கது. தில்லி தலைநகரில் எந்தத் தமிழரும் பள்ளியில் சேர முடியவில்லையே என்று ஏங்கத் தேவையில்லை! அவர்களுக்குக் கல்வி கற்க வாய்ப்புத் தருகிறது. இந்தக் கல்விக் கழகத்தின் ஆசிரியர்களுக்கு 95 சதவீதம் சம்பளத்தை டெல்லி மாநில ஆட்சிக் குழு வழங்குகிறது.

தில்லித் தமிழ்க் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள டாக்டர் ஜி. எஸ். வேங்கடராமன் ஒரு விஞ்ஞானி. அவர் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குப் பல விருதுகள் பெற்றுள்ளார். இந்த வைர விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்வதுடன் டிசம்பர் 25ம் தேதி உதவி ராஷ்டிரபதி ஆர். வேங்கடராமன் தலைமையில் ஐந்து தலை சிறந்த ஆசிரியர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்க முன் வந்திருக்கிறார். ஒவ்



எம். சிவராமகிருஷ்ணன்



பு. பட்சிராஜன்



எஸ். பட்டம்மாள்



ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி



செல்வி எச். பி. தேவதாசன்

வொரு விருதுடன் ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் கிடைக்கும்.

1929ம் ஆண்டு ஏப்ரல் 5ம் தேதி பிறந்த சிவராமகிருஷ்ணன் எம்.ஏ. பட்டதாரி. இவர் தில்லி தமிழ்க் கல்வி கழகத்தில் பணியாற்றுவதற்கு முன் ராமகிருஷ்ண மிஷன் பள்ளியில் பணி புரிந்திருக்கிறார். 1970ம் ஆண்டில் புது தில்லி மோதிபாக் பள்ளிக்கு பிரின்ஸிபாலாக உயர்த்தப்பட்டார். சக்தி வாய்ந்த பேச்சாளர்; குழந்தைகளிடம் பிரியம் கொண்டவர். வைர விழா விருது இவருக்குக் கிடைக்கிறது.

பர்மாவில் 1928ம் ஆண்டு பிறந்த மிஸ் எஸ். பட்டம்மாள் சென்னையில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். தில்லி சர்வகலாசாலையில் எம். இய்ட் பட்டத்தை முதல்தரமாகத் தேறியடைந்திருக்கிறார். இவர் தில்லி ஆர். கே. புரப் பள்ளியின் பிரின்ஸிபால். இவருக்கு வைர விழா விருது கிடைக்கிறது.

தமிழாசிரியர் பட்சிராஜன் 1929ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி பிறந்தவர். தமிழ் எம்.ஏ. பட்டதாரி. எழுத்தாளர். 'தேசிய' புத்தக நிறுவனத்துக்காகப் பல புத்தகங்களைத் தயாரித்தளித்தவர். 1985 டி.எஸ். ராஜம் நினைவு விருது வழங்கப்பட்டது.

1979 மதுரை காமராஜர் சர்வகலாசாலையில் எம்.ஏ. தமிழ்ப் பட்டம் பெற்றவர் ஸ்ரீமதி ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி. அறிஞர்; நாடகத் தயாரிப்பாளர்; தலைநகரில் தமிழ் தெரியாத பலருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்து வருபவர். இவருக்கு 1985 ஈசுவரன் நினைவு விருது கிட்டியது.

பள்ளியில் மூதிய ஆசிரியை எச்.பி. தேவதாசன் ஆர்.கே.புரம் பள்ளியின் தலைமை ஆசிரியை. இவர் பாளையங்கோட்டை எஸ். டி. கல்லூரியில் ஆசிரியைப் பயிற்சி பெற்றவர். இவருக்கு பி. எச். எஸ். அய்யர் நினைவு விருது கொடுக்கப்பட்டது!

பாரதி கண்ட கனவு தில்லித் தலைநகரில் நினைவாகி வருகிறது. ஆசிரியர்களுக்கு உரிய கௌரவம் அங்கே கிடைப்பதில் அளவற்ற பெருமை. வைர விழாக் காணும் தில்லித் தமிழ்க் கழகத்துக்குப் 'பல்லாண்டு' வாழ்த்துக் கூறி இன்னும் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் நடத்தி ஆசிரியர்களைக் கௌரவிக்க முன்வர வேண்டும் என்று வாழ்த்துகிறோம். குருவைக் கௌரவித்தால் மாணவ மணிகளின் கல்வித் தரம் பெருகி வருங்கால நட்சத்திரங்களாகத் திகழ வாய்ப்பு உண்டு. வைர விழா கொண்டாடிய தில்லி தமிழ்க் கல்வி கழகத்தின் சிறப்பு, ஆசிரிய திலகங்களின் கௌரவ விருதுகளால் இன்னும் உயர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை!


— பி.எஸ்.எம்

கோகுலம் சிறுவர் சங்க
உறுப்பினர் பட்டியல்

3071 தி. ச. ரமணவேல், 59, பங்காரு ரெட்டி தெரு, அயனாவரம், சென்னை—23.
3072 ஜி. ரகூத்தமன், 39, லஜபதிராய் வீதி, ராம் நகர், கோவை—9.
3073 நா. வெ. சுப்ரமணியம், 148, 3 வது தெரு, காந்திபுரம், கோவை—12.
3074 பி. கேசவமூர்த்தி, டி 5, பண்டிதகாரர் தெரு, சென்னிமலை 638 051.
3075 எஸ். கண்ணன், C/o. வி. சுகுமார், ஷராப் கடை, மேச்சேரி, சேலம் மாவட்டம்.
3076 கே. மாயா, D/o. என். கனகசபாபதி, லட்சுமிநகர், வாசவி காலேஜ் அஞ்சல், பவானி.
3077 ஜி. பாஸ்கர், S/o. எஸ். கோபால், சங்கரி மேற்கு, 637 303.
3078 ஆர். சுரேஷ்குமார், 47, பழைய ஆஸ்பத்திரி வீதி, கோபிசெட்டிபாளையம்.
3079 பி. கருணாநிதி, 3, காமாட்சி அம்மன் கோயில் தெற்குத் தெரு, கரூர்—2.
3080 எஸ். கார்த்திகேயன், 2, காமாட்சி அம்மன் கோயில் தெற்குத் தெரு, கரூர்—2.
3081 என். பத்மாவதி, 15, பூங்குன்றனார் வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு—3.
3082 கே.பி.ஏ. தாஹிரா பானு, C 152, முனிசிபல் காலனி, தஞ்சாவூர்—7.
3083 வே. கோவிந்தராஜன், 18 ஏ, ஆயர்பாடி, திருக்கழுக்குன்றம்.
3084 ஆர். சிவகாமி, 11, பட்டாபிராமன் பிள்ளைத் தெரு, தென்னூர், திருச்சி—17..
3085 சி. ஆர். ரமேஷ், 7, 2—வது தெரு, திரு.வி.க. நகர், கடப்பேரி, தாம்பரம், சென்னை—45.
3086 சி. ஆர். வெங்கட்ராமன், 7, 2—வது தெரு, திரு.வி.க. நகர், கடப்பேரி, தாம்பரம், சென்னை—45.
3087 எஸ். இராஜகோபால், எம்/77, ஆர். கே. நகர், சென்னை—28.
3088 வி. சந்திரமௌலி, 27 எம். சின்னமேட்டுபாளையம், 2 வது தெரு, திருவொற்றியூர், சென்னை—19.
3089 தே. நா. ஸ்ரீதரன், எண்டத்தூர் போஸ்ட், செங்கற்பட்டு மாவட்டம்.
3090 வி.கே. சுந்தராமநாதன், S/o. வி. ஆர். குழந்தை வேலு, வெள்ளிமலைப்பட்டினம், ராசிபுரம் போஸ்ட்.
3091 எஸ்.பி. அனுராதா, 1089 E. மயூரநாதசுவாமி கோயில் தெரு, இராஜபாளையம்—17
3092 ஜி. கிரிதரன், 8, சுவாமி மடத் தெரு, திருவாரூர்—610 002.
3093 ஜி. வினதா, 8, சுவாமி மடத் தெரு, திருவாரூர்—610 002.
3094 ஜி. ரோகிணி, 8, சுவாமி மடத் தெரு, திருவாரூர்—610 002.
3095 எஸ். சீனிவாசன், 6—78, கிழக்குத் தெரு, சேரங்குளம்—614 016.
3096 எஸ்.எம். நௌஷாத்கனி, S/o. Dr. M. Masood, R.F. ரோடு, பழனி.
3097 என். அன்வர்தீன், திருவிடச்சேரி+610 107.
3098 மு. பாஸ்கரன், 1—சி, சுவரைத் தெரு, கீழக் கொட்டையூர், கும்பகோணம்.
3099 வி. கோகுலகிருஷ்ணன், S/o. ஜி. வாசுதேவன், சப்—போஸ்ட் மாஸ்டர், ராஜப்பா நகர், தஞ்சாவூர்—613 007.
3100 என். திருத்தவத்துறை, 17, வடக்கு மடவிளாகம், லால்குடி.
3101 சௌ. ராதிகா, D/o. ஆர். சௌம்ய நாராயணன், உதவி அஞ்சல் அதிகாரி, மதகுபட்டி—623 553.
3102 N. ஸ்ரீஹரி, 30, சத்தியமூர்த்தி ரோடு, ராம் நகர், கோவை—9.
3103 வி. அச்சுதன், குப்புசாமி கவுண்டர் காலனி, காந்தி நகர், தர்மபுரி—1.
3104 நா. விஜேந்குமார், 102—பி, ஓமலூர் ரோடு, சேலம்—7.
3105 எஸ். பாலாஜி, 58, கங்கா நகர், சென்னை—24.
3106 எஸ். வெங்கடேஷ், 27, மருதித் தெரு, சென்னை—15.
3107 டி. சாந்தி, 11, வெங்கடேசபுரம் காலனி எக்ஸ்டென்ஷன், அயனாவரம், சென்னை—23.
3108 ஏ. மாரியப்பன், 773, அன்பழகன் தெரு, கருணாநிதி நகர், திருச்சி—21.
3109 வி. ஆனந்த், 38, வள்ளலார் இரட்டைத் தெரு, மயிலாடுதுறை.
3110 எஸ். ராதாகிருஷ்ணன், 7, ரயில்வே காலனி, வைத்தீஸ்வரன் கோவில்.
3111 பி. சுகன்யா, 2600, ஸ்ரீபாக்; தெற்கு வீதி, தஞ்சாவூர்.
3112 ஜி. பத்மப்ரியா, 89 (Lt(i) மதுரை ரோடு, மணப்பாறை.
3113 மு. ராஜேந்திரன், S/o. மா. முத்துச்சாமி (R.I.) காளிபாளையம், புலியூர் C.F. போஸ்ட், கரூர்—639 114.

3114 மீ. ஸ்ரீதேவி, கணேசபுரம், திருச்சி—13.
3115 கே.வி. ஈஸ்வர், 11, மேல் மாடி, சுந்தரேஸ்வரர் தெரு, மயிலை, சென்னை—4.
3116 அ. சம்பத்குமார், 29/429, தடாகம் ரோடு, சுப்பிரமணியபுரம், கோவை—40.
3117 பி. அகிலாண்டேசுவரி, 14/ஏ, பெருமாள் கோயில் தெரு, பெரமனூர், சேலம்—7.
3118 எம். ரமேஷ்குமார், 4/6, 10வது வார்டு, தாரமங்கலம்—636 502.
3119 பி.கே. பானுமதி, 13 டி, கோ—ஆப்பரேடிவ் நியூ காலனி, கிருஷ்ணகிரி—635001.
3120 பி. கே. மனோகரன், 13 டி, கோ—ஆப்பரேடிவ் நியூ காலனி, கிருஷ்ணகிரி—635001.
3121 பி.கே. ஆனந்தகுமார், 13 டி, கோ—ஆப்பரேடிவ் நியூ காலனி, கிருஷ்ணகிரி—635001
3122 ஹெச். விநாயக் சிங், 243, நேதாஜி ரோடு, பழைய பேட்டை, கிருஷ்ணகிரி.
3123 வி.ஏ. காயத்ரி, 21, ஸ்வர்ணபுரி விரிவுப் பகுதி, சேலம்—4.
3124 வி.ஏ. ராஜ கணபதி, 21, ஸ்வர்ணபுரி விரிவுப்பகுதி, சேலம்—4.
3125 எஸ். உமா, 91, காந்தி ரோடு, ஆலங்காயம்.
3126 டி. இந்திராணி, 48, ஒத்தச் சக்கர வீதி, கோவை.
3127 க. கிஷோர் குமார், 15—P, கணக்கர் தெரு, 3—வது சந்து, சென்னை—19.
3128 சி. குருசங்கர், 66, வடக்கு மலைக்கோட்டை (மாடி), திருச்சி—2.
3129 சி. தேவி, 24, குமாரசாமி கவுண்டர் லே அவுட், முத்துநகர் விரிவு, திருப்பூர்—7.
3130 டி.எஸ். கண்ணன், 81, சன்னதித் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை—5.
3131 மா. பு. சரவணகுமார், 9, வேதகிரி தெரு, ஆர்க்காடு (வ.ஆ.)
3132 இரா. கார்த்திகைச் செல்வி, 30A/1, கான்பாளையம் முதல் தெரு, மதுரை—9.
3133 பெ.வே. விஜி, 12, முனியசாமிபுரம் 2—ஆம் தெரு, சிவந்தை, தூத்துக்குடி—628003.
3134 தி. முரளிதரன், 15, மாயூரநாதர் வடக்கு மடவிளாகம், மயிலாடுதுறை.
3135 ச. சூழலி, 345/3, C.F. எஸ்டேட், அரவங்காடு, நீலகிரி.
3136 ச. சரவணன், 345/3, C.F. எஸ்டேட், அரவங்காடு, நீலகிரி.
3137 சிவ. வேல் முருகன், 31, பெசண்டுச் சாலை, கும்பகோணம்.
3138 ஏ. சங்கர், 1, இருசப்பன் தெரு, சென்னை—79.
3139 எம். கஸ்தூரி, சர்வோதய சங்கம், கூடக்கரை—638 454
3140 இரா. ராமசுப்பிரமணியன், 3/265, சதாசிவநகர், மதுரை—20
3141 ப. மகேஸ்வரி, D/o. ந. பழனியப்பன், அஞ்சல் நிலையம் எதிரில், பரமத்தி, சேலம் மாவட்டம்.
3142 ரா. செந்தில் குமார், 28, நடராஜபுரம், தூத்துக்குடி—628 002.
3143 ரா. கணேஷ் குமார், 28, நடராஜபுரம், தூத்துக்குடி—628 002.
3144 எஸ். இலட்சுமி பிரபா, D/o. ஏ. எம். செங்குட்டுவன், சன்னதி தெரு, மாதூர்பதி—603 403.
3145 என். நாகராஜன், C/o. டாக்டர் எஸ். நடராஜன், அக்ரஹாரம், பூதலூர்—613602.
3146 வி. லெக்ஷ்மி நாராயணன், ராதாஸ் காலனி வடக்குப் பாகம், கொல்லம்.
3147 எஸ். நந்தகோபால், எருமை குளம், இடையன்குடி போஸ்ட், திருநெல்வேலி மாவட்டம்.
3148 லெ. கிருஷ்ண குமார், 20F, சௌத் அவென்யு, திருவான்மியூர், சென்னை—41.
3149 மு.இ. சேக் அலாவுதீன், 67, காஜியார் வீதி, காரைக்கால்.
3150 ம. மணிவண்ண பாண்டியன், 28, இரண்டாவது தெரு, காந்திபுரம், ஆத்தூர்—636 102.
3151 மு. ஜெகதீஷ், 20—A, ரகுபதி தெரு, சுபாஷ் நகர், சென்னை—44.
3152 நா. கமலக் கண்ணன், 2—வது தெரு, காமராஜ் நகர், கும்பகோணம்—2.
3153 ச. ரவி, S/o. கே. சண்முகம், ஜி.எஸ்.டி. ரோடு, காட்டாங் கொளத்தூர், செங்கற்பட்டு மாவட்டம்.
3154 ஜி. ராஜசேகரன், பரமசிவ நிலையம், 2—வது தெரு, காமராஜ் நகர், கும்பகோணம்—1.
3155 எஸ். குப்புசாமி, S/o. செல்லைய சாமி கவுண்டர், சிரங்க கவுண்டன் புதூர், நல்லம்பாளையம் போஸ்ட், பெரியார் மாவட்டம்.
3156 நா. நாகேந்திரன், 106, ஆசிரியர் குடியிருப்பு, பி. எஸ். கே. நகர், இராஜபாளையம்.
3157 பு. பார்த்தசாரதி, A 34, சக்கரைச் செட்டியார் நகர், வரதராஜபுரம், கோவை—15.
3158 ஆர். மீரா, 38, வாணியர் வீதி, கோவை—1.
3159 ஆர். மகாதேவன், 11—A, தாமஸ் வீதி, கோவை—1.
3160 பு.ஏ. அருணாசலம், L.I.G. டி. பிளாக் எண் 2, பட்டினப்பாக்கம், சென்னை—28.
3161 பு.ஏ. அர்விந்தன், L.I.G. டி. பிளாக் எண் 2, பட்டினப்பாக்கம், சென்னை—28.
3162 அ. கந்தசாமி பி 48, சக்கரைச் செட்டியார் நகர், வரதராசபுரம், உப்பிலிப்பாளையம், கோவை—15.
3163 வி. ஜோதி பிரபா, 3, திருப்பாணர் தெரு, சுந்தரம் காலனி, கிழக்குத் தாம்பரம், சென்னை—59.
3164 ஜே. அகிலாண்டேஸ்வரி, D/ .0, சி.கே. ஜம்புகேஸ்வரன், நடேச கவுண்டர் வீதி, வெள்ளக் கோவில்.

(இன்னும் வரும்)



கண்ணனைப் பற்றி உருகிப் பாடியவள் ஆண்டாள். அப்பாடல்களை நாம் எல்லோரும் பாடி மகிழலாம். எல்லா வைஷ்ணவத் திருக்கோயில்களிலும் கோதை நாச்சியார் எனவும் அழைக்கப்படும் ஆண்டாளுக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. ஆண்டாள் கதையை ஆரம்பத்திலிருந்து பார்ப்போம்.
வைகுண்டத்தில் தும்புரு-நாரதர் கானத்தில் மனம் லயித்திருந்தார் மகாவிஷ்ணு. அவருக்கு இரு புறமும் ஸ்ரீதேவி, பூமிதேவி.
சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
கதை: ஆனந்தி படம்: வினு
பூமிதேவிக்கு ஒரு சந்தேகம்...
பிரபோ! பூவுலகத்தில் யார் மீது உங்களுக்குப் பிரியம் உண்டாகும்?
தேவி! உலக வாழ்க்கையில் பற்றில்லாமல் என் மீது அன்பு கொண்டு பூமாலையுடன் பாமாலையும் அளிப்பவர் மீது எனக்கு அதிகப் பிரியம்.
சுவாமி! தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் தொண்டு செய்ய எனக்கு வரம் அருள வேண்டும்.


அப்படியே ஆகட்டும் பூமிதேவி! பூவுலகில் விஷ்ணுசித்தர் என்ற பக்தருக்குப் புதல்வியாக வளர்ந்து என்னை வந்தடைவாயாக!
சுவாமி! பாண்டிய நாட்டில் நான் வளரப் போகும் இடத்தின் மகிமையைக் கூற வேண்டும்..
பூமாதேவி கேட்க பகவான் கூறினார்... .. மகாபிரளயகாலம். நீர்ப்பரப்பின் கீழ் பூவுலகம் அழுந்திப் போயிற்று.
படைத்தல் தொழிலை பிரும்மாவோ அவர் மகனோ தொடர முடியவில்லை. பிரும்மா விஷ்ணுவைப் பிரார்த்தித்தார்.
ஓம் நமோ நாராயணா!
நாராயணன் நாசியிலிருந்து ஒரு வராகம் தோன்றிக் குதித்தது.
கட்டை விரல் அளவில் தோன்றிய வராகம் கிடுகிடுவென வளர்ந்து விண்ணளாவி நின்றது.


அந்த வராக மூர்த்தி பிரளய வெள்ளத்தில் பாய்ந்து...
அதில் அமிழ்ந்து கிடந்த பூமியைக் கொம்பில் தூக்கிக் கொண்டு மீட்டு வந்தார்.
அப்போது பகவானை ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் எதிர்த்தான். பூமிதேவி பெண் வடிவில் பகவான் மடியில் இருந்தாள்.
ஏ! பன்றியே! எனக்குத் தெரியாமல் பூமியைத் தூக்கிக் கொண்டு போய் விடலாம் என்று எண்ணுகிறாயா?
ஹிரண்யாக்ஷன் அங்கு எப்படி வந்து சேர்ந்தான்?... ஹிரண்யனும் ஹிரண்யாக்ஷனும் இரட்டைப் பிறவிகள்....
தம்பி! ஹிரண்யா! எப்பேற்பட்ட வரங்களைப் பெற்று வந்திருக்கிறாய்! இனி நம்மை யாரும் வெல்ல முடியாது!
ஹிரண்யாக்ஷன் வருணனின் விபாவரி நகருக்குப் போனான்.
ஏ! வருணா! பல அசுரர்களை வென்று ராஜசூய யாகம் செய்தாயாமே? என்னை வெல்ல முடியுமா உன்னால்?



வருணன் பயந்தான். அசுரனை ஒழிக்கத் தந்திரமும் செய்தான்...
ஹிரண்யாக்ஷா! உன்னுடன் யுத்தம் செய்ய நான் யார்? ஸ்ரீமன் நாராயணனே உனக்கு நிகரானவன். அவனுடன் போரிடுவதுதான் உனக்குப் பெருமை!
ஹிரண்யாக்ஷன் மகாவிஷ்ணுவைத் தேடி அலைந்தான். நாரதர் எதிர்ப்பட்டார்...
நாரதரே! நாராயணன் இருக்குமிடம் தெரியுமா?
நாராயணா! அதைச் சொல்லத் தானே வருகிறேன்..
அவர் இப்போது வராக ரூபத்தில் இருக்கிறார். அதனால்தான் உன்னால் கண்டுபிடிக்க முடியவில்லை...
ஆ! எங்கே அந்தப் பன்றி? சீக்கிரம் சொல்லும்!
சொல்கிறேன் அப்பா, என்னை விட்டு விடு... மஹா பிரளயத்தில் மூழ்கிய பூமியைக் காப்பாற்றித் தூக்கி எடுத்து வந்து கொண்டிருக்கிறார்!
வராகமூர்த்தி இருந்த இடத்துக்கு ஓடி அவரைத் தடுத்து நிறுத்தினான் ஹிரண்யாக்ஷன்...
எனக்குப் பதில் சொல்லிவிட்டு அப்புறம் பூமியைத் தூக்கிச் செல்!




பகவான் பூமியை நீரின் மேற்பரப்பில் வைத்து விட்டு...
மூடனே! உனக்கு அழிவுகாலம் நெருங்கி விட்டது!
இருவரும் கதாயுதத்தினால் அயராமல் தாக்கி யுத்தம் செய்தார்கள்.
கடைசியில் பகவான் சக்ராயுதத்தால் ஹிரண்யாக்ஷனை வதம் செய்தார்.
ஆ...
மீட்கப்பட்ட உலகம் பூமி தேவியாய் பகவான் மடியில் அமர, தேவர்கள் பகவானைத் துதித்தனர்.


உலகம் அதன் பாதையில்
மீண்டும் நியதிப்படி சுழல,
பிரும்மாவின் படைப்புத்
தொழில் தொடர்ந்தது.
.. உலகின் உருவகமான பூமா
தேவியின் பிரார்த்தனை...
சுவாமி! எனக்கு உபதேசிக்க வேண்டும்.
பூமிதேவிக்குப் பகவான்
உபதேசித்த இடம் புனித
மடைந்தது. அங்கு ப்ருகு,
மார்க்கண்டேயர் போன்ற பல
ரிஷிகள் தவம் இருந்தனர்.
பல காலம் சென்று
காலநேமி என்ற
அசுரன் முனிவர்களின்
தவத்தைக் கலைக்க
முற்பட்டான்.
நாராயணா! நாராயணா!
காலநேமியை வதம் செய்து
முனிவர்களைக் காப்பாற்றினார்
விஷ்ணு.
வருணன் அங்கு தோன்றி,
சக்ராயுதத்தைக் கழுவிச்
சுத்தப் படுத்தக் கங்கை,
யமுனா, சரஸ்வதி ஆகிய மூன்று
நதிகளையும் அங்கு வரச்
செய்தார்.


அவ்வாறு தோன்றிய நீர் நிலை திருமுக்குளம் என்று பெயர் பெற்றது.
முனிவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பகவான் அங்கு தங்கினர். அவரைப் புதர்கள் மூடிக் கொண்டன.
யுகங்கள் சென்றன. காடாகவே மாறிவிட்ட அப் பிரதேசத்தில் வேடர்கள் குடியிருந் தார்கள். அவர்களில் வில்லி என்பவன்...
தம்பி, புலி வேட்டைக்குப் புறப்படுவோமா?
புலியைத் துரத்திக் கொண்டு வில்லியும் தம்பியும் ஓடினர்...
புலியைத் தேடிய சகோதரர்கள் பிரிந்தனர். புதரில் ஒளிந்து கொண்ட புலி, திடீரென்று பாய்ந்து...
வில்லி வரவும் புலி ஓடிவிட்டது. புலியினால் கொல்லப்பட்ட தம்பியைக் கண்டு கதறினான் வில்லி.
ஐயோ! தம்பி!


சோகத்துடன் கண் மயங்கி விழுந்த வில்லி கனவில் பகவான் தோன்றி...
உன் தம்பி எழுந்து விடுவான். நான் இங்கு புதர் மறைவில் இருக்கிறேன். அருகிலுள்ள குகையில் இருக்கும் செல்வத்தை எடுத்து இங்கு எனக்குக் கோயில் கட்டு!
பிழைத்தெழுந்த தம்பியோடு சேர்ந்து பகவான் ஆணையை நிறைவேற்றினான் வில்லி.
வில்லி அமைத்த கோவிலைச் சுற்றி உருவான ஊர் வில்லி புத்தூர் எனப் பெயர் பெற்றது. நாளடைவில் நகராய் வளர்ந்து...
பூமாதேவிக்கு அவள் வளரப் போகும் இடத்தின் மகிமையைக் கூறி முடித்தார் பகவான்.
இந்தப் புனித இடத்தில் இன்று வாழும் விஷ்ணு சித்தரின் மகளாய் வளர்ந்து, எனக்குப் பாமாலை, பூமாலை சமர்ப்பித்துத் தொண்டாற்றுவாயாக!


ஸ்ரீவில்லிபுத்தூரில் விஷ்ணு சித்தர், பெருமாளுக்குப் புஷ்பக் கைங்கர்யம் செய்து வந்தார்.
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
பெரியாழ்வார் என்று போற்றப் பட்ட அவர் தினந்தோறும் மாலை கட்டி திருமாலுக்குச் சமர்ப்பித்து வந்தார்.
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன் செவ்வடி செவ்வித் திருக்காப்பு
ஒரு நாள் தோட்டத்தில் நீர் பாய்ச்சும் போது துளசி செடி அருகில்... ...
ஆ! என்ன அழகான குழந்தை!
எங்கள் குழந்தை இல்லாக் குறை தீரக் கடவுளே கொடுத்திருக்கிறார்!
அப்போது அசரீரி ஒலித்தது... குழந்தைக்குக் கோதை என்று பெயரிட்டு வளர்த்து வருக.
ஆகா! நான் மகா பாக்கியசாலி!



தொட்டில் வைபவம். பெருமாளே தொட்டிலில் இருப்பதாக எண்ணிப் பாடினார் பெரியாழ்வார்!...
மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில்...
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான். மாணிக் குறளனே தாலேலோ! வையம் அளந்தானே தாலேலோ!
பெரியாழ்வாரின் அன்பில் குளித்து அவருடைய பக்திப் பாடல்களைக் கேட்டு வளர்ந்தாள் கோதை. அவருக்கு உதவுவாள்.
அப்பா! ராத்திரி கண்ணன் கதை கேட்டபடியே தூங்கினேன். இன்றிரவும் சொல்வாயா?
ஓ! நிச்சயமாய்!...
ஒவ்வொரு இரவும் கண்ணன் கதைகள் தொடர்ந்தன...
காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு அவன் நீள்முடி ஐந்திலும் நின்று நடம் செய்து மீள அவனுக்கு அருள்செய்த வித்தகன்....
கண்ணன் கதைகளையும் அவன் மீதான பாடல்களையும் கேட்கக் கேட்கக் கோதைக்குக் கண்ணபிரான் மீது ஆசை வளர்ந்து வந்தது.


கோதை பிருந்தா வனத்தில் வாழ்வதாகவே எண்ணிக் கொண்டாள். மணல் வீடு கட்டி விளையாடும் போதும் கண்ணன் நினைவுதான்!
கண்ணன் மணல் வீட்டினை ஓடி வந்து சிதைத்தான் கோதையின் கற்பனையில்!
செய்யதாமரைக் கண்ணனும் எங்கள் சிற்றில் வந்து சிதையேலே!
கோதை வளர அவள் அன்பும் வளர்ந்து காதலாய் மலர்ந்தது. திருமாலையே மணாளனாக அடைய மார்கழி நோன்பு செய்தாள்.
மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
வீடு வீடாகச் சென்று தோழிகளை எழுப்பி நீராட அழைப்பாள்...
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ? நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ? நேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்!
அமுதத் தமிழில் அன்பைக் கொட்டி கண்ணன் மீது பாடிய கோதையின் காதல் கனிந்து பக்தியாக முதிர்ந்தது.
இந்தச் சங்கு கண்ணன் கரத்தில் உள்ள பாஞ்சஜன்ய மாகத் தோன்றுகிறது; அந்த மேகம் கார்மேனிக் கண்ணனாகத் தெரிகிறது!


பெரியாழ்வார் ஒருநாள் கோவிலுக்குக் கொண்டுபோக மாலை கட்டி வைத்திருந்தார். அதைக் கோதை அணிந்து பார்த்து...
பெருமாளுக்கு இந்தமாலை எத்தனை அழகாக இருக்கும்!
திரும்பவும் கூடையில் வைத்தாள்...
பெருமாளுக்கு ஏற்ற ரொம்ப அழகான மாலை தான்.
இதுபோல் தினம் நடந்தது. ஒருநாள் கோயில் அர்ச்சகர்...
சுவாமி! மாலையில் நீளமான முடி சிக்கியிருக்கிறதே... பெருமாளுக்குப் போட மாட்டேன்... அபசாரம்.
வேதனையுடன் வீடு திரும்பினார் பெரியாழ்வார்...
இந்த அசுத்தம் எப்படி நடந்தது...? புதிராய் இருக்கிறதே!
மறுநாள் மாலை கட்டி வைத்து விட்டு தோட்டத்துக்குப் போய் உடனே திரும்பிய போது புதிருக்கு விடை கிடைத்து விட்டது.
அபசாரம்! அபசாரம்! பகவானுக்குச் சாத்த வேண்டிய மாலையை நீ சூட்டிக் கொள்ளலாமா?




அன்றிரவு ஸ்ரீ வில்லிபுத்தூர் பெரியோர் அனைவரது கனவிலும் நாராயணன் தோன்றி...
விஷ்ணுசித்தர் மகள் கோதை சூடிக் கொடுக்கும் மாலைகளே எனக்கு மகிழ்ச்சி தரும்.
மறுநாள் காலை இந்த அதிசயம் அனைவரிடமும் பரவ....
அட! என்னிடமும் அதையே தான் சொன்னார்!
எனக்கும் அதே கனவு தான்!
எல்லாருக்கும் ஒரே மாதிரி கனவு!
என்ன ஆச்சர்யம்!
கோயிலுக்கு வந்த பெரியாழ்வாரைச் சந்தித்து வில்லிபுத்தூர் வைணவப் பெரியோர்கள் தாங்கள் கண்ட கனவு பற்றிக் கூறினர்.
பூமாதேவியே கோதையாக அவதரித்திருப்பதாக என்னிடமும் எம்பெருமான் கனவில் சொன்னார்!
அன்று முதல் கோதை சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்று சிறப்புப் பெற்றாள்... ஒரு நாள்...
அப்பா! எம்பெருமான் கோயில் கொண்டுள்ள 108 திவ்விய ஸ்தலங்கள் பற்றியும் சொல்லுங்கள்!


பெரியாழ்வார் பாடல்களாகப் பதில் கூறினார். ஸ்ரீரங்கம் பற்றிக் குறிப்பிடும்போது...
தேவுடைய மீனமாய், ஆமையாய், ஏனமாய், அரியாய், குறளாய்......
கோதை! பத்து அவதாரங்களையும் எடுத்து அற்புதம் புரிந்தவன ஸ்ரீரங்கநாதனை..! பாடலைக் கேட்கிறாயா?...
..மூவுருவில் ராமனாய்க் கண்ணனாய் கல்கியாய் முடிப்பான் கோயில்....
...சேவலொடு பெடையன்னம் செங்கமல மலரேறி ஊசலாடி...
...பூவணை மேல் துதைந்தெழு செம்பொடி யாடி விளையாடும் புனல் அரங்கமே!
பாடலைக் கேட்டதிலிருந்து கோதைக்குத் திருவரங்கம் செல்ல ஆசை மிகுந்தது...
தோழி! என் கனவில் நம் ஊரே கல்யாணக் கோலம் பூண்டிருந்தது... ..என்னைக் கண்ணனுக்கு மணம் செய்து கொடுத்தார்கள்..


ஒரு நாள்...
அப்பா! என்னைத் திருவரங்கத்துக்கு அழைத்துப் போவீர்களா?
ஓ! இப்போதே கிளம்பலாம்!
பட்டுத்திரை போட்ட பல்லக்கில் கோதை பயணம் செய்தாள். பெரியாழ்வார் முன்னால் நடந்தார்.
பல்லக்கு திருவரங்கத்தை நெருங்க, பல்லக்குத்தூக்கிகள் அதிசயித்து...
சுவாமி! பல்லக்கு திடீரென்று இலேசாகி விட்டது... உள்ளே பாருங்கள்!
பெரியாழ்வார் பல்லக்கின் திரையை விலக்கி நோக்க...
என் கண்மணி ஆண்டாளைக் காணவில்லையே... இதென்ன மாயமோ?
அரங்க நாதன் சந்நிதியை அடைந்து கதறினார் பெரியாழ்வார்...
என் ஒரே மகளை என்னிடமிருந்து பிரித்து விட்டீரே நியாயமா?



...என்றாலும் தேவரீர் ஸ்ரீவில்லி புத்தூருக்கு வந்து என் கோதையை யாவரும் அறியத் திருமணம் செய்து கொள்ளப் பிரார்த்திக்கி றேன்...



கோதையுடன் ஊர் திரும்பினார் பெரியாழ்வார். ஊரே கல்யாணக் கோலம் பூண்டிருந்தது. ரிஷிகளும் தேவ - கந்தர்வர்களும் வந்து கூடினர்.



கருடாழ்வார் மீது அமர்ந்து பறந்து வந்தார் மகாவிஷ்ணு.



அக்னியை வலம் வந்து ஆண்டாளைத் திருமணம் புரிந்து கொண்டார் பெருமாள்.



திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே! பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!

பாட்டி தொலைத்த முத்து

குழந்தைக் கவிஞர்

கூனல் முதுகுப் பாட்டி ஒருத்தி
குனிந்து, குனிந்து நடந்தாள்.
மானைப் போலத் துள்ளும் சிறுவர்
வழியில் சிலரைக் கண்டாள்.

சிறிது தூரம் சென்ற பாட்டி
திரும்பிச் சற்றே பார்த்தாள்.
மரத்தின் அடியில் படுத்த இளைஞன்
வளைந்து நெளிந்தே எழுந்தான்.

"கிழவி, எதனைத் தொலைத்து விட்டுக்
கீழே தேடு கின்றாய்?
இழந்த பொருளைச் சொன்னால் உடனே
எடுத்துத் தருவேன்" என்றான்.

கிண்ட லாக இளைஞன் கேட்கக்
கிழவி கூற லானாள்:
"என்றோ நானும் தொலைத்த முத்து
இன்று திரும்பி வருமா?"


"முத்து என்று சொன்ன வுடனே
மிகவும் ஆவ லாக
எத்தனை நாள் ஆச்சு? அதனை
எங்கே தொலைத்தாய்?" என்றான்.

"இளமை என்னும் முத்தினை நான்
இழந்து விட்டே னப்பா!
பொழுதை யெல்லாம் சோம்ப லாலே
போக்கி விட்டேன், ஐயோ!

உடம்பை நன்கு வளைத்து நானும்
உழைத்தி ருந்தால் இன்று,
இடமில் லாமல் கூன் விழுந்து
சிரிக்கும் நிலையும் வருமோ?

இனிய உனது இளமை நாளில்
என்போல் சோம்பிக் கிடந்தால்,
குனிந்து நீயும் தேட வேண்டும்,
கிடைத்தி டாத முத்தை!"





புதிர்கள்! ஆழி

1. காந்தியடிகள் பிறந்த போர்பந்தருக்கு மற்றொரு பெயர் இருக்கிறது. அது என்ன தெரியுமா?
2. சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ. 1839 ஆ. 1790, இ. 1869.
3. மீன்களுக்குக் கண் இமைகள் உண்டா?
4. புத்தர் முதல் முதலில் தன் போதனைகளைப் போதிக்கத் தொடங்கிய இடம் எது?
5. எப்போது, எங்கே அணுகுண்டு முதல் முதல் வீசப்பட்டது?
6. ஆமை எந்த இனத்தைச் சேர்ந்தது?
   அ. ஊர்வன, ஆ. மீன் இனம், இ. பாலூட்டி.
7. தேசக் கொடியில் ஒட்டகச் சிவிங்கி உள்ள நாடு எது?
8. உலகில் மிக உயரமாக வளரக் கூடிய புல் எது?
9. பூமியில் அதிகமாகக் கிடைக்கக் கூடிய உலோகம் எது?
   அ. செம்பு, ஆ. இரும்பு, இ. அலுமினியம்.
10. ஒரு நண்டுக்கு எத்தனை ஜோடி கால்கள்?
11. ஜப்பானின் தேசிய மதம் என்ன?
12. அப்பர் என்று அழைக்கப்படுகிறவர் யார்?
13. முதல் முதல் இருப்புப்பாதை எந்த நாட்டில் போடப்பட்டது?
14. நோபல் பரிசாகப் பெறும் தொகைக்கும் வருமானவரி உண்டா?
15. பூனை எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும்?

விடைகள்: (திருப்புக)

1. சுதாமபுரி
2. அ. 1839
3. இல்லை
4. காசி (பனாரஸ்)
5. ஆகஸ்ட் 8, 1945. ஹிரோஷிமா (ஜப்பான்)
6. அ. ஊர்வன
7. தாங்கனிகா
8. மூங்கில் (மூங்கில் மரம் அல்ல; புல் இனத்தைச் சேர்ந்தது)
9. இ. அலுமினியம்
10. ஐந்து
11. ஷிண்டோ மதம் (பௌத்த மதத்தின் பிரிவு)
12. திருநாவுக்கரசர்
13. கனடா 1835
14. கிடையாது
15. 15 ஆண்டுகள்

அக்கினி பூதகம்



தங்கமணி

2. புத்தி உள்ளவன் வித்தை உள்ளவன்!

விளையாடவில்லை.

வேடிக்கை பார்க்கவில்லை.

ஏரிக்கரையிலும், மாந்தோப்பிலும், மூங்கில் காட்டிலும் அலைந்து, திரிந்த படி, ஏதேதோ பேசினார்கள். என்னென்னவோ சிந்தித்தார்கள். திட்டம் போட்டார்கள். திட்டத்தைச் செய லாக்குவதில் தீவிரமாயிருந்தார்கள், அவர்கள்.

எவர்கள்...?

ஆதி,

வீராயி,

பீமன்,

வால்மீகி,

நாகன்...

கடந்த அமாவாசை தினத்திற்குப் பிறகு, ஒன்பதாம் நாள். அன்று, சனிக் கிழமை. காலை நேரம். வெயில் இன் னும் முதிரவில்லை. பொன்னிற வெயி லில் வீட்டிலிருந்து புறப்பட்டான்; நடந்தான்; ஒரு புதிய ஆர்வமும், ஆவலுமாக நடந்தான்; முச்சந்தியி லுள்ள பிள்ளையார் கோயிலுக்கு வந் தான்; வாசலில் நின்றான்; பிள்ளை யாரைக் கனிவுடன் நோக்கினான்; கைகுவித்துத் தலைவணங்கி, உருக்க மாகப் பிரார்த்தித்தான், ஆதி.

ஓரிரண்டு நிமிஷங்களுக்குப்பிறகு—

கோவில் வாசலில் வைக்கப்பட் டிருந்த சின்னஞ்சிறு மரப்பெட்டியை அணுகினான். பெட்டிக்குள்ளிருந்து ஒரு சிட்டிகை விபூதியை எடுத்துப் பக்திப் பெருக்குடன் நெற்றியில் பூசிக் கொண்டு நடந்தான். ஏதோ ஒரு உற் சாகத்துடன் வேகமாக நடந்தான்—

சற்று நேரத்திற்குள்—,

ஊருக்கு அப்பாலே, ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அக்கினி ஆற்றங்கரைக்கு வந்தான். அப்படியும் இப்படியுமாகத் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்தான். 'எங்கே இருக் கிறது...? கண்ணுக்கே புலப்படவில் லையே...!' என்று மனத்துக்குள் முன கியவன், "ஆ! அதோ! தோ... தெரி கிறதே...!" என்றவாறே வேட்கையும் வேகமுமாக நடந்தான். நாலைந்து கூப் பிடு தொலைவில், ஆற்றங்கரை ஓரமாக வானோங்கி வளர்ந்திருந்த ஒற்றைத் தென்னை மரத்தை நோக்கிச் சுருக்காக நடந்து கொண்.....

"ஆதி...! டேய், ஆதீ...!"

நடந்து கொண்டிருக்கிற ஆதி, திடீ ரெனக் கிளம்பிய கூக்குரலைக் கேட்ட தும், சட்டென்று நின்று, திரும்பிப் பார்த்தான்.

அருகிலுள்ள முந்திரித் தோப்புக் குள்ளிருந்து துள்ளியோடி வந்தான். ஆதியை அணுகினான். "ஒற்றைத் தென்னை மரத்துக்குத்தானே போகி றாய்...? வா, போகலாம்..." என்று மேலும் கீழும் மூச்சு முட்ட சொல்லிய படியே நடந்தான், பீமன்.

"வீராயி வரவில்லையா...?"

"இன்னும் மூன்று நாள் இருக் கிறது. இன்னும் இரண்டு நாள் இருக்

கிறது. நாளை மறுநாள் காலையில், பயணத்தைத் தொடங்க வேண்டியது தான்!'' — எனத் துருதுருவெனத் துடித்துக் கொண்டிருந்தவளாயிற்றே! நம் எல்லோருக்கும் முன்னே, அவள் தான் வந்திருப்பாள்...!'' என்றான், பீமன்.

இவ்வாறாக —

ஆதியும், பீமனும் ஏதேதோ பேசிக் கொண்டே, ஒற்றைத் தென்னை மரத்தை நோக்கி விரைவாக நடந்தார்கள்.

பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள் —

இருவரும் ஒற்றைத் தென்னை மரத்தை நெருங்கியதும், ''ஆதி... பீமா... புறப்படலாமா...?'' என்று ஆவலுடன் கூவினாள் வீராயி. கூவியவாறே, கொய்யா மரத்தின் தாழ்ந்து வளைந்த கிளையில் அமர்ந்து மேலும் கீழுமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்த அவள், தாவிக் குதித்தோடி வந்தாள். கொய்யா மரத்திற்கு அருகில் கயிற்றுச் சுருணைகள், மூங்கில்தடிகள், ஏதேதோ மூட்டைகள், என்னென்னவோ முடிச்சுக்கள், ஒரு பெரிய தாழந்தழையால் செய்த குடை இவைகளோடு நின்றிருக்கிற வால்மீகியும், நாகனும், ஆதியையும் பீமனையும் பார்த்தார்கள். ''புறப்படலாமா...?'' என்றான், வால்மீகி. ''ம்... ம்... புறப்படுங்கள்...!'' எனத் துடித்தான், நாகன்.

நொடி நேரம் தயங்கிய ஆதி, என்னவோ யோசனையுடன் கேட்டான்: ''ஆமாம், அவன் எங்கே...?''

''எவன்...?'' என்றாள், வீராயி.

''நந்தன் வரவில்லையா...?'' என்றான், ஆதி.

'கொல்...'லெனக் குலுங்கிச் சிரித்த வீராயி, சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னாள்: ''அவன் ஒரு கோழைப் பயல்! அன்றைக்குக் காட்டெருதைக் கட்டிப் போட்டோமே... அன்று இரவிலிருந்தே வீட்டோடு படுத்து விட்டான்...!''

''என்ன சமாச்சாரம்...?'' என்றான், பீமன்.

''அன்றைக்கு... அக்கினி பூதத்தைப் பார்த்த அதிர்ச்சியில், மூக்கிலும், வாயிலும் ரத்தம் சொட்டச் சொட்ட ஒரு இளைஞனைத் தூக்கிச் சென்றார்களே... அதைப் பார்த்த திகிலில், அன்று இரவே காய்ச்சலும், கழிசலுமாய்ப் படுத்து விட்டான், நந்தன்...!'' எனக் கூறினாள், வீராயி...

''இத்தகைய கோழைப் பயல் நம்முடன் வராமல் போனதே நல்லது தான்...!'' என்றான், வால்மீகி.

என்னவோ நினைத்து... ஏதோ யோசித்து...

''ஹூம்...! ஊர் ஜனங்களை அநியாயமாகக் கதிகலக்கிக் கொண்டிருக்கிற அந்த அக்கினி பூதத்துக்கும், அதனால் ஏற்படுகிற அசிங்கமான திகிலுக்கும்சமாதிகட்டாமல்விடப்போவதில்லை...! ம்... புறப்படுங்கள்...!'' என்று ஆக்ரோஷத்துடன் கூவினான், ஆதி.

உடனே —

ஒரு கயிற்றுச் சுருணை, ஒரு மூங்கில் தடி, ஒரு சின்னஞ்சிறு அரிவாள் இவைகளை ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்டார்கள்.

மரத்தடியில் கிடக்கிற இரண்டு பைகளைப் பார்த்துவிட்டு, ''அது என்ன...? அப்பைகளில் என்ன இருக்கிறது...?'' எனக் கேட்டான், பீமன்.

''ஒரு பையில் வேர்க்கடலை, தினைமாவு உருண்டைகள்... இன்னொரு பையில், கேழ்வரகு மாவில் சுட்ட அடைகள்...'' என்றவாறே ஒரு பையை எடுத்து ஆதியிடம் கொடுத்தான். இன்னொரு பையைத் தனது தோளில் மாட்டிக் கொண்டான், வால்மீகி.

''அது சரி... இந்த அக்கினி ஆற்றை எப்படிக் கடந்து போவது...? நீந்திக் கடந்து...'' ஆதியின் பேச்சில் திடீரெனக் குறுக்கிட்டான், பீமன்: ''அய்யோ...!''

''என்னடா அலறுகிறாய்...? உனக்கு நீச்சல் தெரியாதா...?'' எனக் குறுஞ்சிரிப்புடன் கேட்டான், ஆதி.

''ஹ...! நம்முடைய தமிழோங்கி புரத்திலுள்ள கிணறுகள், குளங்கள், ஏரிகள் இவைகளிடம் பீமனுக்கு நீச்சல் தெரியுமா? — எனக் கேட்டால், அவைகளெல்லாம் இந்த நீச்சல் மன்னனைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்லும்...!'' என்றான், நாகன்.

''பின்னே... ஆற்றை நீந்திக் கடக்க



மொழி பெயர்க்கும் கடிகாரம்!

மொழி தெரியாத வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இந்தக் கடிகாரங்களை அணிந்து செல்லலாம். ஸ்பானிஷ், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜப்பானியமொழிகளில்மொத்தம்1666 வார்த்தைகளை இக்கடிகாரம் மொழி பெயர்க்கக் கூடியது. இதில் மொழி பெயர்ப்புக்காகத் தனியே இரண்டு பொத்தான்கள் இருக்கின்றன. ஒன்றை அழுத்தினால் ஆங்கிலத்தில் அகர வரிசைப்படி வார்த்தைகள் தோன்றும். தேவையான வார்த்தை வந்ததும் மற்றொரு பொத்தானை அழுத்தினால் அதற்கு மொழி பெயர்ப்புத் தோன்றும். இதற்கு 'நடமாடும் அகராதி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஜப்பானில் பரீட்சையின் போது இந்தக் கடிகாரம் அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நன்றி: தமிழ் நேசன்.

தகவல்: நீரை அத்திப் பூ.

லாம்என்றதும்அலறுகிறானே,ஏன்...?" எனப் புரியாமல் கேட்டான், ஆதி.

"உனக்கு விஷயம் தெரியாதா...?" என்றான், பீமன்.

"என்ன விஷயம்...?"

"அன்றைக்குத் தமிழோங்கிபுரத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்ததே, அந்தப் பயங்கரக் காட்டுப் பிசாசு,நாலைந்துநாட்களுக்குமுன்னே பரிதாபமாகச் செத்துப்போயிற்று...!" என்றான், பீமன்.

இந்தத் தகவலைக் கேட்டதும்—

"ஆங்...! அப்படியா...!" என்று அதிர்ந்து கூவிய ஆதி, "அந்தக் காட்டெருது எப்படி இறந்தது...?" என்று பதற்றத்துடன் கேட்டான்.

"அந்தக் காட்டு எருது, இந்த அக்கினி ஆற்றை நீந்திக் கடந்து வந்த போது... இந்த ஆற்றில் நிறைந்துள்ள கொடிய விஷ மீன்கள், அந்த எருதைக் கொத்திவிட்டிருக்கின்றன. அந்த விஷ மீன்களின் கொடிய விஷம், காட்டெருதுவின் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துத் தொலைத்திருக்கிறது...!" என்றான், பீமன்.

"ஓ...!அப்படியா...!" எனப்பதறிய ஆதி, "அப்படியென்றால்... இந்த ஆற்றை எப்படிக் கடந்து போவது...?" எனத் திகைப்புடன் கேட்டான்.

"அதோ..." கொய்யா மரத்தின் அடியிலிருந்ததாழந்தழையால்பின்னி அமைத்திருக்கும் பெரிய குடையைச் சுட்டிக் காட்டினான், வால்மீகி.

தாழங் குடையைப் பார்த்துவிட்டு, "அந்தத் தாழங்குடையில் ஆற்றை எப்படிக் கடக்க முடியும்...?" என விளங்காமல் கேட்டான், ஆதி.

வால்மீகி சிரித்தான்: "இதெல்லாம் என்னுடைய பச்சைப் பாம்புத் தாத்தாவின் கண்டுபிடிப்புகளுள் ஒன்று...! இதை மழையில், வெயிலில் குடையாகவும், ஏரி, குளம், ஆறுகளில் படகாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்..." எனப் புன்சிரிப்புடன் சொல்லிக் கொண்டே ஓடினான். மரத்த்டியிலிருக்கிற தாழங்குடையைத் தூக்கி வந்தான். வைத்தான். தனது தோளில் மாட்டிக் கொண்டிருக்கிற கயிற்றுச் சுருணையை எடுத்தான். பிரித்தான். கயிற்றின் ஒருமுனையைத்தாழங்குடையின் விளிம்பில் கட்டினான். அப்புறம், நாகனிடமுள்ள கயிற்றை வாங்கிப் பிரித்து, ஒரு முனையைத் தாழங்குடையின் மற்றொரு பக்கமாகக் கட்டினான். அதற்கப்புறம், தாழங்குடையைத் தூக்கிச் சென்றான். ஆற்றின் கரையோரச் சேற்றில் புதைந்திருக்கிற ஒரு மலைப்பாறையில் ஏறினான்; குனிந்தான். தலைக்கு மேலே பிடித்திருக்கிற தாழங்குடையைக் கவிழ்த்தான். ஆற்றின் காவிநிறத் தண்ணீரில்மிதக்க விட்டான். அந்தக் குடை, அலையாடும் நீரில் அப்படியும் இப்படியுமாகப் படகாக அசைந்தது...!

"அடே...! குடை படகாக மாறி விட்டதே...!" என்றான், பீமன்.

"இது ஒரு புது மாதிரியான குடைப் படகு...!" எனச் சிரித்தாள் வீராயி...

"அது சரி... இந்தத் தாழம் படகு, தண்ணீரில் ஊற, ஊற..." எனச் சந்தேகத்துடன் தயங்குகிற ஆதியைப் பார்த்துச்சிரித்தான்வால்மீகி."இந்தத் தாழங்குடையின்மேல்புறத்தில்,ஏதோ ஒரு காட்டு மரப் பிசினைப் பூசி வைத்திருக்கிறார், என் தாத்தா. அதனால்...

எத்தனை நாள் நீரில் கிடந்தாலும், தாழந் தழையை மீறி ஒரு பொட்டுத் தண்ணீர் கூட உள்ளே போகாது..!'' எனச் சிரித்தவாறு சொல்லிக் கொண்டே, மலைப்பாறையிலிருந்து மெல்ல இறங்கினான். தாழம் படகில் காலூன்றி நின்றான். தாழம் படகின் விளிம்பில் கட்டியிருக்கிற கயிற்றின் முனையைப் பீமனிடம் கொடுத்தான்.

''நான் ஆற்றின் அக்கரைக்குப் போனதும், இந்தக் கயிற்றை இழுங்கள். படகு வந்ததும், ஒருவர் ஏறிக் கொள்ளுங்கள். நான் அக்கரையிலிருந்து கயிற்றை இழுக்கிறேன். இவ்வாறே, எல்லோரும் ஆற்றைக் கடக்கலாம்...'' என்ற வால்மீகி, கையிலுள்ள மூங்கில் தடியின் முனையைப் பாறையில் வைத்து நெட்டித் தள்ளினான்.

படகு, மிதந்தவாறே நழுவியது!

சற்று நேரத்திற்குள் —

தாழம் படகின் நடுவில் அமர்ந்து கொண்ட வால்மீகி, இரு கைகளாலும் தண்ணீரைத் துழாவினான். படகு, நாற்பது நாற்பத்தைந்து மீட்டர் அகலமுள்ள அக்கினி ஆற்றில் நழுவி நகர்ந்துதவழ்ந்துசென்று,மறுகரையை அடைந்தது. அங்கிருந்த ஒரு கரும் பாறையில் படகை விட்டுத் தாவியேறிய வால்மீகி, இக்கரையிலுள்ள பீமனை நோக்கிக் கூவினான்: ''பீமா...! கயிற்றை இழு...!''

பீமனும் நாகனும் கயிற்றை இழுத்தார்கள்.

படகு வந்தது.

''நான் போகிறேன்...'' ஆசையும் ஆவலுமாக மலைப் பாறையில் ஏறி



ளுள்; படகில் மெதுவாக இறங்கி நின்ருள்; அக்கரையிலிருக்கிற வால்மீகியைப் பார்த்தாள்; ''டேய்...! இழுடா...!'' எனக் கூவினுள், வீராயி.

உடனே —

வால்மீகி, ஓங்கிய குரலில் பாடினுன்:

''மண்ணை நம்பி — ஏலேலோ
ஆறிருக்கு...
ஆற்றை நம்பி — ஏலேலோ
படகிருக்கு...
படகை நம்பி — ஏலேலோ
நீயிருக்கே...
உன்னை நம்பி — ஏலேலோ
நானிருக்கேன்....!''

எனத் தமாஷாகப் பாடியவாறே கயிற்றைப் பற்றிக் கொண்டு படகை இழுத்தான், வால்மீகி. அவனது பாட்டைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள்.

இவ்வாறே... இவ்வாறே...

எல்லோரும் படகில் ஏறி ஆற்றைக் கடந்தார்கள்.


அப்புறம் —

''அப்புறம் என்னடா... ஆற்றைக் கடந்து வந்துவிட்டோம். இனி, இந்தத் தாழங்குடையை — அவசர காலப் படகை — என்ன செய்வது...?'' என்ருன், பீமன்.

''என்ன செய்வது...? இதையும் தூக்கிக் கொண்டு அலைய முடியுமா...? இந்தத் தாழங் குடைப் படகை இங்கேயே, இந்த ஆற்றிலேயே விட்டு விட்டுப்புறப்படவேண்டியதுதான்...!" என்ருன், நாகன்.

''அதாவது... மேலே ஏறிச் சென்றதும், மேலே ஏறிச் செல்வதற்கு உத





விய ஏணியை எட்டி உதைத்துத் தள்ளு! — என்கிறாயா?" எனக் குறுஞ் சிரிப்புடன் கேட்டாள், வீராயி.

மறுநொடி —

"வேண்டாம்! வேண்டாம்...! இந்தத் தாழங் குடைப் படகை ஆற்றிலேயே விட்டுப் போகக் கூடாது...!" என்றவாறே கரும் பாறையில் நின்று கொண்டு, தாழம் படகை நீரிலிருந்து தூக்கினான். கரைக்கு எடுத்துச் சென்றான். விளிம்புகளில் கட்டியிருக்கிற கயிறுகளை அவிழ்த்தான் வால்மீகி. "டேய், ஆதி... பீமா... இக்கயிறுகளைச் சுருணையாகச் சுற்றுங்கள்...." என்றபடியே கயிறுகளை அள்ளிக் கரையை நோக்கி அவன் வீசி எறிந்தான். பிறகு, தாழம் படகைத் தூக்கிக் கொண்டு கரைக்குப் போனான். அங்கிருக்கிற மலைப் பாறைகளின் இடுக்கில் ஒளிவு மறைவாகச் செருகி வைத்து விட்டுத் திரும்பினான்.

"அந்தக் குடையை அங்கே எதற்குப் பதுக்கி வைக்கிறாய்...?" என்றான், நாகன்.

"அக்கினி மலைக்குப் போய்... அங்கிருக்கிற பூதத்தைக் கண்ணாரக் கண்டு விட்டுத் திரும்பி வரும்போது, இந்த ஆற்றைக் கடந்து போவதற்கு, இந்தத் தாழங்குடைப் படகு மீண்டும் பயன்படலாமே...!" என்றான், வால்மீகி.

"ஓ... அப்படியா...!" என்றான், நாகன்.

"ஆமாம், அதுவும் சரிதான்...!" என்றான், பீமன்.

அடுத்த நொடி

"ம்,ம்... சரிசரி... புறப்படுங்கள்... புறப்படுங்க்ள்...!" எனப் பரபரப்புடன் சொல்லிக் கொண்டே சுறுசுறுப்பாக முன்னே நடந்தாள், வீராயி. எல்லாரும் அவளைத் தொடர்ந்து நடந்தார்கள்... நடந்தார்கள்... நடந்தார்கள்.

வெயில் முதிர்ந்து பளீரிட்டது.

வானளாவ ஓங்கி வளர்ந்திருக்கிற மரங்களும், செடி கொடிகளும், புல்லும் பூண்டும், கல்லும் கரடுமாகச் செருமிச் செழித்திருக்கிற ஆரணியத்திலே —

அப்படியும் இப்படியுமாகப் பராக்குப் பார்த்தவாறே —

வேர்க்கடலை, தினை மாவு உருண்டைகள், கேழ்வரகு அடைகளைச் சுவாரசியமாக மென்று தின்று அசை போட்டுச் சுவைத்தபடியே —

ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டே —

வெகு தூரத்தில், பனி மூட்டத்துக்கு அப்பாலே காணுகிற மாதிரி, மேகங்களோடு மேகமாகத் தோன்றும் அக்கினி மலையைக் குறி வைத்து, வேகம் வேகமாக நடந்தார்கள், அவர்கள்.

அதாவது:

ஆதி,
வால்மீகி,
பீமன்,
நாகன்,
வீராயி....

இந்தத் தமிழோங்கிபுரத்தின் வானர சேனை...

இந்தப் பாரதி காலப் பாண்டவர்கள்...

இந்த அரைக்கால் சட்டை வீரர்கள் (ஆமாம், வீராயி கூட அரைக்கால் சட்டையும், மேல் சட்டையும்தான் அணிந்திருந்தாள்!) தெம்பும் தீரமுமாக நடந்துகொண்டிருக்கும்போது...

ஏதோ ஞாபகத்துடன்...

என்னவோ நினைப்புடன்...

சட்டென்று நின்றான், வால்மீகி.

"என்னடா...?" என்றான், பீமன்.

"ஒரு முக்கியமான விஷயத்தை மறந்தே போய் விட்டேன்...!" என்று அசட்டுச் சிரிப்புடன் தலையில் கட்டியிருக்கிற சிவப்பு நிற முண்டாசுத் துண்டை அவிழ்த்தான். துண்டின் ஒரு முனையில் காணும் முடிச்சை நெகிழ்த்திப் பிரித்தான், வால்மீகி.

"அதென்னடா, தின்பதற்கு ஏதாவது..." வால்மீகி அவிழ்க்கிற முடிச்சைக் கூர்ந்து கவனித்த பீமன், ஆவலுடன் வினவினான்.

"ஆமாம், உனக்குத் தின்பதற்கு எனக் கொண்டு வருவதென்றால், ஐந்து பேரும் ஐந்து மூட்டைகளைத்தான் தூக்கி வர வேண்டும்...!" எனக் குறும்பாகச் சொல்லிச் சிரித்தாள், வீராயி.

"ஹும்...! பழுத்துத் தொங்குகிற கனிகளும், கொழுத்துப் புதைந்திருக்கிற கிழங்குகளும் செழித்துச் சூழ்ந்திருக்கிற காட்டுக்குள் வந்து, வயிற்றுக்கு வேண்டும் என்று தவிக்கிறாயேடா...!" என்று குத்தலாகச் சொல்லிச் சிரித்தான், ஆதி.

"ஆனையைக் கட்டித் தீனி போட்டாலும் போடலாம். ஆட்டைக் கட்டித் தீனி போட முடியாது! — என்று சும்மாவா சொன்னார்கள்...?" என்றாள், வீராயி.

முண்டாசுத் துணியின் முடிச்சுக்குள்ளிருந்து, ஒரு நீல நிறக் காகிதப் பொட்டலத்தை எடுத்தான்; பிரித்தான், வால்மீகி... "ம்... ஆளுக்கு இரண்டு மிட்டாய் தின்னுங்கள்..." என்றவாறே, பொட்டலத்திலிருந்து வெண்ணிற மாத்திரை உருண்டைகளை எடுத்தான். ஒவ்வொருவருக்கும் இரண்டு இரண்டு மாத்திரைகளைக் கொடுத்தான். தானும் இரண்டு மாத்திரைகளை எடுத்து வாயில் போட்டுக் குதப்பி விழுங்கினான்.

"இது என்ன மிட்டாய்...?" என்றான், ஆதி.

"இது தித்திக்குமா...?" என்றான், நாகன்.

"முதலில் மாத்திரைகளை விழுங்குங்கள்..." என்றான், வால்மீகி.

ஆதி,

பீமன்,

நாகன்,

மூவரும் மாத்திரைகளை விழுங்கினார்கள். கடைசியாகத் தயங்கி மயங்கித் தவிக்கிற வீராயியைப் பார்த்தான். சிரித்தான், வால்மீகி. "இது... தித்திக்கிற மிட்டாய் அல்ல; எட்டிக் காயாய்க் கசக்கிற மருந்து உருண்டை. இதைத் தின்பவர்களை இருபத்தி நாலு மணி நேரம் வரையிலும், எந்தப் பாம்பு கொத்தினாலும், எந்தப் பூச்சி கடித்தாலும் துளிக்கூட விஷமே ஏறாது...!" எனச் சிரிப்பை அடக்கிக் கொண்டு விளக்கமாகச் சொன்னான்.

"ஓ...! அப்படியா...!" என்றபடியே முகத்தை நிமிர்த்தி, வாயைப் பிளந்து, மருந்து உருண்டைகளை உள்ளுக்குத் தள்ளி விழுங்கிய வீராயி —

என்ன...?

என்ன ஆயிற்று...?

அவள் திடுக்கிட்டாள்! நாவைப் புரட்டி எச்சிலைக் கூட்டி விழுங்கியவாறே, "ஆதி...! பீமா...!" என்று மெல்லிய குரலில் அலறினாள்!

"என்ன வீராயி...!" என்றான், ஆதி.

"அதோ... அதோ பார்... பா...ம்...பு...!" அருகிலுள்ள ஒரு புளிய மரத்தின் கிளையைச் சுட்டிக் காட்டினாள், வீராயி.

எல்லாரும் பார்த்தார்கள்.

மரக் கிளையில் தொத்தியவாறு

குண்டு மணி விழிகளை உருட்டியபடி

இரட்டை நாக்கை நீட்டி, நீட்டி...

அதைக் கண்டதும் —

வால்மீகி சிரித்தான்.

"அது பாம்பு அல்ல..." என்றான், ஆதி.

"அது... உடும்பு...!" எனச் சிரித்தான், பீமன்.

"அதைப் போய்ப் பிடித்துக் கொண்டு..." தாவியோடினான். புளிய மரத்தின் மீது பாய்ந்தான். கவ்விப்

பிடித்துச் சரசரவென்று ஏறினான். உடும்பு கவ்வியிருக்கும் கிளையைப் பற்றித் தவழ்ந்து சென்ற நாகன் —

'தபதபதபதபதப...'

பூமி அதிருவது போன்ற சப்தத்தைக் கேட்டதும், மரக் கிளையில் அமர்ந்தபடியே நிமிர்ந்து பார்த்தான், அவன்.

சற்றுத் தொலைவிலே —

காட்டுப் பூமியின் செந்நிறத் தூசியும், தும்பும் பிரும்மாண்டமான புகை மண்டலமாகக் குபுகுபுவெனப் பொங்கிப் புரண்டு எழும்பின! வானவெளியில், 'டமடமடமடம...'வென்று குமுறும் தொடர் இடியோசை மாதிரி, 'தமதமதமதம...' என அந்தப் பெருஞ் சப்தம் காட்டையே நடுக்கியது! குலுக்கியது!

என்ன அது...?

நாகன் கூர்ந்து கவனித்த நொடியே —

''அய்யோ...!'' என்று அலறினான்! ''அம்மா...!'' என்று கதறினான்! ''ஆபத்து...! ஆபத்து...! எல்லாரும் மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்...!'' என்று உயிர் பதற, உள்ளம் உதற ஓங்கிக் கூவினான்...!

''என்ன...? என்ன...? என்ன...?'' என்று நெஞ்சம் நடுங்கியவாறே ஆளுக்கு ஒரு பக்கமாகத் தாவியோடினார்கள். கண்ணில் பட்ட மரங்களில் ஏறிக் கொண்டு பார்த்தார்கள்.

ஓரிரண்டு விநாடிகளில் —

சூறாவளிப் புயல் சீறிச் சுழன்று வருகிற மாதிரி, மகா சமுத்திரம் பொங்கிப் பூரித்துப் பாய்கிற மாதிரி, இமய மலையிலுள்ள பூதாகாரமான பாறாங்கற்கள் திரண்டு உருண்டு தாவிப் பறக்கிற மாதிரி —

'தபதபதப...'வெனும் பயங்கர சப்தத்துடன் 'திமுதிமுதிமு...'வெனத் திரண்டு புரண்டோடி வந்தன! காட்டு மரங்களுக்கிடையியே புகுந்து வளைந்து பாய்ந்தோடின!

எவை...?

காட்டுப் பிசாசுகள்!

ஆமாம் —

அறுநூறு, எழுநூறுக்கு மேற்பட்ட பயங்கரக் காட்டு எருதுகள்...!

சில விநாடிகளுக்குப் பிறகு —

தும்பும், தூசியும் தணிந்தன.

திகிலும், திணறலும் அடங்கின.

''ஹூம்...! கடவுள்தான் நம்மைக் காப்பாற்றினார்...!'' நாகமரத்தின் கிளையைக் கவ்விப் பற்றிக் கொண்டிருக்கிற பீமன், பெருமூச்செறிந்தான்.

''ஊருக்குள் வந்த ஒரே ஒரு காட்டெருதுவின் அட்டகாசத்தைச் சமாளிக்க முடியாமல், தமிழோங்கிபுரமே தகிங்கிணதோம் போட்டது! இத்தனை இத்தனை நூறு காட்டெருதுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டிருந்தால்... நம்முடைய கதி என்னவாகியிருக்கும்...?'' புன்னை மரக்கிளையில் கால்களைப் பின்னியவாறு உட்கார்ந்திருக்கிற வால்மீகி, அச்சமும் அதிர்ச்சியுமாக நெட்டுயிர்த்தான்!

''என்னவாகியிருக்கும் என்றால்... நம்முடைய கதி, அதோகதியாகியிருக்கும்...!'' பூவரச மரக்கிளையில் தொத்திக் கொண்டிருக்கிற ஆதி, பயத்தால் உலர்ந்த நாவைத் துழாவிப் புரட்டி ஈரப்படுத்தியவாறே சொன்னான்.

அடுத்த நொடி —

புளியமரக்கிளையிலிருக்கிறநாகன், என்னவோ அதிர்ச்சியுடன் பீமனைப் பார்த்தான். வால்மீகியைப் பார்த்தான். நெஞ்சம் நடுங்கியபடியே கூவினான்: ''வீராயி எங்கே...?''

எல்லோருக்கும் திகீரென்றது!

''வீராயி எங்கே...?''

''வீராயி எங்கே...?''

''வீராயி எங்கே...?''

எல்லோரும் மரங்களிலிருந்து இறங்கினார்கள். அங்கும் இங்குமாகப் பாய்ந்தோடித் தேடினார்கள்.

வீராயியைக் காணவில்லை...!

(தொடரும்)

சேவலின் முட்டை

இவள்: சேவல் முட்டையிடுமா?

அவன்: இடும்!


இவள்: எப்படி?

அவன்: வாத்தியார் சேவல் படம் வரையச் சொன்னார்! வரைஞ்சேன்! அது சேவல் இல்லைன்னு முட்டை போட்டுட்டாரே!

— கடலூர் கன்னியப்பன்.




பாரதி புதிர்-7





மேலே தெரியும் காட்சி பாரதியாரின் பாடலில் உள்ள சில வரிகளை நினைவுபடுத்துகின்றன அல்லவா? அவை எந்த வரிகள்?


விடை 66-ஆம் பக்கம்.


பேசாத சித்திரங்கள்












உருவகக் கதைகள்

மலையமான்

எது அழகு?



மேகம் இல்லாத வானத்தில் விளங்கும் முழுநிலாவைப் போல, ஒரு பெண் மான் அழகாக இருந்தது. ஏழை வீட்டுக் கடைசிக் குழந்தையைப் போல, அழகில்லாமல் இருந்தது அதன் சகோதரி மான்.

“நாம் அழகாக இருக்கிறோம்” என்பதைத் தெரிந்து கொண்டதிலிருந்து, அழகு மானுக்குக் கர்வம் தலைக்கேறி விட்டது. அதனால், அது, மேலும் அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக, காலையிலும் மாலையிலும் கண்ணாடி முன்னால் நின்று கொண்டு, நீண்ட நேரம், தன்னை ஒப்பனை செய்து கொள்ளத் தொடங்கியது. இதுவே அதன் பழக்கமாகிவிட்டது. அது மட்டுமல்ல; அழகில்லாமலிருக்கும் தன் சகோதரி மானைக் கேலி செய்வதும் அழ வைப்பதும் தினசரி செய்யும் செயலாகி விட்டது.

அழகற்ற மான் அளவற்ற வருத்தமும், வேதனையும் கொண்டது. தன் மனத்தை எந்த நேரமும் வாட்டிக் கொண்டது. ஒருநாள் அதன் துக்கம் கரை கடந்து போய் விட்டது. அது ஒட்டைச் சிவிங்கி மாமியிடம் தன் குறையைக் கொட்டிக் கண்ணீர் விட்டு அழுதது. உயர்ந்த பண்பு கொண்டிருந்த ஒட்டைச் சிவிங்கி, அதற்கு ஆறுதல் கூறி அதன் மனத்தைத் தேற்றியது. உடல் அழகு நிலையில்லாதது என்றும் அறிவுரை கூறியது.

அந்த அறிவுரையை அப்படியே ஏற்றுக் கொண்ட அந்த மான், அன்று முதல் தன் மனத்தைத் தளர விடாமல், அன்பும் பண்பும் கொண்டு விளங்கியது. அழகுமானின் புண்படுத்தும் கேலிச் சொற்களைக்கூடப் பொருட்படுத்தாமலிருந்தது.

ஒருநாள் எதிர்பாராத விதமாக, மான்கள் இருந்த பாகத்தில் காட்டுத்தீ பிறந்து, எங்கும் பரவியது. அதில், அழகு மான் சிக்கிக் கொண்டது. அழகற்ற மான் தப்பித்துக் கொண்டது. நெருப்பில் அடிபட்ட மான், தப்பிப் பிழைத்தாலும், அதன் உடம்பில் பல பகுதிகள் தீயினால் கருகிவிட்டன. அதனால், அழகு மாறியது மட்டுமல்ல; பார்ப்பதற்கே சகிக்க முடியாத அளவுக்கு அது கோரமாகத் தோன்றியது. மற்ற மிருகங்கள் அதனிடம் நெருங்குவதற்குக் கூசின. ஆனால், அழகற்றதாக, அதனால் அடிக்கடி கேலி செய்யப்பட்ட சகோதரி மான் தானாகவே முன்வந்து அதற்கு மருந்து போட்டது.

“உள்ளத்தின் அழகே உயர்ந்த அழகு” என்பதை எண்ணி எண்ணி அதற்காகவும் கண்ணீரைச் சொரிந்தது, முன்பு அழகு உடம்பைப் பெற்றிருந்த அந்த மான்!

இரண்டு பழங்கள்

ஒரு தாயின் வயிற்றில் பிறந்து ஒற்றுமையாக இருக்கும் குழந்தைகளைப் போல, ஒரு தோட்டத்தில் நாவல் மரமும் அசோக மரமும் அடுத்தடுத்து இருந்தன. புகழால் உயர்ந்த பிள்ளைகளைப் போல, அவை ஓங்கி உயரமாக வளர்ந்திருந்தன.

தன் கடமையை ஒழுங்காகச் செய்யும் வேலைக்காரனைப் போல, அவை உரிய காலத்தில் பூத்துக் காய்த்துப் பழுத்தன. வயிறு நிறைந்துவிட்ட குழந்தை சோற்றை வாரிச் சுற்றிலும் இறைப்பதைப் போல, அந்த மரங்கள் பழங்களைத் தரையில் உதிர்த்தன.



அந்தப் பழங்கள் உருவத்திலும் நிறத்திலும் ஒன்றாகவே இருந்தன.

அசோகப் பழம், நாவல் பழத்தைக் கூப்பிட்டு, "நாம் இரண்டு பேரும், எல்லா விதத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்கிறோம் அல்லவா!" என்று சொன்னது.

"இதை நாமே எப்படி முடிவு செய்ய முடியும்? மற்றவர்கள்தாம் இதைப் பற்றிச் சொல்ல வேண்டும்" என்று கூறியது நாவல் பழம். அசோகப் பழம் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை.


கொஞ்ச நேரம் கழித்து அந்தப் பக்கமாக ஒரு குருவி வந்தது. அது அந்த இரண்டு பழங்களையும் பார்த்தது. அது மற்றொரு குருவியிடம், "இந்த இரண்டு பழங்களும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருக்கின்றன அல்லவா?" என்று கேட்டது. அந்தக் குருவி, "ஆமாம்" என்று சொல்லித் தலையை அசைத்தது.

உடனே அசோகப் பழம், நாவல் பழத்தைக் கூப்பிட்டு, "இப்போதாவது நான் சொன்னதை ஒப்புக்கொள்கிறாயா?" என்று கேட்டது.

"இந்தக் குருவி, பார்ப்பதற்குத்தான் ஒரே மாதிரியாக இருப்பதாய்ச் சொன்னது" என்று பதில் அளித்தது நாவல் பழம்.

பிறகு ஓர் அணில் அங்கு வந்தது. அது ஏதோ ஞாபகத்தில் அசோகப் பழத்தைக் கடித்தது. முகத்தைச் சுளித்துவிட்டு, உடனே அதைக் கீழே துப்பியது. பின்பு அது நாவல் பழத்தைக் கடித்தது. அதைச் சுவைத்துத் தின்ன ஆரம்பித்தது.

அங்கு வந்த மற்றோர் அணிலிடம், "மக்களில் நல்லவரும் கெட்டவரும் உருவத்தால் ஒத்திருக்கிறார்கள்; அவர்களைப் போலவே, இந்த இரண்டு பழங்களும் அமைந்திருக்கின்றன" என்று கூறியது.





கோபுவின் குட்டிச்சாத்தான்

த. அருள் சிவபாலன்

அன்று இரவு கோபுவிற்குத் தூக்கமே வரவில்லை. அன்று காலை சென்னையில் பார்த்த, 'மை டியர் குட்டிச் சாத்தான்' படத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான்.

''அந்த சினிமாவில் வரும் குட்டிச் சாத்தான் எனக்கு நண்பன் ஆனால், என்னவெல்லாம் செய்வேன் தெரியுமா....?'' கோபுவின் சிந்தனை அசுர வேகத்தில் பறந்தது. ''தினமும் ஒரு ஐஸ் கிரீம் வரவழைத்துச் சாப்பிடுவேன்... மைசூர், பம்பாய், கல்கத்தா போன்ற எல்லா ஊருக்கும் போய் வருவேன்... அப்புறம்... நான்...''

''டேய் கோபு... பால் சாப்பிட மறந்துட்டியே... இந்தா பால்!'' கோபுவின் தாயார் கோபுவின் சிந்தனையைச் சிதைக்கும் வகையில் கூவினாள்.

கோபு பாலை வாங்கிக் குடித்து விட்டுப் படுத்தான். நடு இரவு வரை கோபு தூங்கவே இல்லை.

பிறகு நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டான்.

\+ + +

''**கோபு**...கோபு...'' தன் பெயரைச் சொல்லி அழைப்பவர் யார்? ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்த கோபு திரும்பினான்.

என்ன ஆச்சரியம்...!

அங்கே... அங்கே... அதே குட்டிச் சாத்தான்... 'மை டியர் குட்டிச்சாத்தான்' சினிமாவில் வழிய வழிய ஐஸ் கிரீமை நமது முகத்தருகே நீட்டிக் குறும்புச் சிரிப்புச் சிரித்த அதே குட்டிச் சாத்தான் நின்றிருந்தான்!

கோபுவை அந்தக் குட்டிச் சாத்தான் கைநீட்டி அழைத்தான்.

''வா... கோபு... நான்தான் சாத்தான்... கு...ட்...டி....ச்...சாத்தான்.''

''நீ... நீ... அந்த சினிமாவில் வரும் குட்டிச் சாத்தானா?''

''இல்லை. நான் அந்தக் குட்டிச் சாத்தானுடைய முப்பாட்டன்!'' என்று கூறி, திடீரென்று பூதம் போல் உருமாறினான்.

''அப்பமன்னா, அந்தக் குட்டிச் சாத்தான் உன்னுடைய முப்பேரனா?''

''ஆமாம், கோபு.''

கோபு ஐஸ்கிரீம் டப்பாவை விசி எறிந்துவிட்டு ஓடிவந்து குட்டிச் சாத்தானைக் கட்டிக் கொண்டான்.

''சாத்தான்... சாத்தான்... எனக்கு நான் கேட்பதெல்லாம் தருவியா?'' கோபு மிகவும் ஏக்கத்துடன் கேட்டான்.

''ஓ... தரேன். என்ன வேணுமானாலும் கேளு... தரேன்'' குட்டிச் சாத்

தான் குறும்பாகச் சிரித்தான்.

''ம்... எனக்கு நிறைய ஐஸ்கிரீம் வேணும்... இந்த மெட்ராஸ்லே ஒரு ஐஸ்கிரீமை ரெண்டு ரூபாக்கு அநியாயமா விக்கிறாங்க.'' கோபு ஆசையுடன் கேட்டான்.

''இதோ...'' குட்டிச் சாத்தான் கைநீட்டிய இடத்தில் நூறு ஐஸ்கிரீம் டப்பாக்கள் திமுரென்று அடுக்கப் பட்டன!

கோபு அதைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியால் குட்டிச் சாத்தானின் கன்னங்களில் முத்தமாரி பொழிந்தான்.

''நீதான் நல்ல குட்டிச்சாத்தான்... மை டியர் குட்டிச்சாத்தான்...'' கோபு ஆவலுடன் ஐஸ்கிரீம்களைத் தின்றுவிட்டு டப்பாக்களை வீசி எறிந்தான்.

''வேறே என்ன வேணும்? கேளு...? நான் தரேன்...'' குட்டிச்சாத்தான் கேட்டான்.

''இப்போதைக்கு எதுவும் வேண்டாம். இருட்டிப் போயிடுச்சு. வா, வீட்டுக்குப் போகலாம். சாத்தான், நீயும் என் ரூமிலேயே தங்கி விடு'' கோபு குட்டிச் சாத்தானின் கையைப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

இரவு எட்டு மணி.

கோபுவும் குட்டிச் சாத்தானும் படுக்கையில் படுத்தார்கள். குட்டிச் சாத்தான் சிணுங்கினான்.

''கோபு, தரையிலே படுப்பதற்குப் பிடிக்கலே. நான் மேலே வீட்டுக் கூரையில் தலைகீழாகத் தூங்கப் போறேன்.''

கோபு ஆச்சரியத்துடன் குட்டிச் சாத்தானைப் பார்த்தான். குட்டிச் சாத்தான் பாயையும் தலையணையையும் எடுத்துக் கொண்டு சுவரில் ஏறி, பிறகு வீட்டு மேல்தளத்தில் ஃபேனுக்கு அருகில் பாய் விரித்து வசதியாகப் படுத்துக் கொண்டான்.

''சாத்தான்... சாத்தான்... என்னையும் மேலே கூட்டிப் போ'' கோபு ஆவலுடன் கூறினான்.

''ஓ! கூட்டிப் போகிறேன்... வா'' குட்டிச்சாத்தான் கீழே குதித்தான். கோபுவின் கையைப் பிடித்துக் கொண்டு சுவரில் ஏறினான். பிறகு, அந்தரத்தில் அழைத்துச் சென்றான். கோபு அந்தரத்தில் அமர்ந்து மகிழ்ந்தான்.

''சாத்தான்... நீ ஏன் அந்த 'மை டியர் குட்டிச்சாத்தான்' சினிமாவில் வந்த சாத்தான் பாடின மாதிரி 'செல்லக் குழந்தைகளே... துள்ளும் வசந்தங்களே...ன்னு பாடலே?'' கோபு கேட்டான்.

''ஓ... அதுவா? நீ மட்டும்தானே இங்கே இருக்கிறாய்? நிறையப் பேர் இருந்தால்தான் 'செல்லக் குழந்தைகளே...ன்னு பாட முடியும்.''

வெகுளித்தனமாக, சிரிக்கச் சிரிக்கப் பேசும் குட்டிச்சாத்தானுடன், அன்று இரவு முழுவதும் கோபு பேசிக்கொண்டிருந்தான். பொழுது விடிந்ததும், கோபுவும் குட்டிச் சாத்தானும் சென்னை நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள்.

''சாத்தான்...எனக்கு ஒரு கடிகாரம் வேணும். அதுவும் எலக்ட்ரானிக் கடிகாரம்!''

''ஓ... இந்தா கோபு'' குட்டிச்சாத்தான் கோபுவிடம் வெறுங்கையை நீட்டினான். ஆனால், கோபு குட்டிச் சாத்தானின் கையைப் பார்த்த போது, ஓர் அழகான எலக்ட்ரானிக் கடிகாரம் இருந்தது. அதில் 'மேட் இன் இந்தியா' என்று எழுதியிருந்தது. அதை எடுத்துக் கையில் கட்டிக் கொண்டு மகிழ்ந்தான். தாம்பரம் சாலையில் கோபுவும் குட்டிச் சாத்தானும் நடந்தார்கள்.

''சாத்தான்... நடந்து நடந்து கால் வலிக்குது. ஒரு கார் வரச் செய்யேன்... அதில் ஜாலியாப் போகலாம்,'' கோபு கால் முட்டிகளைப் பிடித்துக் கொண்டான்.

குட்டிச்சாத்தான் கையிலிருந்த வெள்ளை நிறப் பொடியை ஊதினான். மறுகணம் குட்டிச்சாத்தானுக்கு எதிரே ஒரு சிவப்பு நிறக் கார் நின்று கொண்டிருந்தது.

கோபு ஆசையுடன் காரில் ஏறி உட்கார்ந்தான். குட்டிச்சாத்தான்தான் கார் ஓட்டினான்.

குட்டிச்சாத்தான், கோபுவின் கண்களுக்கு மட்டும்தானே தெரிவான்? அதனால் ஆளில்லாமல் ஓடும் காரைப் பார்த்துப் பலர் ஆச்சரியப்பட்டார்கள்; சிலர் அலறிக் கொண்டு ஓடினார்

கள். இன்னும் சிலர் காரைப் பின் தொடர்ந்து ஓடினார்கள். வழியிலே நின்ற இரண்டு போலீஸ்காரர்கள் காரைத் துரத்திப் பிடிக்க முயன்றார்கள். கார் போன வேகத்தில் அவர்களால் பின் தொடர முடியவில்லை. அயர்ந்து போய் முயற்சியைக் கைவிட்டு விட்டார்கள்!

கோபுவும் குட்டிச்சாத்தானும் ஆனந்தமாகக் காரில் சுற்றினார்கள். கோபு, குட்டிச்சாத்தான் மாயத்தால் வரவழைத்துத் தந்த மிட்டாய்களைத் தின்று தீர்த்தான். கோபுவிற்கு அப்போதிருந்த மகிழ்ச்சியில், 'பூந்தென்றல் காற்றே...மணம்...கொண்டுவா...' என்று பாட வேண்டும் போலிருந்தது.

மாலை நேரம் ஆறு மணி.

குட்டிச்சாத்தான் மாயத்தால் வந்த காரை மாயத்தால் மறையச் செய்தான். கோபு குட்டிச்சாத்தானுடன் தன் வீட்டில் நுழைந்தான்.

''சாத்தான்... அடுத்த வாரம் எங்க ஸ்கூல்ல பரீட்சை வைக்கிறாங்க. அதனால், அந்த வினாத்தாளை நீ எடுத்து வந்து எனக்குத் தரணும்'' கோபு வேண்டினான்.

குட்டிச்சாத்தானின் முகம் கோபத்தால் சிவந்தது. ''கோபு... நீ என்ன கேட்டாலும் நான் தருகிறேனே... ஏன் தெரியுமா? உன்னை மாதிரிக் குறும்புத்தனம் பண்ணாத செல்லக் குழந்தைகளைச் சந்தோஷப்படுத்துவதும், சுறுசுறுப்புத் தருவதும் கடவுள் எனக்குக் கொடுத்த வேலை. ஆனால், நீ கேட்பது போல் பரீட்சை வினாத்தாளை உன்கிட்டே கொடுத்து, உன்னை நான் சோம்பேறியாக மாற்ற விரும்பவில்லை. பரீட்சை எதுக்கு வைக்கிறாங்க தெரியுமா? நீ எவ்வளவு படிச்சிருக்கேன்னு சோதிக்கத்தான். வினாத்தாளைப் பரீட்சைக்கு முன்னாலேயே பார்த்துப் படிப்பதில் பிரயோஜனமே இல்லை.''

''ஆமா, ஆமா. குட்டிச்சாத்தான்... தெரியாமே கேட்டுட்டேன்'' கோபு



பாரதி புதிர்-7 விடை

முருகா! முருகா! முருகா!
வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்.
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்.
(முருகன் பாட்டு)

கெஞ்சலாகக் கூறினான்.

"பரவாயில்லே கோபு. பல குழந்தைகள் கேட்பதைத்தான் நீயும் கேட்டே. வேறு ஏதாவது உனக்கு வேணுமா?"

"ம்... வேணும்..."

"என்னது?"

"கிண்டியிலிருந்து 'கோகுலம்'னு ஒரு பத்திரிகை வருது... அந்தப் பத்திரிகையிலே இதுவரைக்கும் நூற்றுக் கணக்கான குழந்தைகளுடைய போட்டோக்களும் கதை, கவிதை, துணுக்குகளும் வந்திருக்கு. ஆனா, இதுவரைக்கும் என்னுடைய ஒரு கதை கூடப் போடலே" கோபு ஏக்கத்துடன் கூறினான்.

"நீ கதை எழுதி அனுப்பினாயா?" குட்டிச்சாத்தான் கேட்டான்.

"ம்... இதுவரைக்கும் பத்துக் கதைகள் எழுதி அனுப்பினேன். ஒண்ணு கூட வரலே."

"கோபு... நீ மட்டும்தான் கோகுலத்துக்குக் கதை எழுதுவதா நினைக்காதே... உன்னை மாதிரி நூற்றுக் கணக்கான குழந்தைகள் கோகுலத்துக்குக் கதை எழுதறாங்க. அதெல்லாம், ஒவ்வொண்ணா, கவனமாப் படிச்சு அவை நல்லா இருந்தா பத்திரிகையில் வெளியிடுவாங்க" குட்டிச்சாத்தான் கோகுலத்தைப் பற்றி ஒரு 'லெக்சர்' அடித்தான்.

"நான் கதைகளை அனுப்பி அஞ்சாறு மாதமாகுது. இன்னும் கோகுலத்தில் போடலே" கோபு எரிச்சலுடன் கூறினான்.

"கோபு... குழந்தைகளுக்குப் பத்திரிகை நடத்துவது ஒண்ணும் கிள்ளுக்கீரை இல்லே. எவ்வளவு கஷ்டம் தெரியுமா?"

"ஆமாம்... சாத்தான்... பத்திரிகைகளைப் பற்றி இவ்வளவு அழகா சொல்றியே... உனக்கு எப்படிப் பத்திரிகை பற்றித் தெரியும்?"

"கோபு... பிறப்பு, இறப்பு, காலம், இடம் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் நான். குழந்தைகளை மகிழ்விக்கக் கடவுளால் அனுப்பப்பட்ட திருத்தூதன் நான். எனக்கு எல்லாமே தெரியும்."

"அப்பமன்னா என் கதை கோகுலம் பத்திரிகையில் வருமா?" கோபு கேட்டான்.

"கட்டாயம் வரும்."

"கூடவே என் போட்டோவும் வருமா?"

"நிச்சயமா வரும்" குட்டிச்சாத்தான் உறுதியுடன் கூறினான்.

"சத்தியமா?"

"சத்தியமா! குட்டிச் சாத்தான்கள் எப்போதும் பொய்யே பேசாது. கோபு... என்னை நீ நம்பு. அடடே, நேரம் அதிகமாயிடுச்சு. படுத்துத் தூங்கு. காலையில் சந்திப்போம்... குட்நைட்!" குட்டிச்சாத்தான் கோபுவின் தலையை வருடிவிட்டு மறைந்தது. கோபுவிற்குத் தூக்கம் வந்தது.


+ + +

"கோபு... கோபு... எழுந்திரு. இன்னிக்கு நீ நிறைய நேரம் தூங்கிட்டே." கோபுவின் தாயார் கோபுவைத் தட்டி எழுப்பினாள், "இப்ப எட்டு மணி ஆகுது. இன்னிக்கு உன் பிறந்த நாள்! தெரியுமா?"

கோபு துள்ளிக் குதித்து எழுந்தான். வேகமாகக் குளியலறைக்குள் நுழைந்து பல் துலக்கினான். கோபு குட்டிச்சாத்தானை நினைத்துப் பார்த்தான், 'அந்தக் குட்டிச் சாத்தான் ஒரு கடிகாரம் தந்தானே...!' என்று நினைவு வர கோபு வேகமாக ஓடி மேசை மீது தேடினான்.

"கோபு என்னத்தைத் தேடறே?" கோபுவின் தாய் கேட்டாள்.

"கடிகாரம். ஒரு எலக்ட்ரானிக் கடிகாரம்."



மகாராஜா பிரதாப சிம்மன் !!!!

"கடிகாரமா...? ஏது...?"

"குட்டிச்சாத்தான் கொடுத்தான்."

"குட்டிச்சாத்தானா? என்ன உளறுறே? இரவிலே கண்ட கண்ட கனவெல்லாம் கண்டுட்டு உளறுறியே? போ... போய்க் குளி" கோபுவின் தாய் கோபுவை விரட்டினாள்.

பிறகுதான் கோபுவுக்குத் தெரிந்தது, தான் கண்டது கனவு என்று. கடவுளின் தூதனை குட்டிச்சாத்தானைப் பிரிந்த சோகத்துடன் கோபு குளியலறையில் குளித்தான். பிறகு, வெளியே வந்து தலைவாரிக் கொண்டிருந்தான்.

"சார் போஸ்ட்...!" வாசலில் தபால்காரர் குரல் கேட்டு வாசலுக்குச் சென்றான் கோபு.

தபால்காரர் ஒரு தபால் கார்டைக் கொடுத்துவிட்டுச் சென்றார். அதைக் கண்ட கோபுவிற்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி!

அந்தத் தபால் அட்டையில் வலப்புறம் கோகுலம் அடையாளத்தைக் (பிள்ளையாரும் கிருஷ்ணனும் உள்ள படம்) கண்டு அது 'கோகுல்ம்' பத்திரிகையிலிருந்து வந்துள்ளது என்பதைத் தெரிந்து கொண்டான். கோகுலத்தின் ஆசிரியர் அவனுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

'அன்புள்ள செல்வன் கோபுவுக்கு, உன் கதை 'பலே பாண்டியா!' என்ற தலைப்பில் அடுத்த மாத இதழில் இடம் பெறுகிறது. அந்த இதழில் வெளியிட பாஸ்போர்ட் அளவுள்ள உன் புகைப் படம் ஒன்றை அனுப்பினால் நல்லது.' என்றிருந்தது.

"அம்மா... அம்மா... என் கதை அடுத்த மாத கோகுலத்தில் வரப் போகுது."

கோபுவின் தாய் ஆச்சரியத்துடன் கேட்டாள், "என்னது! கோகுலத்தில் உன் கதையா?"

"ஆமாம். 'பலேபாண்டியா!' என்ற தலைப்பில் நான் எழுதிய சிறுகதை கோகுலத்தில் வரப் போகுது. இதோ பாரேன்... ஆசிரியர் லெட்டர் போட்டிருக்கார்." கோபுவிற்குத் தன் மகிழ்ச்சியை எப்படித் தெரிவிப்பதென்றே தெரியவில்லை.

இந்த உலகில் பிறந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு வாழ்நாளிலேயே முதன் முறையாக, உலகிற்குப் போட்டோவுடனும் கதையுடனும் 'கோகுலம்' மூலமாகத் தான் அறிமுக

மாகப் போவதை எண்ணும் போது கோபு இந்தப் பூவுலகிலேயே இல்லை! அவனுக்குவானத்தில்மிதப்பதுபோல ஓர் அனுபவம்...!

"அம்மா... நேத்து ராத்திரிக் கனவிலே வந்த குட்டிச்சாத்தான் என் கிட்டே உறுதி கூறினான்," என்று கோபு ஆசையுடன் கூறினான்.

"என்ன! உறுதியா?" கோபுவின் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை.

"ஆமாம். கோகுலத்தில் என் பெயரும், கதையும் படமும் வரும் என்று உறுதியாகச் சொன்னான்."

அப்போது வாசலில் கோபுவின் தாய்மாமன் வந்தார். அவர் ஆவலுடன் கோபுவை அழைத்தார்.

"குட்டி எழுத்தாளர் மாஸ்டர் கோபு...இந்தா...உனக்குஎன் பர்த்டே பிரசன்ட்!" தாய்மாமன் கையை நீட்டினார். அதில் ஒரு எலக்ட்ரானிக் கடிகாரம் இருந்தது!

"எலக்ட்ரானிக் கடிகாரம்... அதேதான்... அதேதான்... நேத்து ராத்திரி குட்டிச்சாத்தான் எனக்குத் தந்த அதே கடிகாரம்" கோபுவிற்கு ஆச்சரியத்தால் கண்கள் மின்னின.

'கோபுவின் தாய்மாமன் கோபு 'குறும்பு' செய்வதாகநினைத்துச்சிரித்தபடி 'ஹாப்பி பர்த்டே டு யூ' என்று பாடி விட்டுத் தன் அறைக்குள் நுழைந்தார்.

"அம்மா... நான் காலையில் ஒரு கடிகாரத்தைத் தேடினேன்... அதேதான் இதுவும்" கோபு தன் அம்மாவிடம் கடிகாரத்தைக் காட்டினான்.

"அசடு! என்ன உளருறே?" கோபுவின் தாய் பொய்க்கோபத்துடன் கேட்டாள்.


"இதோ... நீ வேணுமானாலும் பாரேன்... சாத்தான் கொடுத்த கடிகாரத்திலும் 'மேட்' இன் இண்டியா'ன்னு எழுதியிருந்துச்சு. இதிலேயும் அதே எழுதியிருக்கு."

"சரிசரி, சாப்பிடவா. உனக்குப் பிடிச்ச பாதாம் அல்வா செய்திருக்கேன்."

கோபு கடிகாரத்தைக் கையில் கட்டிக் கொண்டான். சாப்பிடும் போது கோகுலம் ஆசிரியர் எழுதிய கடிதத்தை ஓர் எழுத்து விடாமல் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தான்.

அவனது மனம் குட்டிச்சாத்தானையே நினைத்தது. சாப்பிட்டவுடன் கோபுநேராகஸ்டுடியோவிற்குக்கிளம்பினான், புகைப்படம் எடுத்துக் கொள்ள.

'உண்மையில் குட்டிச்சாத்தான் சொல்வதெல்லாம் உண்மை!' — இப்படிச் சொல்வது நானல்ல. கோபுதான்!



பிருந்தாவனம்





பிருந்தாவனம் எங்கே இருக்கிறது?

வட இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் மதுரா நகரத்துக்குச் சுமார் 6 மைல் தூரத்தில் உள்ளது பிருந்தாவனம். யமுனை ஆற்றங்கரையில் உள்ள இந்த இடம்தான் கண்ணன் பல லீலைகளை நடத்திய இடம். இங்கே சென்னை வியாபாரிகள் கட்டிய 'ரங்கநாத மந்திர்' என்ற கோயில் இருக்கிறது. நம் தமிழ்நாட்டுக் கோயிலைப் போல் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு மயில்களும், குரங்குகளும் ஏராளம்.

—ஏ. பிரபு (641), பரோடா.

எந்த ராகம்?

1 தூங்க வைக்கும் ராகம் எது?
2 விழித்தெழவைக்கும் ராகம் எது?
3 சோகத்தைத் தரும் ராகம் எது?
4 மகுடியில் ஊதப்படும் ராகம் எது?
5 ஒரு ராகத்தின் பெயரும், நாட்டின் பெயரும் ஒன்று—அது எது?

விடை: 1. நீலாம்பரி, 2. பூபாளம், 3. முகாரி, 4. புன்னாகவராளி, 5. கானடா.

—என். செந்திகுமார் (131), பேரூர்.





யாருக்கு மதிப்பு?

"தாயும் தந்தையும் ஒரே சமயத்தில் கூப்பிட்டால், யாருடைய குரலுக்கு உடனே மதிப்புக் கொடுக்க வேண்டும்?" என்று ஒருவர் முகமது நபியவர்களிடம் கேட்டார்.


"தாயின் சொல்லுக்குத்தான் முதலில் மதிப்புக் கொடுக்க வேண்டும். காரணம், தாயின் பாதங்களின் அடியில்தான் சொர்க்கம் இருக்கிறது" எனப் பதிலளித்தார் நபிகள் நாயகம்.


—சு. முருகன் (1076), கோவை—3.

3 மாதங்களில் முழு பைபிள்

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு கான்டர்பரியில் ஒரு தலைமைப் பாதிரியார் இருந்தார். அவர் பெயர் தாமஸ் கிரானர். அவருக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. அத்துடன் விடா முயற்சியும் இருந்தது. மூன்றே மாதங்களில் கிறிஸ்தவ வேதமான பைபிள் முழுவதையும் அப்படியே மனப்பாடம் செய்துவிட்டார். எந்த இடத்தில் எது கேட்டாலும் சொல்வார்!

—பி. எல். சாந்தி (5939),
இராயவரம்.





பாதி வயது எப்போது?

முருகனுக்கு வயது 24. அதே ஊரில் வசிக்கும் கலாவுக்கு வயது 9. முருகன் கலாவைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி கலாவின் தந்தையிடம் கேட்கிறான். கலாவின் தந்தை, "உங்களுக்கு வயது 24. கலாவுக்கு வயது 9. உங்கள் வயதில் என் மகள் பாதியாவது இருக்க வேண்டாமா? அவள் உங்கள் வயதில் பாதியை அடைந்ததும் கல்யாணம் செய்து தருகிறேன்" என்று கூறினார்.

முருகனின் வயதில் பாதி வயதை கலா எப்போது அடைவாள்? இருவருக்கும் கல்யாணம் எப்போது நடைபெறும்?

விடை: முருகனுக்கு 30 வயதாகும் போது கலாவுக்கு வயது 15 ஆகும். அப்போது 'ஜாம் ஜாம்' என்று கல்யாணம் நடக்கும்.

—ந. மு. ஜாபர் ஜாதிக் (10532),
இராசகிரி.

அதிகமாகப் பேசப்படும் மொழி

உலகிலேயே அதிகமான மக்களால் பேசப்படும் மொழி எது என்று கேட்டால், உங்களில் பலர், 'ஆங்கிலம்' என்று கூறுவீர்கள். ஆனால், 1978 ஆம் ஆண்டின் சர்வதேசக் கணக்கின்படி பார்த்தால்,

மாண்டரீன் (Mandarin) என்ற சீன தேசத்து மொழிதான் 680 மில்லியன் மக்களால் பேசப்படுகிறதாம்!

அடுத்தபடியாக, 374 மில்லியன் மக்களால் பேசப்படும் மொழிதான் ஆங்கிலமாம்!

இயேசு கிறிஸ்து பேசிய அரபு மொழியைப் பேசும் மக்கள் 138 மில்லியன்.

தமிழ் மொழியைப் பேசும் மக்கள் 55 மில்லியன்.

இந்தி பேசுவோர் 224 மில்லியன்.
(1 மில்லியன் = 10 லட்சம்.)

—ஆர். ஆனந்த்குமார் (8604),
கோவை—2.




பஞ்சபூதக் கோயில்கள்

பஞ்சபூதங்களுக்கான கோயில்கள் நம் நாட்டில் எங்கெங்கே இருக்கின்றன, அங்குள்ள சுவாமிகளின் பெயர்கள் என்ன என்ன என்பதை இங்கே காணலாம்:

நிலம் — காஞ்சிபுரம் — ஏகாம்பரநாதர்,
நீர் — திருவானைக்கா — ஜலகண்டேசுவரர்,
நெருப்பு — திருவண்ணாமலை — அண்ணாமலையார்,
காற்று — சீகாளத்தி — காளத்திநாதர்,
வானம் — சிதம்பரம் — நடராஜர்.

— கி. கணேஷ்குமார் (3416), காவேரிப்பட்டிணம்.





உவமை — எது பொருந்தும்?

1 குழந்தைக்குத் தாய் எப்படியோ அப்படியே பூனைக்குட்டிக்கு (அ) பால், (ஆ) எலி, (இ) பாலாடைக் கட்டி, (ஈ) பூனை.

2 மனிதனுக்குச் சிறை என்றால், விலங்கிற்கு (அ) கூண்டு, (ஆ) காடு, (இ) சிங்கம், (ஈ) சர்க்கஸ்.

3 புகைவண்டிக்குப் புகைவண்டி நிலையம் என்றால், கப்பலுக்கு, (அ) கடற்கரை, (ஆ) துறைமுகம், (இ) தீவு, (ஈ) படகு.

4 மரத்திற்குக் கிளை; அதுபோல் மனிதனுக்கு (அ) சட்டை, (ஆ) மகன், (இ) தலைப்பாகை, (ஈ) கை.

விடைகள்: 1 ஈ—பூனை, 2 அ—கூண்டு, 3 ஆ—துறைமுகம், 4 ஈ—கை.


— என். நந்தினி (7741), சிங்காநல்லூர்.

பந்த்

மயில் ஒன்று பறந்து செல்லத் தயாராயிருந்தது. அதைப் பார்த்த மற்றொரு மயில், ''இன்று நாம் எங்கேயும் செல்லக் கூடாது. ஊர் முழுதும் 'பந்த்' நடைபெறுகிறது. ஞாபகமில்லையா?'' என்று கேட்டது.

''ஓ, ஆமாம். பந்த் நடைபெறும் போது அலுவலகங்களுக்கும் பள்ளிகளுக்கும் விடுமுறை; கடைகள் மூடியிருக்கும். வாகனங்களும் போகாது என்பதை மறந்துவிட்டேனே!'' என்று கூறி, முதல் மயில் மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டது.

'பந்த்' என்றால் மயிலுக்கு என்ன? ஏன் அது செல்லவில்லை?



விடை: மயில் முருகனின் 'வாகனம்' அல்லவா? 'பந்த்' நடைபெறும் போது வாகனம் செல்லலாமா?

— கோ. சுரேஷ் (472), புதுக்கோட்டை.


கண்டுபிடியுங்கள்

இக்கட்டத்தில் ஒளிந்திருக்கும் விலங்குகளைக் கண்டுபிடியுங்கள்:

சி	க	பு	பூ
லி	னை	க	பா
யா	ங்	கா	லி
ங்	க	ரு	ப
னை	ம்	ந	ன்
பு	ம்	ர	றி
ரி	டி	எ	ஃ

விடை: சிங்கம், புலி, கரடி, பூனை, கங்காரு, யானை, பாம்பு, நரி, எலி, பன்றி.

—மா. பாலமுருகன் (5382), ஈரோடு—10.



சுத்தி

நண்பன் 1: டேய், இந்த விடுமுறையிலே மெட்ராஸெல்லாம் 'சுத்தி' பார்க்கலாமா?

நண்பன் 2: எதுக்குடா வீணா சுத்தணும்? எங்க வீட்டிலே பெரிய 'சுத்தி' இருக்குடா. வேணுமானால், அதையே பார்த்துக்கலாம்.

—என். சிவகுமார் (2986), கடலூர்—1.



பாட்டி சொன்னான்

பாட்டி: டேய், ஏண்டா இப்படி டீ.வியைக் கட்டிப் புடிச்சிக்கிட்டு இருக்கே?

பேரன்: நீங்கதானே பாட்டி டீ.வி.யை அணைக்கச் சொன்னீங்க?

சி. செந்தில் (4592), சிவகங்கை.



புத்தகம்

* புத்தகத்தைத் திறந்து பார்த்தாலே லாபம் உண்டு —சீனா.
* புத்தகம் சட்டைப் பைக்குள் கொண்டு செல்லும் பூந்தோட்டம் —அரேபியா
* புத்தகத்தைப் படித்து அறிந்தவனுக்கு நான்கு கண்கள் உண்டு. —வேல்ஸ்
* நல்ல புத்தகம் நல்ல நண்பன் —இத்தாலி
* இலக்கியமில்லாத வாழ்க்கை மரணமாகும்! —லத்தீன்

— பி. செந்தில்குமார் (6861), கோவை—10.

டாக்டர் பக்கம்

டாக்டர் ரு.கணேசன், M.B.B.S



குழந்தைகளுக்கு வரக்கூடிய தொற்று நோய்களில் 'அம்மைக் கட்டு' நோய் முக்கியமானது. இதை ஆங்கிலத்தில் **Mumps** என்றும், **Viral Parotitis** என்றும் அழைப்பார்கள். தமிழில் இந்நோய்க்கு பொன்னுக்கு வீங்கி, புட்டாளம்மை, தாளம்மை என்று பல பெயர்கள் உண்டு.

அம்மைக்கட்டு, 'மிக்ஸோ வைரஸ்' என்ற கண்ணுக்குப் புலப்படாத வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. இந்நோயால் பாதிக்கப்படுவது நம் தாடையின் இருபுறமும் உள்ள உமிழ்நீர்ச் சுரப்பிகள்தான் என்றாலும், சில சமயங்களில் கணையம், நரம்பு மண்டலம் போன்றவற்றையும் பாதிக்கக் கூடும்.

காற்று மண்டலத்தில் கூடித் திரியும் இந்த வைரஸ் கிருமிகள் நாம் சுவாசிக்கும்போது உடலுக்குள் புகுந்து, உமிழ்நீர்ச் சுரப்பிகளை அடைந்து அங்கேயே வாசம் செய்ய ஆரம்பிக்கின்றன. அப்போதுதான் 'அம்மைக் கட்டு' நோய் வருகிறது.

இந்நோயின் அறிகுறிகள்தான் என்ன?

முதல் நாள் இலேசாகக் காய்ச்சல் வரும். உடல் சோர்வாக இருக்கும். தொண்டைக் கட்டு தொந்தரவு செய்யும்.

இரண்டாம் நாள் ஏதேனும் ஒரு பக்கக் காதின் கீழ், தாடையின் மேற்புறம் உமிழ்நீர்ச் சுரப்பி உள்ள இடத்தில் வலியும் வீக்கமும் ஆரம்பிக்கும். எச்சில் விழுங்கும்போதும், வாயை அசைக்கும் போதும் வலி அதிகமாகும்.

மூன்றாம் நாள் வீக்கம் அதிகமாகும். அதேசமயம் அடுத்த பக்கத்திலும் காதின் கீழ் வீக்கம், வலி ஆகியவை உண்டாகும். இந்த வீக்கம், வலி, காய்ச்சல், எல்லாமே அடுத்த நான்கு நாட்களுக்கு நீடிக்கும். இந்த சமயத்தில் பாதிக்கப்பட்டவரின் உமிழ்நீரில் வைரஸ் கிருமிகள் வெளிப்படும். பாதிக்கப்பட்ட நோயாளி உமிழ்நீரைக் கண்ட இடங்களில் துப்பும் போது, வைரஸ் கிருமிகள் வெளியேறி மற்றவர்களுக்கும் பரவி விடுகிறது.

'அம்மைக் கட்டு' நோய் சரியாகப் பத்து நாட்களே உடம்பில் இருக்கும். அதற்குப் பிறகு வந்த தடயம் தெரியாமல் மறைந்து விடும்.

இந்நோய் பெரும்பாலும் 4 வயதிலிருந்து 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களையே பாதிக்கிறது என்றாலும், 20 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களையும், சில சமயங்களில் பெரியவர்களையும் கூடப் பாதிக்கக் கூடியது.

'அம்மைக்கட்டுதானே... சரியாகிவிடும்' என்று மருத்துவரை அணுகாமல் அலட்சியமாக இருந்தால் தவறு உங்களுடையதே! முறைப்படி வைத்தியம் செய்து கொண்டால்தான் உடலில் சில பின்விளைவுகள் ஏற்படாமல் தடுத்துக் கொள்ளலாம்.

சரி, அம்மைக்கட்டு வந்து விட்டது. அடுத்து என்ன செய்வது என்றுதானே யோசிக்கிறீர்கள்? கவலையை விடுங்கள்.

— பாதிக்கப்பட்ட நோயாளியை முதலில் தனிமைப்படுத்துங்கள். நோயாளிகளுக்குப் பக்கத்தில் யாரும் படுக்கக் கூடாது. அவர் உபயோகித்த பொருட்களையும், துணிமணிகளையும் பிறர் உபயோகிக்கக் கூடாது.

— காய்ச்சல், வலி, வீக்கம், குறைகிற வரைக்கும் நோயாளிக்குப் பூரண ஓய்வு அவசியம்.

— மென்று, கடித்துத் தின்னும்

ஆகாரங்களை நோயாளிக்குக் கொடுக்காதீர்கள். பழச்சாறு, இளநீர், குளுகோஸ் கரைத்த தண்ணீர், காய்ச்சி ஆற வைத்த தண்ணீர், அரிசிக் கஞ்சி போன்ற நீராகாரங்களையே உணவாகக் கொடுங்கள்.

—டாக்டரிடம் ஆலோசித்து அவர் யோசனைப்படி ஏதேனும் வலி நிவாரணியையும் உபயோகிக்கலாம்.

அம்மைக்கட்டு நோய் ஒருமுறை வந்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் அந்நோய்க்கான எதிர்ப்பு சக்தி நம் உடலில் உண்டாகிவிடுகிறது. எனவே, மீண்டும் அம்மைக்கட்டு நோய் வர வாய்ப்பில்லை.

ஒருமுறை கூட இந்நோயால் பாதிக்கப்படாதவர்கள் முன்னெச்சரிக்கையாக அம்மைக்கட்டுத் தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ளலாம்.

கடைசியில் ஒரு வார்த்தை—

நம்மையும், நம் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொண்டால், அம்மைக்கட்டு நம்மை அண்டாது என்பது உண்மை!

பறப்பது = அவமதிப்பது !



அமெரிக்காவில் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு பாதிரியார் இருந்தார். அவருடைய மேற்பார்வையில் ஒரு கல்லூரி இருந்தது. அந்தக் கல்லூரிக்கு பாதிரியார் ஒரு முறை சென்றிருக்கையில், கல்லூரித்தலைவருக்கும் அவருக்கும் பெரிய விவாதமொன்று ஏற்பட்டது.

''அறிவியலில் எல்லாம் கண்டு பிடித்தாகிவிட்டது. இனிமேல் கண்டுபிடிக்க எதுவுமே இல்லை'' என்றார் பாதிரியார். இக்கூற்றை கல்லூரித் தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ''நீங்கள் சொல்வது தவறு. இன்னும் ஏராளமான சாதனைகள் நிகழப்போகின்றன. வேண்டுமென்றால் பாருங்கள். இன்னும் 50 வருடத்தில் மனிதன் வானத்தில் பறக்கப் போகிறான்'' என்றார்.

உடனே பாதிரியார், ''பறப்பது என்பது பறவைகளுக்கும் தேவதைகளுக்கும் மட்டுமே தரப்பட்டுள்ள சிறப்பு. நீங்கள் சொல்வது பைபிளையும் கிறிஸ்தவ மதத்தையும் அவமதிப்பதாகும்'' என்றார் சற்றுக் கோபமாக.

இந்த விவாதம் நடந்த காலத்தில் அந்தப் பாதிரியாரின் இரண்டு மகன்கள் ஊரில் படித்து வந்தார்கள். ஒருவன் பெயர் ஆர்வில் ரைட், மற்றவன் பெயர் வில்பர் ரைட்.

ஆம், விமானத்தைக் கண்டுபிடித்த அதே ரைட் சகோதரர்கள் அந்தப் பாதிரியாரின் மகன்கள்தான் என்பதை அறியும்போது வியப்பாக இல்லையா?


— ஆர். எஸ். சுப்பிரமணியன்

புதிர்க்கதை-4 தலைப்பு

புதிர்க்கதை 4 க்குப் பொருத்தமான தலைப்பை எழுதி அனுப்பச் சொல்லிக் கேட்டிருந்தோம். வந்த தலைப்புகள் 173. அவற்றில்,

'இரண்டு கல்லில் மூன்று மாங்காய்' என்ற தலைப்பு ரூ. 10/– பரிசு பெறுகிறது. அதை எழுதி அனுப்பியவர்:

த. சிந்துகுமார் (4764),
'தாணுபவனம்,'
காங்கரை, திருவட்டாறு அஞ்சல்,
குமரி மாவட்டம் — 629 177.



தீக்குச்சி விற்கும் சிறுமி

மூலம்: ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்

எச். கிருஷ்ணமூர்த்தி

பயங்கரமான குளிர். பனிமழை பெய்து கொண்டிருந்தது. மாலை மறையும் வேளை. வேகமாக இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. அதுதான் அந்த ஆண்டின் கடைசி மாலை நேரம்; புத்தாண்டுகளுக்கு முந்திய புனிதமான மாலைப் பொழுது.

அந்தக் குளிரையும், இருளையும் லட்சியம் செய்யாமல் ஓர் ஏழைச் சிறுமி சாலை வழியே நடந்து கொண்டிருந்தாள். வெற்றுத் தலையுடனும் வெறுங்காலுடனும் அவள் காணப்பட்டாள். அன்று வீட்டிலிருந்து புறப்படும் போது அவள் செருப்பு அணிந்திருந்தாள். ஆனால், அது அவளுடையதல்ல; இறந்து போன அவளுடைய அம்மாவுடையது. அந்தப் பெரிய செருப்பைப் போட்டுக் கொண்டுதான் அவள் வெளியே போவது வழக்கம். சாலைச் சந்திப்பில் வேகமாக வந்த வண்டிகள் அந்தச் சிறுமியின் மீது மோதி அவளைக் கீழே தள்ளிவிட்டன. அப்போது அவளுடைய செருப்பில் ஒன்று காணாமல் போயிற்று. இன்னொன்றை ஒரு போக்கிரிச் சிறுவன் பொறுக்கி எடுத்தான்; "ஒரு தொட்டிலைப் போல இது அவ்வளவு பெரிதாக இருக்கிறதே! எங்கள் வீட்டுக் குழந்தையை இதில் போட்டு ஆட்டப் போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அவன் அந்தக் காலணியோடு ஓடிவிட்டான்.

வேறு வழியில்லாமல் அவள் வெறுங் காலுடன் நடந்தாள். கந்தைத் துணியால் கட்டப்பட்ட தீக்குச்சி மூட்டையை ஒரு கையிலும், தீக்குச்சிக் கட்டு ஒன்றை மற்றொரு கையிலும் வைத்திருந்தாள். அன்றைக்கு யாரும் அவளிடமிருந்து ஒன்றும் வாங்கவும் இல்லை; அவளுக்கு ஒரு காசு கூடக் கொடுக்கவும் இல்லை. பாவம், அந்தச் சிறுமி. குளிரும், பசியும் அவளை மிகவும் வாட்டின. அந்தத் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு அவள் தொடர்ந்து நடந்தாள்.

அவளுடைய அழகான, சுருண்ட கூந்தலின் மேல் பனித்துளிகள் சொட்டு சொட்டாக விழுந்து பிரகாசித்தன. ஆனால், தன்னுடைய அழகை ரசிப்பதற்கு வேண்டிய உள்ளம் அப்போது அவளுக்கு இருக்கவில்லை. வீதியின் இரு பக்கங்களிலும் இருந்த வீடுகளிலிருந்து பிரகாசமான ஒளி வந்து கொண்டிருந்தது. பண்டிகைக்காக வாத்துக் கறி சமைக்கும் இனிய மணம் சாலை எங்கும் நிறைந்திருந்தது. அது புத்தாண்டுப் பண்டிகைக்கு முந்திய நாள். அதைப் பற்றித்தான் அவளுடைய மனமும் எண்ணிக் கொண்டிருந்தது.

தெருக் கோடியில் இரண்டு வீடுகள். ஒன்று மற்றதைவிடத் துருத்திக் கொண்டு முன்னால் நின்றது. அந்த வீட்டுச் சுவருக்கு அருகில் இருந்த இருட்டு நடைபாதையில் அவள் உட்கார்ந்தாள். கை, கால்களைச் சுருட்டிக் கொண்டாள். குளிரினால் உடம்பு விறைத்து விடுவது போல் ஆகிவிட்டது.

"இன்றைக்குப் பார்த்து என் துரதிர்ஷ்டம்! யாரும் வாங்கவில்லை. காசில்லாமல் வெறுங்கையோடு வீட்டுக்குப் போனால், ஐயோ! பயங்கரம்! அப்பா கோபப்பட்டு என்னை அடித்து நொறுக்கி விடுவார்!" என்று அவளுடைய உள்மனம் சொல்லியது. ஆகவே, வீட்டுக்குப் போக அவளுக்

டென்மார்க் தேசக் கதை

குத் தைரியம் வரவில்லை. "வீடு மட்டும் என்ன? பெரிய மாளிகையா? ஓட்டைக் கூரை. இடிந்த சுவர்கள். ஓட்டை வழியாகக் குளிர்காற்று ஊளையிட்டுக் கொண்டே உள்ளே வரும். வீடும், நடைபாதையும் எல்லாம் ஒன்றுதான்," என்று அவளுடைய சிந்தனை வளர்ந்தது.

குளிரினால் அவளுடைய பிஞ்சுக் கைகள் விறைத்து விட்டன. "இப்போது ஒரு சின்னத் தீக்குச்சியைப் பற்றவைத்தால், அந்தச் சூடு எவ்வளவு இதமாக இருக்கும்! ஆனால் வியாபாரமே ஆகவில்லையே! தீக்குச்சியைக் கொளுத்தலாமா?" என்று யோசித்துக் கொண்டே அவள் ஒரு குச்சியை இழுத்தாள்; தேய்த்தாள். 'புஸ்' என்ற சப்தத்தோடு அந்தக் குச்சி பற்றி எரிந்தது. எரியும் அந்தக் குச்சியை அவள் கையில் பிடித்துக் கொண்டாள். மெழுகுவர்த்தி போல அது பிரகாசமாக எரிந்தது. அம்ம்ம்ம்மா...! என்ன இதமான சூடு...! என்ன அதிசயமான வெளிச்சம்...!

ஆனால், அந்தச் சிறுமியின் மனத்தில் அது ஒரு சின்னத் தீக்குச்சியாகத் தோன்றவில்லை; அழகிய வேலைப்பாடமைந்து பளபளக்கும் ஒரு பெரிய பித்தளை நெருப்புச்சட்டியின் முன்பு அவள் உட்கார்ந்திருப்பது போலவும், அதில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் அவள் ஆனந்தமாகக் குளிர் காய்வது போலவும் அவளுக்குத் தோன்றியது. சூடுபண்ணிக்கொள்வதற்காக அவள் தன்னுடைய கால்களை நீட்டினாள். ஓ! அதற்குள் தீ சட்டென்று அணைந்தது! பளபளக்கும் நெருப்புச் சட்டி மறைந்தது! பழைய சுவரும், நடைபாதையும் எதிரே தெரிந்தன. எரிந்து போன தீக்குச்சி மட்டும் கையில் காட்சி அளித்தது.

அவள் இன்னொரு குச்சியைப் பற்ற வைத்தாள். முதலில் மங்கலாகவும், பிறகு பிரகாசமாகவும் அது எரிந்தது. அந்த வெளிச்சம் அருகிலிருந்த சுவர் மீது பட்டதும், ஓர் அதிசயம் நிகழ்ந்தது. கனமான அந்தக் கருங்கல் சுவர் ஒரு மெல்லிய திரையாக மாறியது! அந்தத் திரைக்குப் பின்னால் ஓர் அழகான சாப்பாட்டு அறையைக் கண்டாள். பெரிய மேசை, அதன் மீது விரிக்கப்பட்ட சுத்தமான வெள்ளைத் துணி, பீங்கான் பாண்டங்கள், கரண்டிகள், மணக்க மணக்கச் சமைக்கப்பட்டிருந்த வாத்துக் கறி முதலானவற்றை அவள் தெளிவாகப் பார்த்தாள்.

அப்போது ஓர் ஆச்சரியம் நடந்தது. நன்றாகச் சமையல் செய்யப்பட்டு மேசைமேல் வைக்கப்பட்டிருந்த வாத்து திடீரென உயிர் பெற்றது! கீழே குதித்தது! முள் கரண்டியையும், கத்தியையும் முதுகில் சுமந்து கொண்டு, அந்தச் சிறுமியை நோக்கி அது ஒலியாக நடந்து வந்தது! வாத்து அவளை நெருங்கியதும் தீக்குச்சி அணைந்தது! வாத்தும், கத்தியும், கரண்டியும் மாயமாக மறைந்தன! அந்தக் கரடுமுரடான சுவர் மட்டும் வெறிச்சென்று எதிரே நின்றது!

அவள் மேலும் ஒரு தீக்குச்சியை ஏற்றினாள். குச்சி எரிந்தது. அப்போது ஒரு கவர்ச்சியான கிறிஸ்துமஸ் மரத்தின் அடியில், தான் உட்கார்ந்திருப்பதை அவள் உணர்ந்தாள். சமீபத்தில் ஒரு பிரபலமான கடையில் அவள் பார்த்த அந்தக் கிறிஸ்துமஸ் மரத்தைவிட இது பெரிதாகவும், அழகாகவும் இருந்தது! அதனுடைய பசுமையான கிளைகளில் ஆயிரக்கணக்கான மெழுகுத்திரிகள் சுடர்விட்டன. மேலும், அந்தக் கிளைகளிலிருந்து விதவிதமான வண்ணச் சித்திரங்களும், பல விநோதமான பரிசுப் பொருள்களும் அவளை நோக்கி அசைந்தன. அவற்றைத் தாவிப் பிடிப்பதற்காக அவள் இரண்டு கைகளையும் நீட்டினாள்.

அந்தச் சமயத்தில் தீக்குச்சி அணைந்தது. கிறிஸ்துமஸ் தீபங்கள் மேலே மேலே எழும்பிச் சென்றன. வானை அடைந்ததும், அவை மின்னும் நட்சத்திரங்களாக மாறின. அவற்றிலிருந்து ஒரு நட்சத்திரம் 'கிர்ரென்று' கீழே விழுந்தது. வானவீதியின் குறுக்கே ஒரு நெருப்புக் கோட்டை வரைந்து கொண்டே அது கீழே விழுந்தது.

"இப்போது யாரோ செத்துக் கொண்டிருக்கிறார்கள்," என்று அந்தச் சிறுமி தனக்குள்ளேயே சொல்

லிக் கொண்டாள். திடீரென அவளுக்குத் தன் பாட்டியின் ஞாபகம் வந்தது. நினைவு தெரிந்த நாளிலிருந்து பாட்டி மட்டும்தான் அவளிடம் அன்பைப் பொழிந்திருக்கிறாள். ஆனால், அந்தப் பாட்டியும் இறந்து போய் இப்போது வெகு நாட்கள் ஆகிவிட்டன. ''ஒரு நட்சத்திரம் கீழே விழும்போது, ஓர் ஆன்மா மேல் நோக்கிக் கடவுளிடம்போகிறது,'' என்றுபாட்டி என்றைக்கோ அவளிடம் சொன்னது அப்போது அவளுக்கு நினைவு வந்தது.

இன்னொரு தீக்குச்சியை உரைத்தாள். இருள் விலகியது. ஒளி நிறைந்தது. அந்த ஒளியில் அன்பே உருவான தன்னுடைய பாட்டியின் வடிவத்தைக் கண்டாள். பளபளக்கும் கண்களுடன் பாட்டி பிரகாசமாகத் தோன்றினாள்.

''பாட்டி, பாட்டி, அவசரமாகப்



போய் விடாதே! கொஞ்சம் பொறு. பாட்டி! இந்தத் தீக்குச்சி அணைந்தால், நீ போய் விடுவாய் என்று எனக்குத் தெரியும். இதமான அடுப்பு, அழகான வாத்து, அற்புதமான கிறிஸ்துமஸ் மரம் — இவைகள் மறைந்தது போல நீயும் மறைந்துவிடப் போகிறாய். நீ போகாதே, பாட்டி! என்னையும் உன்னோடு அழைத்துக் கொண்டு போயேன்...!" என்று சொல்லிக் கொண்டே அவள் கையிலிருந்த தீக்குச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக அவசர அவசரமாக ஏற்றினாள். அன்புப் பாட்டியின் ஒளிமயமான உருவத்தைத் தனக்குத் துணையாகப் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். குச்சிகள் தொடர்ந்து எரிந்தன. பகலை விட அதிகமான ஒளியைக் கொடுத்தன!

முதலில் சின்னதாகத் தெரிந்த பாட்டியின் உருவம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாக வளர்ந்தது. பாட்டி முன்னைவிட அழகாகவும், கம்பீரமாகவும் காணப்பட்டாள். பாட்டி தன் அன்புக் கரங்களால் அந்தச் சிறுமியைத் தூக்கித் தன்னோடு அணைத்துக் கொண்டாள். இருவரும் அந்தப் பிரகாசமான வானவீதி வழியே பறந்து சென்றனர். ஒரு பேரின்ப உலகத்தை அடைந்தனர். அங்கே குளிர் இல்லை! பசி இல்லை! பயம் இல்லை! துன்பங்கள் எதுவுமே இல்லை! அவர்கள் கடவுளோடு இரண்டறக் கலந்து விட்டனர்!


மறுநாள் காலை, மதில் சுவருக்கு வெளியே நடைபாதையில் ஒரு சிலையைப் போல அந்தச் சிறுமி அப்படியே உட்கார்ந்திருந்தாள். சிவந்த கன்னங்கள், உதட்டில் குமிண் சிரிப்பு—யாவும் அப்படியே இருந்தன. பழைய ஆண்டின் கடைசி இரவில் கடுங்குளிரைப் பொறுக்க முடியாமல் அவள் உயிர் நீத்து உறைந்து போயிருந்தாள். ஒரு கை சில தீக்குச்சிகளை இறுகப் பிடித்திருந்தது. புத்தாண்டின் பொன்மயமான காலை ஒளி அவளுடைய உயிரற்ற சடலத்தின் மீது இலேசாகப் படரத் தொடங்கியது. அவளைச் சுற்றி நாலாபுறமும் எரிந்து போன தீக்குச்சிகள் சிதறிக் கிடந்தன.

"ஐயோ, பாவம்! தீக்குச்சியை எரித்துக் குளிர் காய முயன்றிருக்கிறாள்!" என்று மக்கள் கூறினர். ஆனால், அந்தச் சிறுமி என்னென்ன அழகான காட்சிகளை எல்லாம் கண்டாள் என்றோ, புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக அவள் தனது அன்புப் பாட்டியின் அரவணைப்பில் அழகான வான வீதியின் வழியாக ஓர் ஒளிமயமான உலகத்திற்குப் பறந்து சென்றாள் என்றோ அவர்களுக்குத் தெரியாது!

நம் நாட்டில் ஆடுமாடுகளை வளர்ப்பதுபோல், ரஷ்யாவின் வட கோடியில் வசிப்பவர்கள் 'ரெய்ன் டீர்' என்ற மான்களை மந்தை மந்தையாக வளர்க்கிறார்கள். அதுவே அவர்கள் சொத்தாகும். ஹெலிகாப்டரில் சென்று மேய்த்துப் பாதுகாக்கிறார்கள்.

—எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14





கூண்டு மாறியது!

ராமு: நான் சர்க்கஸ் பார்க்கப் போனபோது கூண்டில் இருந்த சிங்கம் வெளியே வந்து பயமுறுத்திடுச்சு.

கோபு: நீ என்ன செய்தாய்?

ராமு: நான் சிங்கக் கூண்டுக்குள்ளே புகுந்து கதவை நல்லா அடைச்சிக்கிட்டேன்.

— ச. ஜானகிராமன் (8953), திருச்சி.

பிருந்தாவனக் கவியரங்கம்



சிட்டுக்குருவி

சிட்டுக் குருவி சிறகை விரித்து
வானில் பறந்தது.
எட்டிப் பிடிக்க நினைப்பதற்குள்
எங்கோ சென்றது!

குட்டி அலகால் அரிசி யெல்லாம்
கொத்தித் தின்றது!
சட்டி நீரைப் பருகித் தாகம்
தணித்துக் கொண்டது!

குப்பை கூளம் கொண்டு கூடு
கட்டி முடித்தது!
குருவி அதனைக் கண்ட எனக்குச்
சோம்பல் பறந்தது!

—எஸ். ரம்யா (1907), திருச்சி—20.

எலிகளின் கூத்து

திருட்டு எலியும் வந்தது:
திரும்பித் திரும்பிப் பார்த்தது.

குண்டு எலியும் வந்தது;
குல்லா, சட்டையைக் கடித்தது.

நொண்டி எலியும் வந்தது:
நொடித்து நொடித்து நடந்தது.

குட்டி எலியும் வந்தது;
கூ,கூ என்று ஒலித்தது.


வெள்ளை எலியும் வந்தது:
வெல்லக் கட்டியைக் கடித்தது.

மியாவ் பூனை வந்தது:
வேக மாக எலியெலாம்.

தாவிப் பாய்ந்து சென்றன;
தப்பிப் பிழைத்துக் கொண்டன.

—ஆர். கணேசன் (11,112), காரைக்கால்.





நானும் ஒரு நாள்...

வானம் வானம் அழகிய வானம்.
வான வில்லை வளைத்திடும் வானம்.
வண்ணப் பறவை பறந்திடும் வானம்.
எண்ணிலாத் தாரகை பூத்திடும் வானம்.
வட்ட நிலாவும் தவழ்ந்திடும் வானம்.
எட்ட எட்டச் சென்றிடும் வானம்.
மழையைச் சோவெனப் பொழியும் வானம்
மண்ணில் பசுமை சேர்க்கும் வானம்.
நானும் ஒருநாள் வாலண்டினா போல்
நன்றாய்ச் செல்வேன் பறந்து மேலே!

—ப. பூங்குழலி (9837), பட்டுக்கோட்டை.



எழில் பொங்கும் குற்றாலம்

சந்தன மரங்களின் வாசனையாம்!
சண்பக மலர்களின் பூசனையாம்!
நந்த வனக்குயில் பாடிடுமாம்!
நலம்தரும் அருவிகள் ஓடிடுமாம்!

வாழை மரங்கள் தொட்டிடுமாம்!
வனப்பை வளங்கள் கொட்டிடுமாம்!
தேனைப் பழங்கள் சொட்டிடுமாம்!
தென்றல் எங்கும் வீசிடுமாம்!

வண்டுகள் பாக்கள் பாடிடுமாம்!
வளைந்து பூக்கள் ஆடிடுமாம்!
கண்டவர் மனத்தை அள்ளிடுமாம்!
கண்டால் நம்மனம் துள்ளிடுமாம்!

பார்த்த இடமெலாம் பசுமைதான்!
பாரதம் போற்றும் புதுமைதான்!
பார்த்துப் பரவசம் அடைந்திடவே
பலஎழில் கொண்டது குற்றாலம்!

—டி. தட்சிணாமூர்த்தி (8896),
திருச்செங்கோடு.

இறைவன் அளித்தவை

அம்மா! அம்மா! அங்கே பார்
அழகிய வெள்ளித் தட்டைப் பார்
அந்தத் தட்டைக் கொண்டு வந்து
எனக்குச் சாதம் ஊட்டி விடு!

அக்கா! அக்கா! அங்கே பார்
அழகிய நீலத் துணியினையே.
அதனை எடுத்து வெட்டித்தான்
அழகிய சட்டை தைத்திடுவாய்.

அப்பா! அப்பா! பார்த்திடுங்கள்
அழகிய வைரக் கற்களையே.
அவற்றை நீங்கள் கொண்டு வந்து
அழகிய நகைகள் செய்தளிப்பீர்!

இந்த வருடப் பிறப்பில் நாம்
இனிதாய்க் கூடி மகிழ்ந்திடுவோம்
ஏழை மக்கள் நமக்கெல்லாம்
இறைவன் அளித்த மகிழ்விதுவே.

—எ. ராமு (1080), ஸ்ரீரங்கம்.



எங்கள் வீட்டுப் பாப்பா

எங்கள் வீட்டுப் பாப்பா
இனிப்பை விரும்பித் தின்பாள்.
எங்கள் மாமா வந்தால்,
எழுந்து நின்று சிரிப்பாள்.



வேலை முடிந்து சும்மா
வீடு வந்தால் போதும்!
கால்கள் இரண்டும் ஓடிக்
கட்டிக் கொள்ளும் பாப்பா.

பள்ளி சென்ற அண்ணன்
பறந்து வந்தால் போதும்!
துள்ளித் துள்ளிக் குதிப்பாள்;
தூக்கிக் கொள்ளச் சொல்வான்

தாத்தா, பாட்டி வந்தால்
தாவிச் சென்று தோளில்
தொத்திக் கொண்டு நிற்பாள்
தூய மலராய்ச் சிரிப்பாள்.

— பா. மணிவண்ணன் (11420)
வேடசந்தூர்.



என் பொழுதுபோக்கு

ஏ.எல்.ராமு (3674)

தேங்காய்ச் சக்கையில் வண்ணப் படம்

எனக்கு சித்திரம் வரைவது ஒரு பொழுதுபோக்கு. சித்திரம் வரைந்து, அதற்குத் தகுந்தபடி வர்ணம் கொடுப்பேன். அது நன்றாகத்தான் இருக்கும். ஆனாலும் அதைவிட கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

<u>தேவையானவை:</u>

சித்திரம் வரைய ஒரு வெள்ளை அட்டை. தேங்காய்ச் சக்கை (தேங்காயை ஆட்டி, பால் எடுக்கப்பட்ட சக்கை—இதை நம் வீட்டில் எப்போது தேங்காய்ப் பால் எடுக்கிறார்களோ, அப்போதெல்லாம் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.) ஒட்டுவதற்குப் பசை, சமையலுக்குப் பயன்படுத்தும் வர்ணப் பொடி (Food colour powder) தேவையான வர்ணம் ஒவ்வொன்றிலும் 5 கிராம் வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

<u>செய்முறை:</u>

வெள்ளை அட்டையில் கரடி, நாய், கிளி, மைனா போன்றவற்றில் ஏதேனும் ஓர் உருவத்தை வரைந்து கொள்ளுங்கள். படம் வரைவது சிரமமாயிருந்தால், ஏற்கெனவே அச்சாகியுள்ள கறுப்பு—வெள்ளைப் படத்தை வெட்டி வெள்ளை அட்டையில் ஒட்டிக் கொள்ளலாம். எந்த எந்த அளவில் எந்த எந்த வர்ணப்பொடி தேவையோ அதை ஏற்கெனவே பிழிந்து வைத்திருக்கும் தேங்காய்ச் சக்கையோடு கலந்து, ஒரு தாளில் பரப்பிக் காய வையுங்கள்.

கரடிப் படமாக இருந்து அது சிவப்பும் பழுப்புமாகக் காட்சி அளிக்க வேண்டுமானால் முதலில் பழுப்பு வர்ணம் வரவேண்டிய கரடியின் உடலில் பசையைத் தடவி, அதன்மேல் பழுப்பு வர்ணத் தேங்காய்ச் சக்கையைத் தூவுங்கள். பிறகு, அந்த அட்டையைத் தலைகீழாகத் திருப்பி, பின்புறத்தில் மெதுவாகத் தட்டுங்கள். இப்போது, பசை தடவிய இடத்திலெல்லாம் பழுப்பு வர்ணத் தேங்காய்ச் சக்கை ஒட்டிக் கொள்ளும். இதேபோல், சிவப்புவர்ணத்தேங்காய்ச்சக்கையையும் அது வரவேண்டிய இடத்தில் ஒட்டிக்கொள்ளச் செய்யுங்கள். பிறகு பாருங்கள். வண்ணக் கரடி கண்ணைக் கவரும்!

அப்புறம்.....?

தேவையான அளவுள்ள அட்டைப் பெட்டியின் மூடியை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் உட்பகுதியில் கரடிப் படத்தை ஒட்டுங்கள். பிறகு, அதன் மேலே கண்ணாடித் தாளைப் போட்டுப் பசை தடவி நன்றாக மூடிவிடுங்கள். படம் தூசு படியாமல் இருக்கும். வீட்டிலே இது போன்ற படங்களை மாட்டி வைத்தால், அழகாயிருக்கும். படத்தின் கீழே பொருத்தமான வார்த்தைகளை எழுதி உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ வழங்கலாம்.



பேரளம் புகழ்மதி



கை கொடுத்த கை!

அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் முகத்தில் எள்ளும்,கொள்ளும்வெடித்தன. உதவி ஆசிரியராகிய என்னைக் கூப்பிட்டார்.நான்பயத்தோடுஉள்ளே போனேன்.

''என்னய்யா இது.... பத்திரிகை இன்னும் மூணு நாளிலே அச்சுக்குப் போகணும்..... இங்க என்னடான்னு மூணு பக்கத்துக்கு விஷயம் இல்லே. நாளைக் காலைக்குள்ளே எனக்கு நல்லதா ஏதாவது எழுதித் தரணும்.... சுத்த 'கையாலாகாதவ'ராக இருக்கிறீரே....! கைநீட்டிச் சம்பளம் வாங்கல்லே?'' என்று சரமாரியாகப் பொழிந்தார். பாவம், அவர் கஷ்டம் எனக்குப் புரிகிறது!

'கையாலாகாதவர்', கை நீட்டிச் சம்பளம்' — ஆசிரியர் திட்டிய வார்த்தைகள் கணீரென்று மூளையில் ஒலித்துக் கொண்டிருந்தன. இந்த மூளையில் சிந்தனை ஓடவில்லைஎன்பதற்காக,பாவம், கை திட்டு வாங்குகிறது!

சிந்தனை செய்தபடி ஸ்டேஷனை அடைந்தேன். அங்கே ஒரே கூட்டம். கவுண்டரில் டிக்கெட் வாங்குமிடத்தில் நெரிசல்! ''ஐயோ, என் கை.... என் கையை விடுங்கய்யா'' கவுண்டரிலிருந்து கையை எடுக்க முடியாமல் கத்தினார் ஒருவர். கைதான் எத்தனை பெரிய தியாகி!

சற்று வெளியே பார்த்தேன். ஒருவர் காரிலிருந்து இறங்கினார். ''அடடே கார் கை மாறிடுச்சா'' யாரோ ஒருவர் விசாரித்தார்.

ஸ்டேஷனுக்குள் சென்றேன். பிளாட்பாரத்தில் ஏகக் கூட்டம். எலக்டிரிக் ட்ரெயினை எதிர்பார்த்து ஏராளமான கூட்டம். அங்கு இருவர் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். ''கை விடாமே வாழ்க்கை நடத்தணும். அதுதானய்யா குடும்பம்'' அறிவுரை கூறினார் அவர்களில் ஒருவர்!

சற்றுத் தூரத்தில் ஒரு வியாபாரி தன் கூட இருந்தவரிடம் அங்கலாய்த்தார். ''கை மேலே பலன் கிடைச்சுட்டுது'' என்றார். இன்னும் சற்று நடந்தேன். அங்கே காரசாரமாகத் திட்டிக் கொண்டிருந்தார் ஒருவர். ''பையன் இனிமேல் சரிப்பட மாட்டான்; கை கழுவ வேண்டியதுதான்'' என்றார்!

அங்கே ஒருவர் லாட்டரிச் சீட்டுகளைக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தார். ''ஊம், கடைசி நம்பரிலே 'கை' நழுவிப் போச்சு'' என்று அலுத்துக் கொண்டார்.

அதோ ஒரு வைரக் கடுக்கன் போட்ட ஆசாமி, ''கையும் கையும் வச்ச மாதிரி பேரம் முடிஞ்சிடுத்து'' பக்கத்திலிருந்தவரிடம் அவர் கிசுகிசுத்தார்.

ட்ரெயின் வந்தது; எல்லாரும் முண்டியடித்து ஏறினோம். ''கையைக் கெட்டியாய் பிடிச்சுக்கோ; விழுந்துடப்போறே'' உள்ளிருந்துஓரத்திலிருப்



பவருக்கு உபதேசம் செய்தார் ஒருவர்!

என்னுடைய இறங்குமிடம் வந்தது; இறங்கி வெளியே வந்தேன். ''எல்லாம் நம்ப கையிலேதான் இருக்கு'' யாரோ தத்துவஞானிபேசிய படி சென்றார். அங்கே அந்தத் திருப்பத்தில் ஒரு அப்பாக்காரர், ''கையை நீட்டிப் பேசிட்டான் என் பிள்ளை'' என வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்.

வழியிலே ஒருவர், ''அவனைக் கையோடு அழைத்து வா; நான் கவனிச்சுக்கிறேன்'' என்றார். ''போன கையோடு திரும்பி வரணும்'' என்று நிபந்தனையும் விதித்தார்.

ஓரத்தில் இருந்த கடைகளை வெள்ளோட்டம் விட்டேன். ''கையிலே காசு; வாயிலே தோசை. காசைக் கொடுத்துட்டுப் பொருளை எடு'' என சத்தம் போட்டுக் கொண்டிருந்தார் ஒரு கடைக்காரர்!

மூலைக்கு மூலை சினிமா விளம்பரங்கள் சிரித்தன. 'கை கொடுக்கும் கை', 'அன்னமிட்ட கை' என்று எவ்வளவோ படங்கள். ''கை.... கை.... கை'' என எங்கோ பாட்டு ஒலித்தது. ''உருவாக்கும் கைகளே'' மற்றுமொரு பாட்டு. ''கையும் கையும் கலப்பதெப்போ?'' மற்றொரு பாடல் ஜமாய்த்தது!

''என் கையிலே இந்த 'ராங்'கெல்லாம் வேண்டாம்''—ஒரு ரிக்ஷாக்காரர் திட்டிக் கொண்டே போனார். கோர்ட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த ஒருவர், ''அவன் தலையெழுத்தே என் கையெழுத்துலேதான் இருக்கு'' என்று கூறிக் கொண்டே வந்தார்.

எதிர்சாரிக்குப் போனேன். ஒருவர் ஆஸ்பத்திரியிலிருந்து சோகத்தோடு வந்து கொண்டிருந்தார். ''ஹூம்... அவன் கையைவிரிச்சிட்டான்'' என்று சோகப் பெருமூச்சுவிட்டார்.

''என்ன இப்படி 'கை'யைக் கட்டிக்கிட்டு இருந்தா, சோத்துக்கு என்ன பண்றது?'' குடிசைப் பக்கமிருந்து ஒரு குரல் கேட்டது. ''அதை அவன் 'கை'யில கேள்'' என்று பதிலளித்தது மற்றொரு குரல். ''கையில நாலு காசு இருந்தால்தான் நாலு பேர் மதிப்பான்'' ஒரு வயதானவர் சொல்லிக் கொண்டு போனார்.

அடுத்த தெரு திரும்பினேன். ''கையைப் பிடிச்சு, காலைப் பிடிச்சு வேலையில சேர்க்கணும்'' இருவர் பேசியபடி சென்றனர். ''உங்க கையிலேதான் உங்க எதிர்காலம் இருக்கு.... கையைக் காட்டுங்க'' கைரேகைக்காரர் தெருவில் செல்பவர்களை வலிய வலியக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்.

தெருமுனையில் ஒரு பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தது. ''நல்லாருக்கே உன் நியாயம்; 'அடுத்த வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே' என்றாளாம்'' என்றார் ஒருவர்!

வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. அடடா.... இந்தக் 'கை' இலக்கியத்திலகூட என்ன போடு போடுகிறது! ''கையறு நிலை'' என்று தனியாகவே ஒரு பகுதி கூட இருக்கிறதே! ''உடுக்கை இழந்தவன் கை போல....'', ''கையது கொண்டு மெய்யது பொத்தி''—இப்படி எத்தனையோ பாடல்கள். எங்கேயோ தூரத்தே ஸ்டேஷன் 'கை







காட்டி' தெரிந்தது!

வீட்டினுள் சென்றேன். உணவு உண்ட பின் மொட்டை மாடியில் உட்கார்ந்தேன். கீழே என் பெண், "ஏன் அப்பா கப்பல் கவிழ்ந்தமாதிரி கன்னத்தில 'கை' வச்சிருக்காங்க" என்றாள். அதற்குள் என் மகன், "மத்தவங்க தலையிலதான் 'கை' வைக்கக்கூடாது; தன் கன்னத்தில வெச்சுக்கலாம்" என்று 'ஜோக்' அடித்தான்.

மனைவி மாடிக்கு வந்தாள். "ஏன் கையைத் தலையிலே வச்சுகிட்டுப் படுத்திருக்கிறீங்க; கை வழியா மூளைக்குச் சரக்கு அனுப்பறீங்களா?" என்றாள். "அட நீ ஒண்ணு" என்றபடி ஆசிரியர் கூறியதைக் கூறினேன். "அட, இவ்வளவுதானா.... அதோ பாருங்க" என்று காட்டினாள். சற்றுத் தூரத்தே தெரிந்த சுவரில், "கை உங்கள் பிரச்னையைத் தீர்க்கும்" என்று தேர்தல் சுவரொட்டி தெரிவித்தது. "அது தீர்க்குதோ இல்லையோ, உங்கள் பிரச்னை நிச்சயம் தீரும்; தன் கையே தனக்கு உதவி!" என்று சொன்னாள் என் மனைவி.

திடீரென்று ஒரு ஒளி மின்னல்! ஏன் இந்தக் 'கை'யைப் பற்றி எழுதக் கூடாது? நாள் பூராவும் மக்கள் மத்தியில் இந்தக் 'கை' படும் பாடு இருக்கிறதே.... அடடா, ஒரு பெரிய தொடர் கதையே எழுதலாமே! விளக்கைப் போட்டு எழுத ஆரம்பித்தேன்.

காலையில் ஆசிரியர் வருமுன் என் கட்டுரையை அவர் மேஜைமேல் வைத்தேன். ஆசிரியர் வந்து பத்து நிமிடமாயிற்று. "அடடே! அற்புதம்! அற்புதம்!" வாயெல்லாம் பல்லாக ஆசிரியர் வந்தார். "எங்கே.... 'கை' கொடுங்க! இவ்வளவு திறமையைக் 'கை'யிலே வைத்துக் கொண்டு ஏன் கவலைப்பட்டீர்கள்?" வானளாவப் புகழ்ந்தார். திட்டினாலும் புகழ்ந்தாலும் உச்சநிலைதான் அவருக்கு!

நேற்று மூளை வேலை செய்யாததற்கும், இந்தக் 'கை'தான் திட்டு வாங்கியது; இன்று மூளையை வருத்திப் பிரமாதமாக எழுதியதற்கும் இந்தக் 'கை'தான் பாராட்டுப் பெறுகிறது! என்ன விநோதம் பாருங்கள்!






பொங்கி எழும் சிங்கங்கள்

11

பாதுஷாவின் புரட்சி

-கங்கா ராமமூர்த்தி-



டில்லியில் அரசாண்ட முஸ்லீம் மன்னர்களின் வரிசையிலே கடைசியாக வந்தவர் சக்ரவர்த்தி பகதூர் ஷா. 1857—ஆம் ஆண்டு மே மாதம் 31—ஆம் தேதி வெள்ளையரை எதிர்த்துப் புரட்சி செய்ய வேண்டுமென்று நாடெங்கிலும் இருந்த விடுதலை வீரர்கள் இரகசியமாகத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

பாதுஷா பகதூர் ஷாவின் மூச்சும் பேச்சும் நாட்டின் விடுதலைப் போராட்டம் பற்றியதாகவே இருந்தது.

''இந்திய மண்ணிலிருந்து பரங்கியரை விரட்டியடிப்பது ஒவ்வொரு இந்தியப் பிரஜையின் புனிதமான கடமையாகும்'' என்று பாதுஷா புரட்சிக்காரர்களிடையே பேசும் போது கூறினார்.

விடுதலை வீரர்கள் நாட்டின் நாலு திசைகளுக்கும் சென்று போருக்கு வேண்டிய பொருளைச் சேர்க்கலாயினர். டில்லியில் பிரெஞ்சுக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆயுதக் கிடங்கு ஒன்று இருந்தது. அதிலே ஏராளமான துப்பாக்கிகள், பீரங்கிகள், முதலியன உற்பத்தி ஆயின.

ஏராளமான பொருள்களும், ஆயுதங்களும் கிடைக்கப் பெற்ற புரட்சி வீரர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான புனிதப் போரைத் துவக்கினர். அதற்கு முன்னால், செங்கோட்டையின் மீது, பச்சையும் பொன் வண்ணமும் இணைந்த புரட்சிக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

ஹிந்துக்களும், முஸ்லீம்களும் இணைந்து படைகளில் பயிற்சி பெற்றார்கள். ''சுதந்திரம்—தாய் நாட்டின் சுதந்திரம். அது ஒன்றே நம்முடைய குறிக்கோள்'' என்று டில்லிப் பாதுஷா மக்களுக்குக் கூறிக் கொண்டிருந்தார். யானை மீது ஊர்வலமாகச் சென்று நேரடியாகவே மக்களிடம் சுதந்திர உணர்வை ஊட்டினார்.

ஆயுதப் பயிற்சியும், திறமையும், தாய்நாட்டின் மீது மாறாத பக்தியும்

கொண்ட வீரர்கள், ஆங்கிலப் படையுடன் மோதப்புறப்பட்டனர். தினமும் எதிரிகளின் படைகளைச் சேதப்படுத்தினர்.

''ஜூன் மாதம் 20 ஆம் தேதியன்று கலகக்காரர்கள் ஆங்கிலேயரின் படையைக் கதிகலங்க அடித்து, பின் வாங்கச் செய்தார்கள்'' என்று இந்திய வரலாறு கூறுகிறது.

ஜூலை 2 ஆம் தேதி, ரோஹில் கண்டு வீரர் படையும், அதனைத் தலைமை தாங்கி வந்த பகத்கான் என்னும் புகழ் பெற்ற வீரனும், புரட்சிக்காரர்களோடு இணைந்து, ஆங்கிலப் படையை அழிக்கத் துவங்கினர்.

வெற்றியோடு டில்லியில் தங்கியிருந்தது பகத்கானின் தலைமையிலான புரட்சிப் படை.

பாதுஷாவின் 'டில்லிப் படையை' அவரது மகன் இளவரசர் மிர்ஸா மொகல் தலைமை ஏற்று நடத்தி வந்தார். ஆனால், கொள்ளையடிப்பதில் விருப்பம் கொண்ட இளவரசரின் போக்கு, பொதுமக்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே சிலர், பாதுஷாவிடம் சென்று, புகார் கூறினார்கள். பாதுஷா தன் மகனாயிற்றே என்று பாசத்தால் அறிவிழந்து போகவில்லை. உண்மையான, சுதந்திர உணர்வு உள்ள பாதுஷா, உடனடியாக, தமது மகனை, படைத் தலைவன் பதவியை விட்டு விலக்கி, சிறந்த தலைவனான பகத்கானிடமே டில்லிப் படையின் தலைமைப் பொறுப்பையும் ஒப்படைத்தார். பகத்கானின் தலைமையை ஏற்ற படை வீரர்கள், உற்சாக ஆரவாரம் செய்தார்கள். வீரர்களுக்கும், பொது மக்களுக்கும் ஆயுதங்களை அளித்த பகதூர் ஷா, வெற்றி பெற்று இனிப்பான சேதி சொல்ல வேண்டுமென்று வாழ்த்தி, அவர்களுக்கெல்லாம் இனிப்பு வகைகளை வழங்கினார்.

பகத்கானின் புரட்சிப் படையிலே ஐம்பதாயிரம் போர் வீரர்கள் இருந்தார்கள். ஆங்கிலேயரின் படையிலே, மிகுந்த போர்ப் பயிற்சிகள் பெற்ற சீக்கியர்களும், கூர்க்காக்களும் 2,000 க்கும் மேல் இருந்தனர்.

டில்லி பாதுஷா பகதூர் ஷாவுக்கு போர் செய்த அனுபவமும் இல்லை, மேலும் அவர் வயது முதிர்ந்தவர். எனினும் ஆங்கிலேயர் இந்திய மண்ணில் காலூன்றி விடக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்ததால், அதற்கான முயற்சிகளை, தாமே செய்வதில் முனைந்தார்.

தனித்தனியாக இருந்த பல சமஸ்தானங்களைத் தன்னோடு இணைந்து, வெள்ளையரை விரட்டும் பணியில் ஈடுபட அழைப்பு விடுத்தார்.

தமது கைப்பட சுதேச மன்னர்களுக்கு, ஓலை அனுப்பினார். ஜோத்பூர், பெஷாவர், ஜெய்ப்பூர் முதலிய சமஸ்தான மன்னர்களைக் குதிரை வீரர்கள் மூலம் ஓலை சென்றடைந்தது.

பலவிதப் படைகளினால் நன்மை இருந்தது போலவே ஒரு தீமையும் ஏற்படத் துவங்கியது. வெற்றி வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம், ''தங்கள் படையால்தான் வெற்றி கிட்டியது'' என்று ஒவ்வொரு படையும் மார் தட்டிக் கொண்டன. இதனால் வாய்ச் சண்டை, கைச்சண்டையாக மாறத் துவங்கின! இவைகளையெல்லாம் கவனித்து வந்த தளபதி பகத்கான் ஒவ்வொரு படையையும் தனித்தனி இடங்களில் தங்கச் செய்தார். பல ஆயிரக்கணக்கான வீரர்களையும் கட்டிக்காத்து, நடத்தி வந்த பகத்கானின் மேல், வெள்ளையரும் அச்சத்தோடுதான் கண்காணித்து வந்தனர்.

துரோக எண்ணத்தையும் உட்பகையையும் வளர்த்து தந்திரமாகப் பிரிப்பதிலே திறமை மிக்கவர்களான ஆங்கில அதிகாரிகள், ஒரு திட்டம் தீட்டினார்கள். அவர்களின் திட்டத்துக்குத் துணையாக, பணத்தாசை பிடித்த மிர்ஸா இலாஹி பக்ஷி இருந்தான்.

பகதூர்ஷாவை எப்படியேனும் ஆட்சி பீடத்திலிருந்து இறக்கிவிட்டால், மிகுந்த பொன்னும் பொருளும் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறினார்கள். மிர்ஸா இலாஹி பக்ஷி பொன்னிலும் பொருளிலும் மயங்கி, அயலானிடம், தமது சொந்த நாட்டு மன்னனையே குறை கூறினான். பின்பு, டில்லி பாதுஷாவின் அரண்மனைக்குச்

சென்றான்.

"ஆலம்பனா! நம் அரசர் வயது முதிர்ந்துவிட்டார். படைகளின் தலைமைக்கு அவரால் பொறுப்பு ஏற்க இயலவில்லை. அப்படி இருக்க இவ்வளவு பெரிய படையை இங்கே வைத்திருப்பானேன். யோசித்தீர்களா?" என்று பாதுஷாவின் பட்டத்து அரசியிடம் சென்று கூறினான்.

நயவஞ்சகமான மிர்ஸாவின் பேச்சை, அதன் பொருளை, பாவம், அரசி உணர்ந்து கொள்ளவில்லை. ஆயினும்,

"மிர்ஸா மன்னர் வயது காரணமாகத்தளர்ந்துபோயிருப்பதுஉண்மைதான். ஆனால், படையைத் தலைமை தாங்கி நடத்தும் பகத்கான் மிகுந்த திறமைசாலி ஆயிற்றே! அவனுக்குக் கீழே இன்னும் பல வீரத் தலைவர்களும் உள்ளனர். நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று மறுமொழி கூறினாள்.

ஆங்கிலேயரின் படையொன்று ஜெனரல் வில்சனின் தலைமையில், புரட்சிப் படையோடு சமர் செய்யப் புறப்பட்டது. டில்லிக்குள் படை புகுந்து, புரட்சி வீரர்களோடு மோதியது. துப்பாக்கிகள் வெடித்தன. புரட்சி வீரர்களும், ஆங்கிலவீரர்களும், டில்லி மாநகரின் வீதிகளிலே, குருதி கொப்பளிக்க வீழ்ந்து இறந்தனர்.

பாதுஷா மிகுந்த கவலையோடு, "அல்லா, அல்லா" என்று அல்லாவைத் தொழுது கொண்டிருந்தார். காஷ்மீர வாசலையும் உடைத்துக் கொண்டு பீரங்கிகள் சகிதமாக ஆங்கிலேயரின் படை உள்ளே புகுந்தது. கோட்டைக்குள், ஏணிகள் வைத்து இறங்கியவர் பலர்.

கர்னல் காம்பெல், டில்லியிலிருந்த ஜும்மா மசூதியைப் படையுடன் சென்று முற்றுகையிட்டார். மசூதிக்குள் ஆயிரக்கணக்கான முஸ்லீம் வீரர்கள் வாளும், வில்லும் ஏந்தி நின்றனர். கொடூரமான சண்டை மசூதிக்குள்ளே நடந்தது. இரத்த ஆறு பெருகி ஓடியது. ஆனால், அந்தோ, துப்பாக்கியின் குண்டுகளுக்குப் பலியான வீரர்கள் எண்ணிலடங்காதவர்! சுதந்திரத்துக்காகவே உயிர் விட்ட அந்த வீரர்களின் உடல்களின் மீது நின்று வெற்றிக் குரல் எழுப்பியது ஆங்கிலப் படை. வெற்றி பெறும் வாய்ப்பு கை நழுவிப் போகும் இந்த வேளையில் பகத்கான், பாதுஷாவைக் கண்டு, வேண்டிக் கொண்டான்.

"அரசே, உயிர் தப்புங்கள். இனி மேலும் இங்கே தாங்கள் தங்கியிருக்க வேண்டாம்" என்று கெஞ்சினான்.

என்ன காரணம்?


"ஏண்டா... கோபு அழறான்?"

"அக்கா செய்த பொரி விளங்காய் உருண்டையை எடுத்து வீசினேன்.... அதை கோபு...கிரிக்கெட் பேட்டாலே தடுக்கறதுக்காக அடிச்சான்!"

"அதுக்குக் கோபு ஏன் அழணும்?"

"பேட் இரண்டா... உடைஞ்சு போச்சே... அதுக்காக அழறான்!"

— ஜி. காமராஜன்.



அவனுடைய அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்ட பாதுஷாவை, சிறிய படையோடு, கிராமத்தில் தங்கியிருக்கச் செய்ய, பகத்கான் திட்டமிட்டிருந்தான். ஆனல், மிர்ஸா, ஆங்கில சேனுதிபதி கேட்டுக் கொண்டதற்கிணங்க, பாதுஷாவை டில்லியிலேயே இருக்குமாறு வேண்டிக்கொண்டான். பாதுஷாவும் அவனுடைய பொய் வார்த்தைகளில் ஏமாந்து போனர். பகத்கான், தம்மைத் தொடருமாறு அரசரை எவ்வளவு வேண்டியும், அவர் வராது போகவே, பகத்கான் சென்றுவிட்டான்.

பாதுஷா பகதூர் ஷாவையும் அவரது மைந்தர்களையும் ஹுமாயூன் கல்லறையிலே ஒளிந்திருக்கச் செய்த மிர்ஸா, ஆங்கிலத் தளபதியிடம் ஓடினன். பகதூர் ஷாவும், அவர் பிள்ளைகளும் ஒளிந்திருக்கும் இடத்தைக் கூறினன்.

படைகளுடன் தளபதியே வந்து, பாதுஷாவையும், அவரது பட்டத்து அரசியையும், பகத்கானையும் கைது செய்தனர். 135 நாட்களுக்குப் பிறகு டில்லிக் கோட்டையிலே ஆங்கிலேயரின் கொடி பறந்தது.

பகத்கானும் அவனது வீரர்களும் தப்பி, காட்டுக்குள் ஓடி மறைந்தார்கள். செங்கோட்டையில் சிறையிலடைப்பட்டுக் கிடந்தார்கள் பாதுஷாவும் அரசியும். அவர்களுடைய இரு பிள்ளைகளையும், பேரனையும், மிருகங்களைப் போலக் கூண்டில் அடைத்து வீதி வலம் வரச் செய்தனர். பின்பு ஒவ்வொருவராகத் துப்பாக்கியால் சுடப்பட்டனர். துண்டிக்கப்பட்ட அவர்களது தலைகளைப் பாதுஷாவிடம் காட்டிக் கொக்கரித்தனர்.

பாதுஷா மனம் கலங்கினர். ஆங்கிலேயரை எதிர்த்த இந்தியர்களைப் பழிக்குப் பழி வாங்குவது போல, எதிர்ப்பட்ட ஒன்றுமறியாத மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தார்கள் ஆங்கிலேயர்கள். சுதந்திரத்திற்காகப் போராடிய பாதுஷா ரங்கூன் சிறையிலே அடைக்கப்பட்டார். 1863ம் ஆண்டு, தேச-விடுதலைக்குப் போராடிய அந்தவீர மன்னர், அன்னிய மண்ணிலே உயிர் துறந்தார்.

தொற்று நோய் பரவட்டும்



சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த விழா ஒன்றில் நமது லோக்சபாத் தலைவர் பல்ராம் ஜாக்கர் பேசினர். அப்போது அவர், ஒரு குறிப்பிட்ட தொற்றுநோய் எல்லாருக்கும் விரைவில் பரவ வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அந்த நோயைத் தடுப்பதற்கு, தடுப்பு மருந்து எதையும் மருத்துவர்கள் கண்டு பிடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

கேட்பதற்கு வியப்பாக இருக்கிறதல்லவா? அவர் குறிப்பிட்டது நகைச்சுவை என்னும் தொற்றுநோய்தான்! அவர் கலந்து கொண்ட விழாவோ அகில உலக நகைச்சுவை மாநாட்டு விழா! கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கும் இந்த நோய் விரைந்து தொற்ற வேண்டுமென்பதே என் அவா.

— எஸ். அருண் (219),
காரைக்குடி.



அவன் எங்கே போகிறான்?

மகேசுவரி

அம்மா அவசரம் அவசரமாகச் சமையல் வேலையைச் செய்து கொண்டிருந்தாள்.

இதற்குள் அங்கு வந்த முரளி, "அம்மா! எனக்கு நேரமாகிவிட்டது. சீக்கிரம் சாப்பாடு போடு" என்று அவசரப்படுத்தினான்.

"மணி எட்டுத்தானே ஆகிறது! இதற்குள் என்னடா முரளி அவசரம்? எட்டரை மணிக்குச் சாப்பிட்டால் போதாதா? ஒன்பதரை மணிக்குத் தானே 'பெல்' அடிக்கிறார்கள்?" என்றாள் அம்மா, டிபன் டப்பாக்களில் சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டே.

"அம்மா! முரளி அங்கே போய் 'பால்' விளையாடுகிறானாம்.... என் கிளாஸ் பசங்க சொன்னாங்க" என்றான் வாசு, தன் புத்தகங்களையெல்லாம் எடுத்து பைக்குள் அடுக்கி வைத்துக் கொண்டே.

"டேய்! ரொம்பத் தெரிந்த மாதிரி சொல்றியே! நான் விளையாடுறதைப் பார்த்தியா?" என்று வாசுவைக் கேட்டான் முரளி.

இதற்குள் அம்மா, "முரளி! தட்டிலே சாதம் போட்டாச்சு. வந்து சாப்பிடு. அவனை ஏன் மிரட்டுகிறாய்?" என்றாள்.

பரக்கப் பரக்க அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடிவிட்டான் முரளி.

எட்டரை மணிக்குத்தான் சாப்பிட வந்தான் வாசு. அவனுடன் கூடவே அவனுடைய அப்பாவும் வந்து உட்கார்ந்தார்.

"ஏண்டா வாசு! இரண்டு பேரும் ஒரே பள்ளிக்கூடத்திலேதானே படிக்கிறீர்கள்? முரளிக்கு மட்டும் என்ன அவசரம்?" என்று கேட்டார் அப்பா.

"எனக்குத் தெரியாது அப்பா. அவனோட கிளாஸ் பசங்களெல்லாம் எங்கேயோ ஒண்ணாகச் சேர்ந்து விளையாடுகிறார்கள் போலிருக்கிறது" என்றான் வாசு.

"காலை வேளையில் என்னடா விளையாட்டு?"

"அதென்னவோ! என்னைக் கேட்டால்...." வாய் நிறையச் சாதத்துடன் பேசினான் வாசு.

"நானே கொஞ்ச நாளாக உங்களிடம் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தேன். முரளி ஒரு மாதமாகவே இப்படித்தான் காலையில் ரொம்பச் சீக்கிரமாகப் போய்விடுகிறான். அப்படியென்ன விளையாட்டு ஆசை? நீங்க இதைப் பற்றிப் பள்ளிக்கூடத்திலே விசாரித்துவிட்டு வாங்க" என்றாள் அம்மா, அப்பாவின் இலையில் ரசத்தை விட்டுக் கொண்டே.

"விளையாடினால் விளையாடிவிட்டுப் போகட்டுமே! படிப்பிலும் முதலாக வருகிறானே, நமக்கு வேண்டியது அது தானே!" என்றார் அப்பா.

"வாசுவுக்குக் கணக்கே வரமாட்டேன்கிறது. கொஞ்சம் சொல்லிக் கொடுடா என்றால், கேட்பதில்லை. வரவர ரொம்ப மோசமாய்ப் போய் விட்டான்" என்று கூறினாள் அம்மா.

"நீயும் படித்தவள்தானே? சொல்லிக் கொடுப்பதுதானே?"

"பாக்கிப் பாடமெல்லாம் சொல்லிக் கொடுத்து விடுகிறேன். இந்தப் புது மாதிரிக் கணக்கு மட்டும் எனக்குப் புரியவேயில்லை!"

அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டிருக்கட்டும் என்று வாசு சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான்.

* * * * *

முரளியின் வகுப்பு ஆசிரியரை பஸ் ஸ்டாண்டில் சந்தித்தார் அப்பா. அவரிடம் முரளியைப் பற்றி விசாரித்தார்.

"முரளியைப் பற்றி நீங்கள் கவலைப்

படவே தேவையில்லை சார். அவன் தான் என் வகுப்பில் முதல் ராங்க்'' என்று பெருமையாகச் சொன்னார் ஆசிரியர்.

''படிப்பில் முரளி முதல் மாணவனாக இருக்கலாம் சார். ஒழுக்கத்தில்? தினமும் காலையில் எட்டு மணிக்கே சாப்பிட்டுவிட்டுப் போய் விடுகிறான். எங்கே போகிறானோ, தெரியவில்லை'' முரளியின் அப்பாவுக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது என்பதை ஆசிரியர் புரிந்து கொண்டார்.

''சின்னப் பையன்தானே? எங்கேயாவது கும்பல் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறானோ என்னமோ! நான் விசாரிக்கிறேன். நீங்களும் அக்கம் பக்கத்திலுள்ள பையன்களிடம் கேட்டுப் பாருங்கள்'' என்ற ஆசிரியர், அவர் செல்ல வேண்டிய பஸ் வந்துவிடவே விரைந்து போய் அதில் ஏறிக் கொண்டார்.

* * * * *

மறுநாள் தன் அலுவலகத்திற்குப் போகும்போது அந்த விளையாட்டுத் திடல் பக்கம் போய்ப் பார்த்தார் முரளியின் அப்பா.

அங்கே பள்ளிக்கூடத்துப் பக்கமே போக விரும்பாத சில பையன்கள் தான் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையில் முரளியைக் காணவில்லை. நிம்மதியாக இருந்தது அவருக்கு. பேசாமல் அலுவலகத்திற்குப் போய்விட்டார்.

* * * * *

அதற்கு அடுத்த நாளும் முரளி எட்டு மணிக்கே சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டான்.

''முரளி! இந்த ஒரு கணக்கை மட்டுமாவது சொல்லிக் கொடுடா'' என்று கெஞ்சினான் வாசு.

''அப்பாவிடம் சொல்லிக்கோடா'' என்றான் முரளி.

''அப்பாவுக்கு இந்தக் கணக்குப் புரியவில்லையாம்டா முரளி! ப்ளீஸ், நாளைக்கு எனக்கு 'டெஸ்ட்'டா.''

''நாளைக்குத்தானே டெஸ்ட்! சாயங்காலம் வந்து சொல்லித் தருகிறேன். இப்ப என்னைத் தொந்திரவு செய்யாதே'' பையை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான் முரளி.

சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு, அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து சென்றார் அப்பா.

முரளி தெருமுனை வந்ததும் திரும்பினான்.

அங்கே ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரர் இவனைக் கண்டதும், ''வா, ராஜா'' என்றழைத்தபடியே முரளியின் கையி



லிருந்த பையை வாங்கி ரிக்ஷாவில் வைத்தார். முரளி அந்த ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்துகொண்டான். உடனே அந்த ரிக்ஷாக்காரர் ரிக்ஷாவை வேகமாக ஓட்டிக் கொண்டு சென்றார்.

இரண்டு தெருக்களைக் கடந்து ஒரு சந்துக்குள் நுழைந்தார். அங்கே நிறையக் குடிசைகள் இருக்கின்றன என்பது முரளியின் அப்பாவுக்குத் தெரியும். அந்தக் குடிசைப் பகுதியில் முரளிக்கு என்ன வேலை? என்பதுதான் அவருக்குப்புரியவில்லை. இருந்தாலும் வேகமாக நடந்தார்.

சைக்கிள் ரிக்ஷா நுழைந்த அதே சந்துக்குள் அவரும் நுழைந்தார். கொஞ்ச தூரம் நடந்த பிறகு வலது கைப்பக்கம் திரும்பினார்.

அங்கே அவர் கண்ட காட்சி!

அங்கே ஒரு குட்டிக் கருமாரியம்மன் கோவில் இருந்தது.

அதன் எதிரில் அரைகுறையாக ஒரு கீற்றுப் பந்தல்.

அதில் ஏழெட்டுப் பையன்கள் சிலேட், புத்தகங்களுடன் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு முரளி பாடம்சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தான்.

அப்பாவின் கண்களில் கண்ணீர் தளும்பிவிட்டது.

தன் மகன் கெட்ட பழக்கங்கள் எதிலும் ஈடுபடவில்லை என்கிற மன நிறைவு ஒரு பக்கம். வயதில் மிகச் சின்னவனாக இருந்தும் பெரியவர்கள் கூடச் செய்ய முன்வராத ஒரு நல்ல காரியத்தைச் செய்து வருகிறான் என்பதால் ஏற்பட்ட பெருமிதம் ஒரு பக்கம். உற்சாகமாக வீட்டை நோக்கி நடந்தார்.

* * * * *

அன்றும், முரளி எட்டு மணிக்கே சாப்பிட்டுவிட்டு அவசரம் அவசரமாகப் புறப்பட்டபோது எதிரில் வந்து நின்றார் அப்பா.


''முரளி! நீ தினமும் எங்கே போகிறாய் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. எனக்கு அதில் ரொம்பச் சந்தோஷம். இருந்தாலும் ஒரு சின்ன சந்தேகம்'' என்றார்.


ஆச்சர்யமாக அப்பாவின் முகத்தைப் பார்த்தான் முரளி.

''அந்தப் பையன்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுக்கிறாயே முரளி, கூடப் பிறந்த உன் தம்பி வாசுவுக்குச் சொல்லிக் கொடுக்க மட்டும் உனக்கு விருப்பமிருப்பதில்லையே, அது ஏண்டா?''

''விருப்பமில்லாமல் இல்லையப்பா. வாசுவுக்குச் சொல்லிக் கொடுக்க அம்மாவும் நீங்களும் இருக்கிறீர்கள். ஆனால், அந்தப் பையன்களின் அம்மா அப்பாவுக்கு எழுதப் படிக்கவே தெரியாதே! பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுப்பதும் அந்தப் பையன்களுக்குப் போதவில்லை. அதனால்தான், ஏதோ என்னால் முடிந்ததை.....'' என்று இழுத்தான் முரளி.

அப்பா மனம் கசிந்து நின்றார்!







(வி)சித்திரச் செய்திகள்




88 அடி உயரப் படம்!

இந்திராகாந்தி நினைவு தினத்தையொட்டி, புது டெல்லி போட் கிளப் மைதானத்தில் அவரது முழு உருவ—பலகையில் வரையப்பட்ட—'கட் அவுட்' படம் வைக்கப்பட்டது. 88 அடி உயரம் உள்ளது. இதைவிடப் பெரிய கட் அவுட் இதுவரை உலகில் எங்கும் வைக்கப்பட்டது இல்லை!

இந்த கட் அவுட் படத்திற்கு 4 ஓவியர்கள் இரவு பகலாக 12 நாட்கள் வரைந்து வர்ணம் பூசினார்கள்!

90 அடிகள் இரும்புச் சட்டத்தில் அது பொருத்தப்பட்டது!

மேதையின் மூளை



காலஞ்சென்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன், தம்முடைய மூளையை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவதற்காக விட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய மூளையின் சில துணுக்குகளை கலிபோர்னியா பல்கலைகழகப் பேராசிரியை மரியன் டைமண்ட் சமீபத்தில் நுணுக்கமாக ஆராய்ந்தார்.

ஒரு மேதையின் மூளையின் அமைப்பே மற்ற சாதாரண மனிதர்களின் மூளையின் அமைப்பிலிருந்து வேறுபட்டிருக்கிறது என்று இந்த ஆராய்சியிலிருந்து கண்டு பிடித்திருக்கிறார்.

மேதைத்தனம் என்பது மூளையின் இயற்கை அமைப்பினால் வருவது என்கிறார் அவர்!

வேப்பிலை மருந்து

வேப்பிலையிலிருந்து இயற்கையான பூச்சி கொல்லி மருந்து ஒன்றை ஐக்கிய அமெரிக்க விவசாயத் துறை விஞ்ஞானிகள் தயாரித்திருக்கிறார்கள்.

பயிர்களை அழிக்கும் வண்டுகள், புழுக்கள், தத்துப் பூச்சிகள் முதலிய 80 க்கு மேற்பட்ட பூச்சிகளை இந்த 'மருந்து' அழிக்கிறது.



குறைந்த செலவில் சோதனை!



குழந்தையின் உடலில் வைட்டமின் A குறைந்திருக்கிறதா, அதனால் கண் நோய் ஏற்படுமா என்பதைக் கண்டறிய குறைந்தசெலவு சோதனை முறை ஒன்றை இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எப்படி?

குழந்தைகளின் ஒரு துளி கண்ணீரை வடி தாளில் ஒற்றி எடுத்து மைக்ராஸ்கோப்பில் வைத்து ஆராய்ந்தால், அதில் 'காப்லெட்' எனப்படும் செல்கள் சாதாரண அளவில் உள்ளனவா, அல்லது குறைவான அளவில் உள்ளனவா என்பது தெரியும்.


குறைவாகக் காணப்பட்டால் A வைட்டமின் குழந்தையின் உடலில் குறைவாக இருக்கிறது; கண் நோய் ஏற்படும் என்பது தெரியும்.

இந்தத் தகவலை வாஷிங்டனில் உள்ள ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஆல்பிரட் ஸோம்மா என்பவர் தெரிவித்திருக்கிறார்.

கழுதைக் கல்யாணம்!

கழுதைக்கும் கழுதைக்கும் கல்யாணம் செய்து வைத்தால் மழை பெய்யுமா? பெய்தது!

காமராஜ் மாவட்டம் திருத்தங்கலில் சில காலமாக மழை இல்லை. வறட்சியால் மக்கள் தவித்துக் கொண்டிருந்தனர்.



ஆண் கழுதைக்கும்பெண் கழுதைக்கும் கல்யாணம் செய்து வைத்தால் மழை பெய்யும் என்று பொது மக்கள் அபிப்பிராயப்பட்டனர். ஒரு ஞாயிற்றுக் கிழமையென்று ஓர் ஆண் கழுதையையும் ஒரு பெண் கழுதையையும் கொண்டு வந்து வண்ணப் பட்டாடைகள் அணிவித்து ஊர்வலமாக மேள தாளத்துடன் அழைத்துச் சென்று கல்யாணம் செய்து வைத்தனர்.

கல்யாண விருந்தாகக் கஞ்சி வழங்கப்பட்டது.

அன்று மாலை அங்கே மழை பெய்தது! 105 மி.மீ. மழை!

கெடாத ஓலைகள்!

தென்னை ஓலைக் குடிசைகளுக்கு, ஆண்டு தோறும் புது ஓலைகள் வேய வேண்டிய கவலை இனி ஏற்படாது. துத்தநாகக் கரைசலில் ஓலைகளை நனைத்துப் பக்குவப்படுத்தி, குடிசைகளுக்கு வேய்ந்தால், 4 ஆண்டுகளுக்கு அந்த ஓலைகள் கெட்டுப்போவதில்லை என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எல்லாம் நம் இந்திய விஞ்ஞானிகளின் சாதனைதான்!



ஒரு குட்டி ரோபாட் கடத்தப்படுகிறது!

எம். சோலையன்



முயல் முறுக்கார் அந்தக் கணக்கைப் போட்டுப் போட்டுப் பார்த்தார். விடை சரியாக வரவே இல்லை!

இதற்குள் அண்ணு முயல், "அப்பா, நீங்க நேற்றுப் போட்டுத் தந்த கணக்கெல்லாம் தப்பாம்! வாத்தியாரிடம் நல்லா அடி வாங்கினேம்!" என்று புகார் செய்தான்.

உடனே தம்பி முயலும், "ஆமாம் அப்பா! நீங்கள் எழுதித் தந்த கட்டுரையிலும் ஏகப்பட்ட பிழைகளாம்!" என்று ஒத்தூதினன்.

முறுக்காருக்குச் சங்கடமாகப் போய்விட்டது. ஒரு நிமிடம் யோசனையில் ஆழ்ந்தார்.

பிறகு —

"பிள்ளைகளா, பொறுத்து இருங்கள்! நண்பர் நரியாரைப் பார்த்து வருகிறேன்!" என்று கிளம்பிப் போனர்.

நரியார் பெரும் அறிவியல் அறிஞர். இதற்கு அவர் ஏதேனும் வழி சொல்லி உதவலாம்.

முயல் முறுக்கார் வீடு திரும்பிய போது தனியாக வரவில்லை. கூடவே ஒரு குட்டி ரோபாட்டும் வந்தது! நரியாரின் கண்டுபிடிப்பு அந்த ரோபாட்

"பிள்ளைகளா, கணக்கு கணக்கு என்று இனி என்னைத் தொல்லை செய்யாதீர்கள்! உங்கள் படிப்பு விஷயங்களை எல்லாம் இந்தக் குட்டி ரோபாட் கவனித்துக் கொள்வான். புத்தக மூட்டைகளைச் சுமந்து கொண்டு உங்களைப் பள்ளிக்கூடத்திற்குக் கூட்டிப் போவான். வீட்டில் உங்களுக்கு வேண்டிய வேலைகளையும் செய்து முடிப்பான்!" என்று அடுக்கினர் முறுக்கார்.

"ஹி... ஹி... வணக்கம்! என் பெயர் பக்கோடா!" என்று சிரித்துக் கொண்டே சொன்னது குட்டி ரோபாட்.

முயல் அண்ணுவிற்கும், முயல் தம்பிக்கும் வியப்பான வியப்பு! ரோபாட் இனிமையாகப் பேசுகிறதே!

அப்போது பக்கோடா டிஸ்கோ நடனம் ஆடிக் காட்டியது. அது மட்டுமா? "வெள்ளை முயல்! லலலா! பிள்ளை முயல்! லலலா!" என்று பாட்டு ஒன்றும் பாடிக் காட்டியது!

அடுத்து, "ஹூம்! வீட்டுக்கணக்கை எடுங்கள்! போட்டுக் காட்டுகிறேன்!" என்று கம்பீரமாகப் பேசியது.

முயல் சகோதரர்களுக்குக் குட்டி ரோபாட் பக்கோடாவை நிரம்பவும் பிடித்திருந்தது.

மறுநாள்!

முயல் சகோதரர்களின் புத்தக மூட்டைகளைத் தன் தோளில் பக்கோடா மாட்டிக் கொண்டது. இருவரையும் கையைப் பிடித்துப் பள்ளிக்கு அழைத்துச் சென்றது.

அவ்வேளையில் எதிர்த்தாற்போல் ஓநாய் ஓமப்பொடியார் காரில் வந்து கொண்டிருந்தார். அவருடைய பொல்லாத பார்வையில் பக்கோடா பட்டு விட்டது!

வந்ததே ஆபத்து! காரை நிறுத்தி விட்டு ஓமப்பொடியார் கீழே இறங்கி வந்தார். முயல் சகோதரர்களைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டார். 'சரசர' வென்று பக்கோடாவை மட்டும் இழுத்துக் கொண்டு தம் காருக்கு ஓடினர்.

உடனே பக்கோடா, "ஐயோ, என்னைக் கடத்திக் கொண்டு போகிறன்! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று உரத்த குரலில் கத்தியது.

ஆனல், அந்தச் சாலையில் அவ்வேளையில் மிருக நடமாட்டம் ஏதுமில்லை!

பக்கோடாவைக் காருக்குள் தள்ளிக் கதவைச் சாத்தினர் ஓமப்பொடியார். அதற்குள் கீழே விழுந்த முயல் சகோதரர்கள் எழுந்து நின்று,

"ஐயோ! ஓநாய் ஓமப்பொடியன் ரோபாட்டைப் பிடிச்சுப் போறானே! ரோபாட்டைப் பிடிச்சுப் போறானே! யாராவது உதவிக்கு வாருங்களேன்!" என்று கத்தினார்கள்.

ஆனால் ஓநாயரின் கார் 'டர்'ரென்று புகையைக் கிளப்பிக் கொண்டு போயே போய்விட்டது!

தொடர்ந்து பக்கோடாவும் காருக்குள் இருந்தபடி அலறிக் கொண்டிருந்தது. பட்டென்று அதன் குரல் வளையைப் பிடித்துப் பேச முடியாதபடி பாட்டரி இணைப்பை வெட்டிவிட்டார் ஓமப்பொடியார்! பக்கோடாவால் அப்புறம் கத்த முடியவில்லை!

பிறகு என்ன ஆயிற்று?

அடுத்த நகரத்தில் பெரிய ஹோட்டல் ஒன்றைக் குரங்கு குறும்பார் நடத்தி வந்தார். அவரிடம் குட்டி ரோபாட் பக்கோடாவை நல்ல விலைக்கு விற்று விட்டார் ஓமப்பொடியார்.

குறும்பாரின் ஹோட்டலில் பக்கோடா, சப்ளை செய்பவராகப் பணியாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது!

ஒருநாள் அந்த ஹோட்டலுக்கு மிகுந்த பசியுடன் வந்தார் இன்ஸ்பெக்டர் கழுதையார்.

"சாப்பிடுவதற்கு என்ன இருக்கிறது? மெனுவைக் கொண்டு வா!" என்று அதட்டலாகக் கேட்டார் கழுதையார்.


உடனே பக்கோடா ஒரு தாளை நீட்டியது. அலட்சியமாக அதை வாங்கிப் படித்த கழுதையாருக்குத் தூக்கி வாரிப் போட்டது!

ஏனென்றால், அது மெனு அல்ல! அது ஒரு கருணை மனு!

மெனு என்றால், 'லட்டு, ஜாங்கிரி, பாதாங்கீர், ஹல்வா....' போன்ற உணவு வகைகளின் பட்டியல் அல்லவா இருக்கும்? ஆனால் பக்கோடா நீட்டிய தாளில் ஒரு கடிதம் இருந்தது!

'ஐயா,

நான் முயல் முறுக்காரின் வேலை



யாள். என்னை ஓநாய் ஓமப்பொடியார் கடத்தி வந்தார். கடத்தியது வெளிப் படாமல் இருக்க என்னை ஊமையாக்கி விட்டார். இங்கே ஹோட்டல் அதிபர் குறும்பரிடம் விற்றுவிட்டுப் போய்விட் டார். தயவு செய்து மீண்டும் என்னைப் பேச வையுங்கள். என்னை விடுவித்து முறுக்காரிடம் அனுப்புங்கள்.

இப்படிக்கு,
குட்டி ரோபாட் பக்கோடா.

கடிதத்தைப் படித்த கழுதையாரின் முகம் சிவந்தது வேகமாக எழுந்து சென்று ஹோட்டல் முதலாளி குரங்கு குறும்பரை மிரட்டினார். குறும்பர் நடந் ததை ஒப்புக் கொண்டார். அவர் கொடுத்த தகவலின்படி ஓநாய் ஓமப் பொடியார் கைது செய்யப்பட்டார்,

பக்கோடாவை, ரோபாட் டாக்டரி டம் (என்ஜினியரிடம்) கொண்டு போனார் கழுதையார். பாட்டரி இணைப் பில் ஏற்பட்டிருந்த கோளாறு சரி செய் யப்பட்டது! பக்கோடாவிற்குப் பேசுந் திறன் மீண்டும் வந்துவிட்டது! இன்ஸ் பெக்டர் கழுதையாரே பக்கோடாவை முயல் முறுக்கார் வீட்டில் கொண்டு போய்விட்டார்.

முயல் சகோதரர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி! இன்ஸ்பெக்டர் கழுதை யாருக்குக் காகிதப் பாயாசம் அளித்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் கள்.

கொட்டுது, கொட்டுது குழாயிலே தண்ணீர்!



புகைப்படம்: எம். நடராஜன்

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431542)

Editor: K. Rajendran



பெஞ்சமின் ஃப்ராங்க்லின்

தோற்றம்: ஜனவரி 1706 மறைவு: 1790

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

